# தினபூமி

thinaboomi.com


பூமி: 31 சுற்று: 163 வைகாசி 05

Regd. No.TRY/050/2023-2025 RNI Regn. No.61511/94

திருச்சி, திங்கள், மே 19, 2025

▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி

பக்கம் 8 ₹3.00

**இந்தியாவுக்கு போட்டியாக பாகிஸ்தானும் வெளிநாடுகளுக்கு அமைதிக்குழுவை அனுப்புகிறது**

...2-ம் பக்கம்


**அமர்நாத் யாத்திரை பக்தர்களுக்கு முழு பாதுகாப்பு வழங்கப்படும்: காஷ்மீர் முதல்வர் உமர் உறுதி**

...3-ம் பக்கம்

**துருவ் போராட்டம் வீண்: ராஜஸ்தானை வீழ்த்தி பஞ்சாப் அபார வெற்றி**

...6-ம் பக்கம்





சென்னையில் நேற்று நடைபெற்ற பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர் டி.உமாசங்கர் வெண்ணிலா ஆகியோரின் மகன் நவினேஷ்-நந்திதா கிருஷ்ணன் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடைகளை வழங்கி மணமக்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்தினார். உடன் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னிசெல்வம் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

### சுப்ரீம் கோர்ட்டிடம் ஜனாதிபதி கேள்வி எழுப்பிய விவகாரம்:

# 8 மாநில முதலமைச்சர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்

*** தீர்ப்பை சீர்குலைப்பதற்கு மத்திய அரசு முயற்சி**
*** அரசியலமைப்பை பாதுகாக்க முன் வாருங்கள்**

சென்னை, மே 19-

**கவர்னர்கள், ஜனாதிபதி மாநில மசோதாக்கள் மீது முடிவெடுக்க காலக்கெடு நிர்ணயிக்க முடியுமா என்று சுப்ரீம் கோர்ட்டிடம் ஜனாதிபதி திரௌபதி முர்மு கேள்விகள் எழுப்பிய விவகாரம் தொடர்பாக 8 மாநில முதல்வர்களுக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார். அதில் சுப்ரீம் கோர்ட் வழங்கிய தீர்ப்பை சீர்குலைக்க மத்திய பா.ஜ.க. அரசு முயற்சி செய்வதாக குற்றஞ்சாட்டிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அரசியலமைப்பை பாதுகாக்க முன் வாருங்கள் என 8 மாநில முதல்வர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.**

**எதிர்க்க வேண்டும்...**

இது தொடர்பாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், மேற்கு வங்காளம், கர்நாடகா, இமாச்சல் பிரதேசம், தெலங்கானா, கேரளா, ஜார்கண்ட், பஞ்சாப், ஜம்மு-காஷ்மீர் ஆகிய 8 மாநில முதல்வர்களுக்கு கடிதம் ஒன்றினை எழுதியுள்ளார். அதில், "சுப்ரீம் கோர்ட்டிடம் கேள்விகள் கேட்டு ஜனாதிபதி அனுப்பியுள்ள குறிப்பினை நாம் ஒன்றுபட்டு எதிர்க்க வேண்டும். நீதிமன்றத்தின் முன் நாம் அனைவரும் ஒருங்கிணைந்த சட்ட உத்தியை உருவாக்கி, அரசியல் அடிப்படைக் கட்டமைப்பைப் பாதுகாக்க வழிவகுத்திட வேண்டும். இந்த முக்கியமான பிரச்சினையில் மேற்குறிப்பிட்டுள்ள மாநில முதல்வர்களின் உடனடியான தனிப்பட்ட தலையீட்டை எதிர்நோக்குகிறேன். என்று முதல்வர் ஸ்டாலின் கோரியுள்ளார்.

**கேள்விக்குள்ளாக்க...**

அக்கடிதத்தின் முழு விவரம் வருமாறு: இந்தியக் ஜனாதிபதி, மத்திய அரசின் ஆலோசனையின் பேரில், கடந்த 13-5-2025 அன்று இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 143 பிரிவின்கீழ், சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி சுப்ரீம் கோர்ட்டிடம் முன் 14 கேள்விகளை எழுப்பி குறிப்பு ஒன்றினை அனுப்பியது தாங்கள் அறிந்த ஒன்று. இந்தக் குறிப்பு எந்த மாநிலத்தையும் அல்லது தீர்ப்பையும் குறிப்பாகக் குறிப்பிடவில்லை என்றாலும், தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு கவர்னருக்கு எதிராக தொடர்ந்த வழக்கில், சட்டம் மற்றும் அரசியலமைப்பின் விளக்கம் குறித்து சுப்ரீம் கோர்ட் வழங்கிய தீர்ப்பினைக் கேள்விக்குள்ளாக்குவதே இதன் நோக்கம்.

**தடுக்கும் வகையில்...**

தனது அரசாங்கத்தால் பெறப்பட்ட இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பு, தமிழ்நாட்டிற்கு மட்டுமல்லாமல் அனைத்து மாநிலங்களுக்கும் பொருந்தும் என்பதைக் குறிப்பிட்டுள்ள முதல்வர், இது மாநிலங்களுக்கும், மத்திய அரசுக்கும் இடையிலான கூட்டாட்சி அமைப்பையும், அதிகாரப் பகிர்வையும் நிலைநிறுத்துவதாக அமைந்துள்ளது. இதனால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில சட்டமன்றங்களால் இயற்றப்படும் சட்டங்கள், மத்திய அரசால் நியமிக்கப்படுபவரும், மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத நபருமான கவர்னரால் தடைபடுவதைத் திறம்படத் தடுக்கும் வகையில் உள்ளது.

**தேவையற்ற தாமதம்...**

பா.ஜ.க. தலைமையிலான மத்திய அரசு எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களின் செயல்பாட்டைத் தடுத்திட கவர்னர்களைப் பயன்படுத்திய விதத்தை நாம் அனைவரும் கண்டிருக்கிறோம். குறிப்பாக, சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்டு அனுப்பப்படும் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிப்பதில் தேவையற்ற தாமதத்தை கவர்னர்கள் ஏற்படுத்துகிறார்கள் உரிய அரசியலமைப்பு அல்லது சட்டக் காரணங்கள் இல்லாமல் அவற்றை நிறுத்தி வைக்கிறார்கள்.

**அரசியல்மயமாக்க....**

கவர்னரின் ஒப்புதலுக்காக அனுப்பப்படும் வழக்கமான கோப்புகள் மற்றும் அரசு உத்தரவுகளை நிறைவேற்றாமல் இருக்கிறார்கள். முக்கியமான பதவிகளுக்கான நியமனங்களில் தலையிடுகிறார்கள். கல்வி நிறுவனங்களை அரசியல்மயமாக்க பல்கலைக்கழக வேந்தர் பதவியை துஷ்பிரயோகம் செய்கிறார்கள். அரசியலமைப்பில் குறிப்பிடப்படாத சில விஷயங்களை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்தி கவர்னர்களால் இதைச் செய்ய முடிந்தது. அரசியலமைப்பு சட்டத்தை இயற்றிய பெருமக்கள், உயர் அரசியலமைப்பு பதவிகளை வகிப்பவர்கள் அரசியலமைப்பு ஒழுக்கத்தின்படி செயல்படுவார்கள் என்று நம்பினர்.

**சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு...**

இந்தச் சூழலில்தான், தமிழ்நாடு அரசு கவர்னருக்கு எதிராகத் தொடர்ந்த வழக்கில் சுப்ரீம் கோர்ட் ஒரு முக்கியமான தீர்ப்பை வழங்கியுள்ளது. அதன்படி

(i) மசோதாக்களைக் கையாளும் போது மாநில அமைச்சரவையின் உதவி மற்றும் ஆலோசனைக்கு கவர்னர் கட்டுப்படுகிறார்.

(ii) மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிப்பதை தாமதப்படுத்த கவர்னர் "வீட்டோ" அதிகாரத்தைப் பயன்படுத்த முடியாது.

(iii) ஒப்புதல் அளிப்பதை நிறுத்தி வைப்பதன் மூலமும், மசோதாக்களை அவைக்குத் திருப்பி அனுப்பாமல்

**(கடைசி பக்கம் பார்க்க)**

### ஐதராபாத்தில் பயங்கரம்:

# குடியிருப்பில் நிகழ்ந்த தீ விபத்தில் 17 பேர் பலி

**பிரதமர் மோடி இரங்கல் - நிவாரணம் அறிவிப்பு**

ஐதராபாத், மே 19-

**ஆந்திர மாநிலத்தில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க சார்மினார் அருகே குல்சார் பேர்ல்ஸ் குடியிருப்பில் நேற்று பயங்கர தீ விபத்து ஏற்பட்டதாக காலை 6.30 மணியளவில் தீயணைப்புத்துறையினருக்கு தகவல் கொடுக்கப்பட்டது. இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்புத்துறையினர் போராடி தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர்.**

இருப்பினும் இந்த தீயின் தாக்கத்தால் பலர் மயக்கமடைந்த நிலையில் மீட்கப்பட்டனர். பின்னர் பலத்த காயமடைந்த 20க்கும் மேற்பட்டோர் சிகிச்சைக்காக அருகிலுள்ள மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்லப்பட்டனர். மேலும் கட்டிடத்தில் சிக்கி உள்ள சிலரை மீட்கும் பணியில் தீயணைப்புத்துறையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த விபத்தில் முதற்கட்டமாக பெண்கள், குழந்தைகள் உள்பட 9 பேர் பரிதாபமாக தீயில் கருகி உயிரிழந்தனர். இதனையடுத்து தற்போது பலி எண்ணிக்கை மேலும் உயர்ந்துள்ளது.




இந்த நிலையில் ஐதராபாத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 17 பேர் பரிதாபமாக உயிரிழந்ததாக தகவல் வெளியாகி உள்ளது. மேலும் பலர் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது. இந்த தீவிபத்தில் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. மின்கசிவு காரணமாக இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று முதற்கட்ட விசாரணையில் தெரிகிறது.

முதல்வர் ரேவந்த் ரெட்டி, இந்த விபத்து குறித்து அதிர்ச்சியை வெளிப்படுத்தியதோடு, காயமடைந்தவர்களுக்கு உரிய சிகிச்சை வழங்கிட உத்தரவிட்டுள்ளதாகக் கூறினார். இந்த சம்பவம் குறித்து பிரதமர் மோடி வெளியிட்டுள்ள அறிக்கையில், ஐதராபாத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்தவர்கள் குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவித்து கொள்கிறேன். இந்த சம்பவம் மிகுந்த வேதனை அளிக்கிறது. தீ விபத்தில் காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய இறைவனை பிரார்த்திக்கிறேன். இறந்த ஒவ்வொருவரின் குடும்பத்தினருக்கும் ரூ.2 லட்சமும், காயம் அடைந்தவர்களுக்கு ரூ.50 ஆயிரமும் நிவாரணம் வழங்கப்படும். இவ்வாறு பிரதமர் மோடி கூறியுள்ளார்.

### சாத்தான்குளம் சம்பவம் எதிரொலி: தமிழகம் முழுவதும்

# சாலை ஓரங்களில் பாதுகாப்பு இல்லாத இடங்களை ஆய்வு செய்ய வேண்டும்

**மாவட்ட கலெக்டர்களுக்கு அரசு உத்தரவு**

சென்னை, மே 19-

**தமிழகம் முழுவதும் சாலை ஓரங்களில் உள்ள கிணறுகள் மற்றும் பள்ளங்கள் உள்ளிட்ட பாதுகாப்பு இல்லாத இடங்களை ஆய்வு செய்ய மாவட்ட கலெக்டர்களுக்கு தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.**

தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் அருகே கட்டுப்பாட்டை இழந்த ஆம்னி வேன் சாலையோரம் இருந்த 50 அடி ஆழ கிணற்றுக்குள் சனிக்கிழமை பாய்ந்தது. கிணறு முழுவதும் தண்ணீர் இருந்ததால், கார் முழுவதும் கிணற்றுக்குள் மூழ்கியது. இந்த சம்பவத்தில் ஓட்டுநர் உள்பட 5 பேர் நீரில் மூழ்கி பலியாகினர்.

அதில், கெர்சோம், சைனி கிருபா, ஜெரின்எஸ்தர் ஆகியோர் கதவைத் திறந்து நீந்தி வெளியே வந்தனர்.

சுமார் 3 மணி நேர போராட்டத்துக்கு பின்னர், கார் மற்றும் 5 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டன.

மீட்கப்பட்ட சடலங்கள் அனைத்தையும் கூறாய்வுக்காக தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு போலீஸார் அனுப்பி வைத்தனர்.

இந்த நிலையில் தமிழ்நாடு முழுவதும் சாலைகளின் ஓரங்களில் உள்ள கிணறுகள் மற்றும் பள்ளங்கள் உள்ளிட்ட பாதுகாப்பு இல்லாத இடங்களை ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்க மாவட்ட கலெக்டர்களுக்கு தலைமைச்செயலர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

சாத்தான்குளம் அருகே சாலையோரத்தில் இருந்த கிணற்றில் ஆம்னி வேன் நேற்று விழுந்த விபத்தில் 5 பேர் பலியானதையடுத்து தமிழ்நாடு அரசு இந்த நடவடிக்கை எடுத்துள்ளது.

### 3-வது கட்டத்தில் திடீர் தொழில்நுட்ப கோளாறு:

# இஸ்ரோவின் 101-வது ராக்கெட் பி.எஸ்.எல்.வி. சி-61 தோல்வி

ஸ்ரீஹரிகோட்டா, மே 19-

**பூமி கண்காணிப்பு செயற்கைக்கோளுடன் பி.எஸ்.எல்.வி. சி-61 ராக்கெட் விண்ணில் பாய்ந்த நிலையில் அது தோல்வியடைந்தது. ராக்கெட் ஏவப்பட்ட நிலையில் 3-வது கட்டத்தில் தொழில்நுட்ப கோளாறு காரணமாக திட்டம் தோல்வியடைந்ததாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.**

ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் உள்ள முதலாவது ராக்கெட் ஏவுதளத்தில் இருந்து பி.எஸ்.எல்.வி. சி-61 என்ற ராக்கெட் நேற்று காலை 5.59 மணிக்கு விண்ணில் பாய்ந்தது. ஆனால், விண்ணில் பாய்ந்த சில நிமி



டங்களில் பி.எஸ்.எல்.வி. சி-61 ராக்கெட் தோல்வியடைந்தது.

இந்த ராக்கெட்டில் 1,696.24 கிலோ எடை கொண்ட இ.ஓ.எஸ்-09 என்ற செயற்கைக்கோள் பொருத்தப்பட்டுள்ளது.

இது அதிநவீன பூமி கண்காணிப்பு செயற்கைக்கோளாகும். அனைத்து கால நிலைகளிலும் துல்லியமாக படங்களை எடுக்கும் திறன் கொண்டது. திட்டமிட்ட இலக்கில் செயற்கைக்கோளை ராக்கெட் நிலை நிறுத்த முயற்சித்தது. ஆனால், தொழில்நுட்ப கோளாறு காரணமாக ராக்கெட் தோல்வியடைந்தது.

விவசாயம், கடல் வளம், வெள்ளம் கண்காணிப்பு, கடலோர பாதுகாப்பிற்கும் இந்த செயற்கைக்கோள் பயன்படுத்தப்பட இருந்தது. பூமியில் எந்தவொரு இடத்தையும் துல்லியமாக படம் பிடிக்கும் கேமரா கொண்ட செயற்கைக்கோள் இதுவாகும். இஸ்ரோ ஏவிய 101-வது ராக்கெட் இதுவாகும். ஆனால், ஏவிய சில நிமிடங்களில் ராக்கெட் தோல்வியடைந்தது.

இதனால், செயற்கைக்கோளை திட்டமிட்ட இலக்கில் நிலைநிறுத்த முடியவில்லை. இந்த தோல்வி குறித்து உரிய விசாரணை நடத்தப்படும் என்று இஸ்ரோ தெரிவித்துள்ளது.

இந்நிலையில், பி.எஸ்.எல்.வி. சி-61 ராக்கெட் தோல்வியடைந்தது குறித்து இஸ்ரோ தலைவர் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறுகையில், பி.எஸ்.எல்.வி. சி-61 ராக்கெட் ஏவப்பட்டு 2 கட்டங்கள் வெற்றியடைந்த நிலையில் 3வது கட்டத்தில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டது. இதனால் ராக்கெட் அதன் இலக்கை அடையாமல் தோல்வியடைந்தது. இது குறித்து முழுமையாக ஆய்வு மற்றும் விசாரணையை மேற்கொண்டு நாங்கள் மீண்டு வருவோம்' என்றார்.

### தமிழகத்தில் தேனி, திண்டுக்கல் உள்ளிட்ட

# 8 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு

சென்னை, மே 19-

**தமிழகத்தில் இன்று (மே 19) தேனி, திண்டுக்கல் உள்ளிட்ட 8 மாவட்டங்களிலும் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என சென்னை வானிலை மையம் தெரிவித்துள்ளது.**

இது குறித்து, சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

இன்று (மே 19) நீலகிரி, கோவை, திருப்பூர், தேனி, திண்டுக்கல், ஈரோடு, கிருஷ்ணகிரி, தர்மபுரி ஆகிய 8 மாவட்டங்களில் நாளை ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

நாளை (மே 20) நீலகிரி, கோவை, திருப்பூர், திண்டுக்கல், தேனி, ஈரோடு, தர்மபுரி, கிருஷ்ணகிரி, சேலம், திருப்பத்தூர், வேலூர், திருவண்ணாமலை, கரூர், நாமக்கல், திருச்சி ஆகிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும், கோவை, நீலகிரியில் ஓரிரு இடங்களில் மிக கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில், வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

தமிழக கடலோரப்பகுதிகள், தென்தமிழக கடலோரப்பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய குமரிக்கடல் பகுதிகளில் வரும் மே 22ம் தேதி வரை சூறாவளிக்காற்று மணிக்கு 45 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும். இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE |
|---|---|
| - 200.15 | - 42.30 |
| பாயின்ட் 82,330.59 | பாயின்ட் 25,019.80 |


| தங்கம் | வெள்ளி | டாலர் | பெட்ரோல் |
|---|---|---|---|
| 1 சவரன் ₹69,760 | 1 கிலோ ₹108,000 | ₹86.60 | ₹102.63 |
| 1 கிராம் ₹8,720 | 1 கிராம் ₹108.00 | | டீசல் ₹94.24 |

### இந்தியாவுக்கு போட்டியாக

# பாகிஸ்தானும் வெளிநாடுகளுக்கு அமைதிக்குழுவை அனுப்புகிறது

**இஸ்லாமாபாத், மே 19-**

பயங்கரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாடு குறித்து விளக்குவதற்காக முக்கிய நட்பு நாடுகளுக்கு 7 எம்.பி.க்கள் கொண்ட குழுக்களை இந்தியா அனுப்பவுள்ள நிலையில், பாகிஸ்தானும் அமைதிக்கான தனது தரப்பு நிலைப்பாட்டை விளக்கும் குழுவை உலக நாடுகளுக்கு அனுப்ப இருக்கிறது.



முன்னதாக, பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தலைவர் (பி.பி.பி.) பிலாவல் பூட்டோ சர்தாரி, இந்தியா - பாகிஸ்தான் இடையே சமீபத்தில் உருவாகியிருக்கும் பதற்றங்களுக்கு மத்தியில் பாகிஸ்தானின் நிலைப்பாட்டை விளக்க ஒரு குழுவினை வழிநடத்துவதற்கு பாகிஸ்தான் பிரதமர் ஷெரிப் தன்னைக் கேட்டுக் கொண்டதாக தெரிவித்திருந்திருதார். அதனைத் தொடர்ந்து இந்த விஷயம் வெளியாகியுள்ளது.

இதுகுறித்து சர்தாரி தனது முகநூல் பக்கத்தில் வெளியிட்டிருந்த பதிவில், "இன்று (நேற்று) பிரதமர் ஷெபாஸ் ஷெரிப் என்னை அழைத்து அமைதிக்கான பாகிஸ்தான் தரப்பு முயற்சிகளை உலக அரங்கில் விளக்குவதற்கான குழுவினை வழிநடத்துமாறு என்னைக் கேட்டுக்கொண்டார். இந்த இக்கட்டான நேரத்தில் இந்த சவாலான பணியினை ஏற்றுக்கொள்வதையும், தேசத்துக்கு சேவையாற்றுவதையும் பெருமையாக கருதுகிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

நீண்டகாலமாக பயங்கரவாதத்துக்கு ஆதரவளிக்கிறது என்ற குற்றச்சாட்டினை எதிர்கொண்டுவரும் பாகிஸ்தான் தனது நற்பெயரை சரி செய்வதற்கான முயற்சியாக இந்த அறிவிப்பு பார்க்கப்படுகிறது.

# வங்கதேச ஆயத்த ஆடை இறக்குமதிக்கு மத்திய அரசு புதிய கட்டுப்பாடு

**புதுடில்லி, மே 19-**

வங்கதேசத்தில் இருந்து இந்தியாவிற்கு ஆயத்த ஆடைகள், பழங்கள், பதப்படுத்தப்பட்ட உணவுப்பொருட்கள், பருத்தி, நெகிழி போன்ற பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. இந்நிலையில், வங்கதேசத்தில் இருந்து தரைவழியாக இந்தியாவிற்குள் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு மத்திய அரசு தடை விதித்துள்ளது. ஆனால் அதே சமயம் மும்பை, கொல்கத்தா துறைமுகங்கள் வழியாக வங்கதேச பொருட்களை இந்தியாவிற்குள் இறக்குமதி செய்யலாம் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

கடந்த மாதம் சில இந்தியப் பொருட்களுக்கு வங்கதேசம் தடை விதித்த நிலையில், இதற்கு பதிலடி தரும் விதமாக மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

### பயங்கர சூறாவளி:

# அமெரிக்காவில் 27 பேர் பலி

**வாஷிங்டன், மே 19-**

அமெரிக்காவின் மத்தியப் பகுதியில் திடீரென பயங்கர சூறாவளி ஏற்பட்டது. இந்த சூறாவளியின் தாக்கத்தால் கென்டக்கி, மிசோரி மாகாணங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. மிசோரி மாகாணத்தில் செயின்ட் லூயிஸ் நகரில் மட்டும் 5 ஆயிரம் கட்டிடங்கள் சேதம் அடைந்தன. சூறாவளி தாக்கியதில் ஏராளமான வீடுகள் இடிந்து விழுந்தன.

மரங்கள் முறிந்து விழுந்ததில் சாலையோரத்தில் நிறுத்தப்பட்டிருந்த கார்கள் சேதம் அடைந்தன. பல இடங்களில் மின்சாரம் பாதிக்கப்பட்டது. மின்சார விநியோகத்தில் ஏற்பட்ட தடையால் 300,000க்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டனர். இதனால் மீட்பு பணிகளில் தொய்வு ஏற்பட்து. இந்த சூறாவளி தாக்குதலில் கடும் பாதிப்புகள் ஏற்பட்டு உள்ளது.

தற்போது கென்டக்கி, மிசோரியில் மீட்புப் பணி தொடர்ந்து நடந்து வருகிறது. இதுவரை சூறாவளியால் 27 பேர் உயிரிழந்தனர். பாதிக்கப்பட்ட பகுதியில் வசிக்கும் மக்கள் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டு உள்ளனர். இந்த சூறாவளியால் பலரும் தங்களது வீடுகளை இழந்து தவித்து வருகின்றனர்.



தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் முகாம் அலுவலகத்தில், பாகிஸ்தான் ஆதரவு பயங்கரவாதத்தை அம்பலப்படுத்தவும், இந்தியாவின் நிலைப்பாட்டை உலகிற்கு விளக்கிடவும் பல்வேறு கட்சிகளைச் சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களை வெளிநாடுகளுக்கு அனுப்புகின்ற ஒன்றிய அரசின் குழுவில் இடம்பெற்றுள்ள பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழி, வெளிநாடு செல்வதற்கு முன்பாக சந்தித்து வாழ்த்து பெற்றார்.

### 8,350 கோடி ரூபாய் நிதியுதவி:

# பாக்.கிற்கு புதிய நிபந்தனைகள்: சர்வதேச நாணய நிதியம் அதிரடி

**புதுடில்லி, மே 19-**

பாகிஸ்தானுக்கு 11 புதிய நிபந்தனைகளை விதித்து சர்வதேச நாணய நிதியம் (ஐ.எம்.எப்.,) அதிர்ச்சியை கொடுத்துள்ளது.

பஹல்காமில் நடந்த பயங்கரவாத தாக்குதலுக்கு பிறகு, பாகிஸ்தானுக்கு 8,350 கோடி ரூபாய் நிதியுதவி அளிப்பதாக, ஐ.எம்.எப்., எனப்படும் சர்வதேச நாணய நிதியம் அறிவித்தது. இதற்கு நம் நாடு கடும் எதிர்ப்பு தெரிவித்தது.

பாகிஸ்தானுக்கு நிதியுதவி வழங்கும் முடிவை, ஐ.எம்.எப்., எனப்படும் சர்வதேச நாணய நிதியம் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கூறியிருந்தார். இந்நிலையில், பாகிஸ்தானுக்கு 11 புதிய நிபந்தனைகளை ஐ.எம்.எப்., விதித்துள்ளது. ஐ.எம்.எப்., விதித்துள்ள 11 புதிய நிபந்தனைகள் பின்வருமாறு:

1.சர்வதேச நாணய நிதியத்தின் கட்டுப்பாடுகளுக்கு இணங்கி 2026ம் நிதியாண்டின் பட்ஜெட்டிற்கு ஒப்புதல் பெற வேண்டும்.

2. வரி செலுத்துவோர்களை அடையாளம் காண 4 குழுக்களை ஜூன் மாதத்திற்குள் அமைக்க வேண்டும்.

3. சர்வதேச நாணய நிதியம் அளிக்கும் பரிந்துரைகளின் அடிப்படையில் அரசு ஒரு நிர்வாக செயல் திட்டத்தை வெளியிட வேண்டும்.

4. 2027ம் ஆண்டிற்கு பிறகு நிதியை எப்படிக் கையாள வேண்டும் என்பது குறித்து அறிக்கையை பாக்., அரசு உருவாக்க வேண்டும்.

5. இந்த ஆண்டு ஜூலை ம் தேதிக்குள் மின்சார கட்டணத்தை உயர்த்த வேண்டும்.

6. ஆண்டுக்கு இரண்டு முறையாவது எரிவாயு விலையை உயர்த்த வேண்டும்.

7. தொழில்துறை எரிசக்தி பயன்பாட்டை தேசிய மின் கட்டமைப்புக்கு மாற்றுவதை கொண்டு மே மாத இறுதிக்குள் பார்லிமென்ட் சட்டம் இயற்ற வேண்டும்.

8. 17.6 டிரில்லியன் புதிய பட்ஜெட்டுக்கு பார்லிமென்ட் ஒப்புதல் தர வேண்டும்.

9. மின்சார கட்டணம் யூனிட்டுக்கு ரூ.3.21, உச்சவரம்பை ஜூன் மாதத்திற்குள் நீக்க சட்டம் இயற்றப்பட வேண்டும்.

10. மூன்று ஆண்டுகளுக்கு மேல் பயன்படுத்தப்பட்ட கார்களை இறக்குமதி செய்ய விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை நீக்க வேண்டும்.

11.2035ம் ஆண்டுக்குள் தொழில்துறை பூங்காக்கள் மண்டலங்களுக்கான அனைத்து நிதிச் சலுகைகளையும் நீக்குவதற்கு, நடப்பு 2024ம் ஆண்டு இறுதிக்குள் பாகிஸ்தான் ஒரு திட்டத்தைத் தயாரிக்க வேண்டும்.

இந்த நிபந்தனைகளை புதிய நிறைவேற்றவில்லை என்றால் அடுத்த தவணை நிதி விடுவிக்கப்படாது என சர்வதேச நாணய நிதியம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

# அமெரிக்காவில் 2 பேர் சுட்டுக்கொலை

**வாஷிங்டன், மே 19-**

அமெரிக்காவில் ஜிம்மில் மர்ம நபர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 2 பேர் கொல்லப்பட்டனர். மேலும், 3 பேர் படுகாயம் அடைந்தனர்.

நெவடா மாகாணம் லாஸ் வேகாஸ் நகரில் செயல்பட்டு வரும் ஜிம்மில், வழக்கம் போல சிலர் உடற்பயிற்சி செய்து கொண்டிருந்தனர். அப்போது, அங்கு துப்பாக்கியுடன் நுழைந்த மர்ம நபர், அங்கிருந்தவர்கள் மீது கண்மூடித்தனமாக துப்பாக்கிச்சூடு நடத்தினான். இதில், 2 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். 3 பேர் படுகாயம் அடைந்தனர்.

இது குறித்து தகவல் அறிந்து வந்த போலீசார், துப்பாக்கிச் சூடு நடத்திய மர்ம நபரை சுட்டுக்கொன்றனர். காயமடைந்தவர்களை மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். ஒருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது. து குறித்து போலீசார் விசாரித்து வரும் நிலையில், துப்பாக்கிச்சூடு நடத்தியதற்கான காரணம் என்ன? என இதுவரை உறுதி செய்யப்படவில்லை. இதுபோன்ற சம்பவங்கள் அடிக்கடி நிகழ்ந்து வருகிறது.

### போர் நிறுத்த பேச்சுவார்த்தை தோல்வி:

# உக்ரைன் மீது ரஷ்யா நடத்திய டிரோன் தாக்குதலில் 7 பேர் பலி

**கீவ், மே 19-**

போர் நிறுத்த பேச்சுவார்த்தை தோல்வியடைந்த நிலையில் உக்ரைன் மீது ரஷ்யா நடத்திய டிரோன் தாக்குதலில் 7 பேர் பலியானார்கள்.

உக்ரைன், ரஷ்யா இடையேயான போர் நேற்று 1 ஆயிரத்து 179வது நாளாக நீடித்து வருகிறது. இந்த போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். போரை முடிவுக்கு கொண்டுவர அமெரிக்கா உள்பட பல்வேறு நாடுகள் முயற்சித்தன. ஆனால், அந்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியடைந்த நிலையில் போர் நீடித்து வருகிறது.

இதனிடையே, போரை முடிவுக்கு கொண்டு வருவது தொடர்பாக உக்ரைன் - ரஷ்யா அதிகாரிகள் இடையே துருக்கியில் 15ம் தேதி நேரடி பேச்சுவார்த்தை நீடித்தது. சுமார் 2 மணி நேரத்திற்கு மேல் நீடித்த இந்த பேச்சுவார்த்தையில் இரு தரப்பிலும் உள்ள கைதிகளை பரிமாறிக்கொள்வது தொடர்பாக மட்டுமே சுமூக தீர்வு எட்டப்பட்டது. அதே வேளை, போரை முடிவுக்கு கொண்டு வருவது தொடர்பாக எந்த முடிவும் எட்டப்படாமல் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது.

இந்நிலையில், உக்ரைனின் சுமி மாகாணம் பிலோபிலியா பகுதியில் சாலையில் சென்றுகொண்டிருந்த பஸ் மீது ரஷ்யா நேற்று முன்தினம் டிரோன் தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் பயணிகள் 9 பேர் உயிரிழந்தனர். மேலும், பலர் படுகாயமடைந்தனர். பேச்சுவார்த்தை தோல்வியடைந்து இரு தரப்பும் மீண்டும் சண்டையை தொடங்கியுள்ளதால் தொடர்ந்து பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது. அதேவேளை, ரஷ்ய அதிபர் புதின், உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கியிடம் தொலைபேசியில் பேச்சுவார்த்தை நடத்தி மோதலை தவிர்க்க உள்ளதாக டிரம்ப் தெரிவித்துள்ளார்.

# ஓமன் நாட்டில் கேஸ் சிலிண்டர் வெடித்து கேரள தம்பதி பலி

**மஸ்கட், மே 19-**

ஓமன் நாட்டில் கேஸ் சிலிண்டர் வெடித்து கேரள தம்பதி பலிகினர்.

கேரள மாநிலம் கண்ணூர் மாவட்டம் தலச்சேரி பகுதியை சேர்ந்தவர் பங்கஜாக்சன் (வயது59). இவரது மனைவி சஜிதா(53). இவர்கள் பல ஆண்டுகளாக ஓமன் நாட்டில் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் மஸ்கட் கவர்னரேட் பகுதியில் செயல்படும் ஒரு ஓட்டலில் மாடியில் இருக்கும் அறையில் வசித்து வந்தனர்.



இந்தநிலையில் அதிகாலையில் அந்த ஓட்டலில் கேஸ் சிலிண்டர் வெடித்து தீவிபத்து ஏற்பட்டது. இதனால் அந்த கட்டிடம் இடிந்து விழுந்தது. இதில் பங்கஜாக்சன், சஜிதா ஆகிய இருவரும் பரிதாபமாக இறந்தனர். இதுகுறித்து தகவலறிந்த சென்னையில் வசித்து வரும் அவரது மகள் ஓமன் விரைந்துள்ளார்.

### அமெரிக்காவில் சிறையில் இருந்து

# 10 கைதிகள் தப்பி ஓட்டம்

**வாஷிங்டன், மே 19-**

அமெரிக்காவில் சிறையில் இருந்து தப்பி ஓடிய 10 கைதிகளில் 4 பேர் சிக்கினர். சிறைச்சாலையில் கைதிகள் தப்பி செல்வதற்கு உடந்தையாக இருந்த ஊழியர்கள் சஸ்பெண்டு செய்யப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவின் லூசியானா மாநிலம், நியூ ஆர்லியன்ஸ் நகரில் சிறைச்சாலை உள்ளது. அங்கு தண்டனை கைதிகள் மற்றும் விசாரணை கைதிகள் உள்பட சுமார் 1,500 பேர் அடைத்து வைக்கப்பட்டு உள்ளனர். இந்த சிறைச்சாலையில் எப்போதும் பலத்த பாதுகாப்பு போடப்பட்டு இருக்கும். இந்த பாதுகாப்பையும் மீறி கைதிகள் தப்பிச் சென்ற சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

கைதிகள் சிலர் நள்ளிரவு நேரம் கழிப்பறை சென்றுள்ளனர். பின்னர் கழிப்பறையின் பின்னால் உள்ள துளை வழியாக 10 கைதிகள் ஏறி குதித்து தப்பினர். ஆனால் இந்த சம்பவம் நடந்த 7 மணி நேரத்துக்குப் பிறகே சிறை அதிகாரிகளுக்கு தெரிய வந்தது.

இதனையடுத்து உயர் அதிகாரிகளுக்கு உடனடியாக தகவல் தெரிவிக்கப்பட்டது. பின்னர் அங்கிருந்த கண்காணிப்பு கேமரா பதிவுகளை அவர்கள் ஆய்வு செய்தனர். அப்போது தப்பி சென்ற கைதிகள் சிறையில் இருந்து வெளியேறியதும் சீருடைகளை மாற்றி விட்டு வேறு ஆடைகளை அணிவது தெரிய வந்தது.

பின்னர் சந்தேகம் வராத வகையில் குடியிருப்பு பகுதியில் நடந்து சென்றது கண்காணிப்பு கேமராவில் பதிவாகி உள்ளது. கைதிகள் தப்பிச் சென்ற பாதையைச் சுற்றியுள்ள சுவரில் காவல்துறைக்கு சவால்விடும் வகையில் வாசகங்களை எழுதி வைத்துள்ளனர். குறிப்பாக, "உங்களால் முடிந்தால் எங்களைப் பிடியுங்கள்" என்று எழுதியிருந்தனர். ஆபாச வார்த்தைகளையும் எழுதியுள்ளனர்.

தப்பியோடியவர்களில் இதுவரை 4 கைதிகள் சிக்கி உள்ளனர். மற்ற கைதிகளை தேடும் பணி முடுக்கி விடப்பட்டு உள்ளது. இச்சம்பவம் தொடர்பாக நடைபெற்ற விசாரணையில், கைதிகள் நள்ளிரவு நேரம் தங்களது அறையில் இருந்து வெளியேற ஊழியர்கள் சிலர் உதவியது கண்டுபிடிக்கப்பட்டது. கைதிகளுக்கு உடந்தையாக செயல்பட்ட 3 ஊழியர்கள் சஸ்பெண்டு செய்யப்பட்டு உள்ளனர்.

இதில் வேறு யாருக்கும் தொடர்பு உள்ளதா? என்ற கோணத்தில் சிறை அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

**19-05-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** வேலைக்கான நேர்காணல்களில் வெற்றி கிடைக்கும். கீழே பணிபுரிபவர்களுக்கு கட்டளையிடும் உயர் பதவி கிடைக்கும். அரசு ஆதரவு இருக்கும். கல்வியில் தேர்ச்சி ஏற்படும்.

**ரிஷபம்:-** தெய்வ சிந்தனை அதிகரிக்கும். சிலருக்கு குழந்தைப் பிறப்புக்கான வாய்ப்பு உருவாகும். கோவில், குளம் போன்ற திருப்பணிகளில் ஈடுபடுவதால், புகழ் ஓங்கும். உல்லாசப் பயணங்கள் சந்தோஷம் நிலவும்.

**மிதுனம்:-** அனைத்து விஷயங்களிலும் எச்சரிக்கையாக இருக்கவும். அனைவருக்கும் நல்லதே நினைக்கும் எண்ணத்தைக் கைக்கொள்வது நல்லது உயர் அதிகாரிகளிடம் பணிவுடன் நடந்தால் உயர்வு உண்டு.

**கடகம்:-** புதியன கற்பதில் ஈடுபாடு அதிகரிக்கும். புதிய வாகனங்கள் வாங்க திட்டமிடுவீர்கள். சுவையான உணவுகளை ருசித்து மகிழ்வீர்கள். அரசாங்கத்திடம் எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக நடக்கும்.

**சிம்மம்:-** அனைத்து நலன்களும் உண்டாகும். எதிர்பார்த்த வரவுகள் வந்து ஏற்றம் தரும். உதவிக்கரம் நீட்டுவர் நண்பர்கள். மனதில் சொந்த வீடு வாங்கும் எண்ணம் உருவாகும். புகழும் உண்டாகும்.

**கன்னி:-** குழந்தைகள் உடல் நிலையில் அக்கறை தேவை. அனைவருடனும் சுமுகமாகப் பழகி, அமைதியாக நடந்தால் எதிர்ப்புகள் குறையும். எவ்வளவு திறமையாக செயல்பட்டாலும் ஏளனமே மிஞ்சும்.

**துலாம்:-** வியாபாரத்தில் தனவரவுகள் எதிர்பார்த்த அளவுக்கு இருக்காது. தேவையற்ற சிந்தனைகள் படுத்தவுடன் தூக்கம் வராது. தாயின் ஆரோக்கியம் பற்றிய கவலைகள் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:-** அனைத்து காரியங்களிலும் கை கொடுப்பாள் மனைவி. குழந்தைகள் மேல் பாசம் பொழிவார்கள். அரசு ஆதரவால் தொழில் வளர்ச்சியில் திருப்தி நிலவும். ஆடை ஆபரணங்கள் சேரும்.

**தனுசு:-** தனலாபம், குடும்பத்தில் நிம்மதி, குடும்ப சுகம் ஆகியவை குறையும். புதிய தொழில் முதலீடுகளை ஒத்திப் போடுவது நல்லது. மாணவர்கள் மிகுந்த அக்கறையுடன் படித்தல் அவசியம்.

**மகரம்:-** அனைத்து விஷயங்களிலும் மனத்திருப்தி ஏற்படும். புத்தி சாதுர்யமும், வாக்கு வன்மையும் ஓங்கும். இனிய பயணங்களால் இன்பம் பெருகும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் நிலவும்.

**கும்பம்:-** இடமாற்றங்களை எதிர்பார்க்கலாம். முறையற்ற வழிகளில் பணம் வரலாம். உறவுகளிடையே மனக்கசப்பு உருவாகலாம். கோபத்தைக் குறைத்தால் நன்மை ஏற்படும்.

**மீனம்:-** காரியம் அனைத்திலும் வெற்றி கிட்டும். எதிர்பார்த்த அரசு உதவிகள் தாமதமின்றி கிடைக்கும். கல்வியில் தேர்ச்சி ஏற்படும். பதவி மற்றும் அந்தஸ்து உயர்வு ஏற்படும்.

### அமெரிக்காவில் இருந்து

# தங்கள் சொந்த நாட்டுக்கு பணம் அனுப்பினால் இனி 5 சதவீதம் வரி

**வாஷிங்டன், மே 19-**

அமெரிக்காவில் சட்டவிரோதமாக சுமார் 1.37 கோடிக்கும் மேற்பட்ட வெளிநாட்டினர் வசிப்பதாக கணக்கிடப்பட்டு உள்ளது. அவர்களை வெளியேற்ற ஜனாதிபதி டிரம்ப் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். இதன்படி கடந்த ஜனவரி மாதம் முதல் சட்டவிரோத குடியேறிகள் தொடர்ந்து வெளியேற்றப்பட்டு வருகின்றனர்.

அமெரிக்காவில் சட்டப்பூர்வமாக சுமார் 4.78 கோடிக்கும் மேற்பட்ட வெளிநாட்டினர் பணியாற்றி வருகின்றனர். டிரம்ப் பதவியேற்ற பிறகு அவர்களின் பல்வேறு உரிமைகள், சலுகைகள் பறிக்கப்பட்டு வருகின்றன.

இந்த சூழலில் 'தி ஒன் பிக் பியூட்டிபூல் பில்' என்ற புதிய மசோதாவை ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் நிர்வாகம் வரையறுத்து உள்ளது. இதில் வெளிநாட்டினருக்கு பல்வேறு கட்டுப்பாடுகள், வரிகள் விதிக்கப்பட்டு உள்ளன. குறிப்பாக, அமெரிக்காவில் பணியாற்றும் வெளிநாட்டினர், தங்களது சொந்த நாட்டுக்கு பணம் அனுப்பினால் 5 சதவீதம் வரி விதிக்கப்படும் என்று புதிய மசோதாவில் அறிவிக்கப்பட்டு உள்ளது.

இதன்காரணமாக கிரீன் கார்டு மற்றும் எச்1பி, எச்2ஏ, எச்2பி விசா பெற்று அமெரிக்காவில் பணியாற்றும் சுமார் 4.78 கோடிக்கும் மேற்பட்ட வெளிநாட்டினர் அதிர்ச்சி அடைந்து உள்ளனர். ஜனாதிபதி டிரம்பின் புதிய வரி விதிப்பால் 45 லட்சம் இந்தியர்களும் கடும் அதிர்ச்சியில் உறைந்துள்ளனர். எழும்பூர் ரெயில் நிலையத்தில் ஆந்திராவில் இருந்து வந்த பயணியிடம் கணக்கில் காட்டப்படாத ரூ.38 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

### வாடிகனில் பிரம்மாண்ட ஏற்பாடு:

# புதிய போப் ஆக முறைப்படி பதவி ஏற்றார் பிரெவோஸ்ட்

**வாடிகன் சிட்டி, மே 19-**

வாடிகனில் நடந்த பிரம்மாண்ட நிகழ்ச்சியில் புதிய போப் ஆக ராபர்ட் பிரெவோஸ்ட் முறைப்படி பதவி ஏற்றார்.

கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் மத தலைவரான போப் பிரான்சிஸ் (88), கடந்த மாதம் 21-ம் தேதி உடல்நலக் குறைவால் மரணம் அடைந்தார். புதிய போப் பிரான்சிஸை தேர்வு செய்வதற்கான நடைமுறைகள் தொடங்கின. முதல் நாள் நடைபெற்ற வாக்கெடுப்பில் யாருக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. இதற்கிடையே, 2-வது முறையாக கார்டினல்கள் கூடி புதிய போப்பை தேர்வு செய்யும் பணியில் ஈடுபட்டனர். இரண்டு நாள் இழுபறிக்குப் பிறகு புதிய போப் ஆண்டவர் தேர்வு செய்யப்பட்டார். வாடிகனில் உள்ள தேவாலயத்தின் சிம்னியில் இருந்து வெள்ளை புகை வெளியேறியது.



புதிய போப் ஆக அமெரிக்காவைச் சேர்ந்த ராபர்ட் பிரிவோஸ்ட் தேர்வு செய்யப்பட்டார். அமெரிக்காவில் இருந்து தேர்வு செய்யப்பட்ட முதல் போப் ராபர்ட் பிரிவோஸ்ட் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், புதிய போப் பதவியேற்பு விழா நேற்று நடைபெற்றது. கத்தோலிக்க திருச்சபையின் தலைவராக பதவி ஏற்கும் நிகழ்வு, வாடிகன் நகரம் விழாக்கோலம் பூண்டுள்ளது. இந்நிகழ்வில் உலக நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

இந்தியா சார்பில் மாநிலங்களவை துணைத் தலைவர் ஹரிவன்ஷ் நாராயண் சிங் மற்றும் நாகாலாந்து துணை முதல்னர் யாதுங்கோ பட்டொன் பங்கேற்றுள்ளனர். இந்நிகழ்ச்சியில், அமெரிக்காவைச் சேர்ந்த ராபர்ட் பிரிவோஸ்ட் 14ம் போப் ஆக பதவியேற்றுள்ளார்.

# கொடைக்கானலில் 62-வது மலர் கண்காட்சி: மே 24 தொடங்கி 9 நாட்கள் நடைபெறுகிறது

**திண்டுக்கல், மே 19-**

கொடைக்கானலில் கோடை விழா மற்றும் மலர் கண்காட்சி மே 24-ல் தொடங்கி ஜூன் 1-ம் தேதி வரை 9 நாட்கள் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள கோடை வாசஸ்தலமான மலைகளின் இளவரசி கொடைக்கானலுக்கு கோடை சீசன் தொடங்கியது முதல் சுற்றுலா பயணிகள் வருகை அதிகரித்து காணப்படுகிறது. கடந்த சில தினங்களாக கொடைக்கானலில் மாலை வேளையில் தொடர்ந்து மழை பெய்துவருவதால் மலைப்பகுதியில் இயற்கை எழில் காட்சிகள், நீர்வீழ்ச்சிகளில் தண்ணீர் கொட்டுவது என சுற்றுலாபயணிகளை கவரும் வகையில் ரம்மியமாக காட்சியளிக்கிறது.

பிரையண்ட் பூங்காவில் மலர் கண்காட்சி தொடங்குவதற்கு முன்பே பல்வேறு வண்ணங்களில் பூக்கள் பூத்துக்குலுங்க தொடங்கிவிட்டன. இந்நிலையில் கொடைக்கானலில் கோடை விழா, மலர்கண்காட்சி நடத்துவது குறித்து மாவட்ட நிர்வாகம், தோட்டக்கலைத்துறை, சுற்றுலாத்துறை சார்பில் கலந்தாய்வுக் கூட்டம் கொடைக்கானலில் நடைபெற்றது.

திண்டுக்கல் ஆட்சியர் செ.சரவணன் தலைமையில் நடந்த கூட்டத்தில் தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் நடராஜன், சுற்றுலாத்துறை அலுவலர் கோவிந்தராஜ் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கூட்ட முடிவில் ஆட்சியர் செ.சரவணன் செய்தியாளர்களிடம் கூறுகையில், "கொடைக்கானலில் கோடைவிழா, மலர்கண்காட்சி மே 24 தொடங்கி ஜூன் 1-ம் தேதி வரை நடைபெறவுள்ளது.

கோடை விழாவை முன்னிட்டு சுற்றுலா பயணிகள் பங்கேற்கும் வகையில் பரத நாட்டியம், சிலம்பம், விளையாட்டு போட்டிகள், படகுப் போட்டி, நாய்கள் கண்காட்சி உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

மலர் கண்காட்சியை காண நுழைவுக் கட்டணமாக பெரியவர்களுக்கு ரூ.75, சிறியவர்களுக்கு ரூ.35 என கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. மலர் கண்காட்சியில் வேளாண் மற்றும் உழவர் நலத்துறை, ஊரக வளர்ச்சித் துறை, உணவு மற்றும் உணவு வழங்கல் துறை, சுற்றுலாத்துறை அமைச்சர்கள் பங்கேற்க உள்ளனர்." என்றார்.

# அமர்நாத் யாத்திரை பக்தர்களுக்கு முழு பாதுகாப்பு வழங்கப்படும்

## காஷ்மீர் முதல்வர் உறுதி

**ஸ்ரீநகர், மே 19-**

பஹல்காம் தாக்குதலுக்குப் பிறகு ஜம்மு காஷ்மீரில் சுற்றுலா பயணிகளின் வருகை மிகவும் குறைந்து விட்டதாக முதல்வர் ஓமர் அப்துல்லா தெரிவித்துள்ளார். மேலும், அமர்நாத் யாத்திரையில் எந்த அசம்பாவிதமும் நடக்காமல் இருக்க கவனம் செலுத்தப் போவதாக அவர் கூறியுள்ளார்.

மேலும் அவர் கூறியதாவது: பஹல்காம் தாக்குதல் காரணமாக, இந்த கோடை சீசனில் முன்பு எப்போதும் இல்லாத அளவுக்கு சுற்றுலா பயணிகளின் வருகை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. தற்போது, நாங்கள் அமர்நாத் யாத்திரையில் முழு கவனம் செலுத்த போகிறோம். எந்தவித அசம்பாவிதமும் நடக்காமல் இருக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். இந்த யாத்திரைக்குப் பிறகு சுற்றுலாவை மேம்படுத்த தேவையான முயற்சிகள் எடுக்கப்படும், இவ்வாறு கூறினார்.

52 நாட்கள் கொண்ட அமர்நாத் யாத்திரை வரும் ஜூலை 3ம் தேதி தொடங்கி ஆகஸ்ட் 9ம் தேதியுடன் நிறைவடைகிறது. இதுவரையில் இந்த யாத்திரையில் பங்கேற்க நாடு முழுவதும் 3.5 லட்சம் பக்தர்கள் ஆன்லைனில் பதிவு செய்திருப்பது குறிப்பிடத்தக்கது

# முள்ளிவாய்க்கால் நினைவுதினம்: மண்ணில் புதைக்கப்பட்ட நம் உறவுகளுக்கு வீரவணக்கம்: விஜய்

**சென்னை, மே 19-**

மண்ணில் புதைக்கப்பட்ட நம் உறவுகளுக்கு வீரவணக்கம் என த.வெ.க. தலைவர் விஜய் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்துள்ளார்.



இலங்கையில் இறுதிக்கட்ட போரின் போது தமிழர்கள் கொல்லப்பட்ட முள்ளிவாய்க்கால் படுகொலையின் 16வது ஆண்டு நினைவு தினம் நேற்று அனுசரிக்கப்பட்டது. ஏராளமானவர்கள் போரில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

இந்த நிலையில், முள்ளிவாய்க்கால் நினைவுதினத்தையொட்டி, த.வெ.க. தலைவர் விஜய் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது; "உலகெங்கும் வசிக்கும் நம் தொப்புள்கொடி உறவுகளுக்கு, நம்பிக்கை ஊட்டும் நல்லுறவுகளாக நாம் இருப்போம் என்று முள்ளிவாய்க்கால் நினைவு தினமான இன்று (நேற்று) உறுதி ஏற்போம். மண்ணில் விதைக்கப்பட்ட நம் உறவுகளுக்கும், உலகிற் சிறந்த உயர்தனி வீரத்திற்கும் நினைவஞ்சலியும் வீரவணக்கமும். மாமக்கள் போற்றுதும்! மாவீரம் போற்றுதும்!"

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சாத்தான்குளம் விபத்து: கிணற்றில் இருந்து 45 சவரன் நகைகள் மீட்பு

**தூத்துக்குடி, மே 19-**

சாத்தான்குளம் விபத்து நடந்த கிணற்றில் இருந்து 45 சவரன் நகைகள் மற்றும் பொருட்களை மீனவர்கள் மீட்டனர்

தூத்துக்குடி மாவட்டம் உடன்குடி அருகே வெள்ளாளன் விளையைச் சேர்ந்தவர் தேவதாஸ் மகன் மோசஸ் (வயது 50). கோவை துடியலூரில் மளிகை கடை நடத்தி வரும் இவர், அப்பகுதியில் குடும்பத்துடன் வசித்து வருகிறார். மோசஸ் தனது சொந்த ஊரான வெள்ளாளன் விளையில் உள்ள கிறிஸ்தவ ஆலய பிரதிஷ்டை விழாவில் பங்கேற்பதற்காக 3 நாட்களுக்கு முன் இரவில் குடும்பத்தினர், உறவினர்களுடன் காரில் புறப்பட்டு வந்தார். தூத்துக்குடி மாவட்ட எல்லையான சாத்தான்குளம் அருகே உள்ள மீரான்குளம் அருகில் சென்றபோது, மோசஸின் கட்டுப்பாட்டை இழந்து சாலையோர தரை மட்ட கிணற்றுக்குள் எதிர்பாராதவிதமாக கார் பாய்ந்தது. அப்போது காரில் இருந்து வெளியே வந்த மோசஸ் மகன் கெர்சோம் (29), ரவி கோவில்பிச்சை மகள் ஜெனிபா எஸ்தர், கெர்சோம் மனைவி சைனி கிருபாகரன் (26) ஆகிய 3 பேரும் தண்ணீரில் தத்தளித்தனர்.

உடனே அக்கம்பக்கத்தினர் விரைந்து சென்று, கிணற்றில் தத்தளித்த 3 பேரையும் மீட்டனர். தொடர்ந்து கிணற்றில் காருடன் மூழ்கியவர்களை மீட்க முயன்றனர். ஆனாலும் கிணற்றுக்குள் கார் மூழ்கியதால் உள்ளே சிக்கியவர்களை மீட்க முடியவில்லை. கிணற்றில் மூழ்கிய காரில் இருந்த மோசஸ், அவருடைய மனைவி வசந்தா (49), சந்தோஷ் மகன் ரவி கோயில்பிச்சை, அவருடைய மனைவி கெத்சியாள் கிருபா, கெர்சோம் மகன் ஸ்டாலின் (1½) ஆகிய 5 பேரும் தண்ணீருக்குள் மூழ்கினர்.

தொடர்ந்து இரவில் அதிக ஒளிபாய்ச்சும் மின்விளக்கு, அதிக இழுவைத்திறன் கொண்ட ராட்சத கிரேன் மூலம் சுமார் 4 மணி நேரத்திற்கு பிறகு கிணற்றில் இருந்து குழந்தை ஸ்டாலின் உள்பட 5 பேரும் பிணமாக மீட்கப்பட்டனர். இந்தநிலையில், கிணற்றில் கார் கவிழ்ந்த விபத்தில், 20 சவரனுக்கு மேற்பட்ட நகைகள் இருப்பதாக விபத்தில் உயிரிழந்த மோசஸ் உறவினர்கள் போலீசாரிடம் தெரிவித்தனர். இதையடுத்து தூத்துக்குடி முத்து குளிக்கும் மீனவர்கள் வரவழைக்கப்பட்டு கிணற்றுக்குள் நகைகளை தேடும் பணியில் ஈடுபட்டனர். அப்போது நீரில் மூழ்கி கிணற்றுக்குள் இருந்த 45 சவரன் நகைகள் மற்றும் பொருட்களை மீனவர்கள் மீட்டனர். நகைகளை மீட்டு போலீசாரிடம் ஒப்படைத்தனர். இதனிடையே, விபத்தில் உயிரிழந்தவர்களின் உறவினர்களை தி.மு.க. எம்.பி., கனிமொழி சந்தித்து ஆறுதல் கூறினார்.

# நெதர்லாந்து, டென்மார்க் மற்றும் ஜெர்மனி நாடுகளுக்கு ஜெய்சங்கர் சுற்றுப்பயணம்

**புதுடெல்லி, மே 19-**

நெதர்லாந்து, டென்மார்க் மற்றும் ஜெர்மனி ஆகிய 3 நாடுகளுக்கு மத்திய வெளிவிவகார துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் இன்று சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளார்.

இந்த பயணத்தில், அந்நாடுகளின் தலைவர்களை அவர் சந்தித்து பேசுகிறார். அதில், இருதரப்பு உறவுகள் பற்றி முழு அளவில் ஆலோசனை மேற்கொள்கிறார். இதுதவிர, உலகளாவிய மற்றும் மண்டல அளவிலான விவகாரங்களில் பரஸ்பர நலன்களை பற்றியும் ஆலோசனை மேற்கொள்ளப்படும் என மத்திய வெளிவிவகார அமைச்சகம் வெளியிட்ட அறிக்கை தெரிவிக்கின்றது.

நடப்பு ஆண்டின் மே மாதத்தில், ஜெர்மனியின் புதிய அதிபராக பிரெட்ரிக் மெர்ஸ் பதவியேற்ற நிலையில், மத்திய அமைச்சர்யின் ஜெர்மனி பயணம் அமைந்துள்ளது. பஹல்காம் பயங்கரவாத தாக்குதல் நடந்தபோது, உலகம் முழுவதிலும் உள்ள நாடுகளின் ஒரு பகுதியாக இந்த 3 நாடுகளும் இந்தியாவுக்கு ஆதரவை வெளிப்படுத்தின. இந்த 3 நாடுகளுடனும் இந்தியா இனிமையான மற்றும் நட்பு முறையிலான உறவை கொண்டிருக்கிறது.

# மருமகனுக்கு மீண்டும் கட்சி பொறுப்பு வழங்கிய மாயாவதி

**லக்னோ, மே 19-**

தமது மருமகன் ஆகாஷ் ஆனந்திற்கு பகுஜன் சமாஜ் முதன்மை தேசிய ஒருங்கிணைப்பாளர் என்ற பதவியை வழங்கி உள்ளார் மாயாவதி.



உ.பி., மாஜி முதல்வர் மற்றும் பகுஜன் சமாஜ் தலைவர் மாயாவதி. இவரின் தம்பி ஆனந்த் குமாரின் மகன் ஆகாஷ் ஆனந்த் கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பாளராக இருந்து வந்தார். இவரை தமது அரசியல் வாரிசாகவும் மாயாவதி அறிவித்து இருந்தார். கடந்த லோக்சபா தேர்தலுக்கு முன்னதாக, ஆகாஷ் ஆனந்தை கட்சி பொறுப்பு மற்றும் அரசியல் வாரிசு என்ற தகுதியில் இருந்து நீக்குவதாக மாயாவதி அறிவித்தார். இதனால் அதிர்ச்சி அடைந்த ஆகாஷ், தமது அத்தையிடம் பல முறை நேரிலும், அறிக்கைகள் மூலமாகவும் மன்னிப்பு கேட்டார்.

இந்நிலையில், தற்போது மீண்டும் அவருக்கு கட்சியில் முதன்மை தேசிய ஒருங்கிணைப்பாளர் பொறுப்பு வழங்கி உள்ளார். தலைநகர் டில்லியில் நேற்று நடைபெற்ற கட்சி கூட்டத்துக்கு பின்னர் இதற்கான அறிவிப்பை அவர் வெளியிட்டு உள்ளார். இம்முறை கட்சியையும், இயக்கத்தையும் வலுப்படுத்த ஆகாஷ் பொறுப்புடன் செயல்படுவார் என்று தாம் நம்புவதாக மாயாவதி கூறி உள்ளார். நாடு முழுவதிலும் இருந்து கட்சியின் முக்கிய பிரமுகர்கள், ஒருங்கிணைப்பாளர்கள் உள்ளிட்ட பலர் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

முன்னதாக, வரக்கூடிய பீகார் சட்டசபை தேர்தலில் பகுஜன் சமாஜ் தனித்தே போட்டியிடும், கட்சியின் பலம் என்ன என்பதை அறியவே தனித்து போட்டி என்று மாயாவதி அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தானுக்கு உளவு பார்த்த அரியானா பெண் யூடியூபர் கைது

**சண்டிகர், மே 19-**



அரியானா மாநிலத்தை சேர்ந்த பிரபல யூடியூபர் ஜோதி மல்ஹோத்ரா. இவருக்கு யூடியூபில் 3 லட்சத்து 77 ஆயிரம் பாலோவர்கள் உள்ளனர். இன்ஸ்டாகிராமிலும் அதிக பாலோவர்கள் உள்ளனர்.

இதனிடையே, யூடியூபர் ஜோதி மல்ஹோத்ரா கடந்த 2023ம் ஆண்டு பாகிஸ்தான் சென்றுள்ளார். அந்த பயணத்தின்போது பாகிஸ்தான் உளவு அமைப்புடன் ஜோதிக்கு தொடர்பு ஏற்பட்டுள்ளது. டெல்லியில் உள்ள பாகிஸ்தான் தூதரகத்தில் பணியாற்றி வந்த இஷன் உர் ரஹ்மானுக்கும் ஜோதிக்கும் தொடர்பு ஏற்பட்டது. இதையடுத்து, இந்தியா வந்த மல்ஹோத்ரா, அரியானா, பஞ்சாப்பில் உள்ள ராணுவ நிலைகள் தொடர்பான விவரங்களை உளவுபார்த்து பாகிஸ்தானுக்கு அனுப்பியுள்ளார். இந்நிலையில், பாகிஸ்தானுக்கு உளவுபார்த்த மல்ஹோத்ராவை அரியானா போலீசார் நேற்று முன்தினம் கைது செய்தனர். அவரின் கூட்டாளிகள் 6 பேரும் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது.

# ஆபரேஷன் சிந்தூர் பற்றி சர்ச்சைப் பதிவு; அசோகா பல்கலை., பேராசிரியர் கைது

**சண்டிகர், மே 19-**

ஆபரேசன் சிந்தூர் குறித்து சர்ச்சை கருத்துக்களை கூறியதாக அசோகா பல்கலை பேராசிரியரை போலீசார் கைது செய்தனர்.



ஹரியானாவில் உள்ள அசோகா பல்கலையின் உதவி பேராசிரியரும், அரசியல் அறிவியல் துறையின் தலைவராக இருப்பவர் அலிகான் மக்முதாபாத். அண்மையில், பாகிஸ்தான் பயங்கரவாதிகளுக்கு எதிராக இந்தியா நடத்திய ஆபரேஷன் சிந்தூர் குறித்து சமூகவலைதளத்தில் விடுத்த பதிவு பெரும் சர்ச்சையானது.

இது தொடர்பாக வழக்குப்பதிவு செய்த ஹரியானா போலீசார், அவரை கைது செய்து விசாரித்து வருகின்றனர். இந்த விவகாரத்தில் ஹரியானா மகளிர் ஆணையமும் மே 15ம் தேதிக்குள் ஆஜராக, அலிகான் மக்முதாபாத்துக்கு நோட்டீஸ் அனுப்பியது. ஆனால், அவர் ஆஜராகவில்லை. இந்த சூழலில் அவர் கைதாகியுள்ளார்.

இது குறித்து மகளிர் ஆணைய தலைவர் ரேணு பாட்டியா கூறுகையில், 'நாட்டின் மகள்களான கலோனல் ஷோபியா குரேஷி மற்றும் விங் கமென்டர் வியோமிகா சிங் ஆகியோருக்கு சல்யூட். ஆனால், அரசியல் அறிவியல் பாடத்தை கற்பிக்கும் ஒரு பேராசிரியர், இது போன்ற வார்த்தைகளை பயன்படுத்த, அவர்களை பேசியிருக்கக் கூடாது. குறைந்தபட்சம் இன்று (நேற்று) அவர் கமிஷன் முன் ஆஜராகி வருத்தம் தெரிவிப்பார் என்று நான் எதிர்பார்த்தேன், எனக் கூறினார்.

# சென்னைக்கு ரயிலில் கடத்தி வரப்பட்ட ரூ.38 லட்சம் ஹவாலா பணம் பறிமுதல்



**சென்னை, மே 19-**

ஆந்திர மாநிலம் காக்கிநாடாவில் இருந்து சென்னை வழியாக செங்கல்பட்டு செல்லும் சர்க்கார் விரைவு ரயிலில் ரூ.38 லட்சம் ஹவாலா பணத்தை கடத்திய இளைஞரை எழும்பூர் ஆர்.பி.எப் போலீஸார் கைது செய்தனர். மேலும், அவரிடம் ஆர்.பி.எப் மற்றும் வருமானவரித் துறை அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர்.

சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில், ஆர்.பி.எப் காவல் ஆய்வாளர் கே.பி.செபாஸ்டின் தலைமையில் ஆர்.பி.எப். போலீஸார் ஞாயிற்றுக் கிழமை அதிகாலை கண்காணிப்புப் பணியில் தீவிரமாக ஈடுபட்டனர். அப்போது, எழும்பூர் ரயில் நிலையத்தின் 8-வது நடைமேடைக்கு சர்க்கார் விரைவு ரயில் வந்தது. அந்த ரயிலில் வந்து இறங்கிய இளைஞர், சந்தேகிக்கும் வகையில் இருந்ததால் அவரை ஆர்.பி.எப். போலீஸார் பிடித்து, அவரிடம் விசாரணை மேற்கொண்டனர்.

அவரிடம் இருந்த பையை சோதனை செய்ததில், ஆவணம் ஏதுமின்றி கட்டு கட்டாக பணம் வைத்திருப்பது தெரியவந்துள்ளது. இதைடுத்து, அவரை எழும்பூர் ஆர்.பி.எப். அலுவலகத்துக்கு போலீஸார் அழைத்து விசாரணை நடத்தியுள்ளனர். அதில், அந்த நபர் ஆந்திர மாநிலம் பாபட்லா மாவட்டம் சிராலா பகுதியைச் சேர்ந்த நரேஷ் (33) என்பதும், சென்னையில் மற்றொரு நபரிடம் பணத்தை கொடுக்க வந்து, காத்திருந்ததும் முதல் கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

மேலும், இது குறித்து, வருமான வரித்துறை அதிகாரிகளுக்கு ஆர்.பி.எப். போலீஸார் தகவல் கொடுத்தனர். தகவலின் பேரில் சம்பவ இடத்திற்கு விரைந்த வருமான வரித்துறை அதிகாரிகள் நரேஷ் கொண்டு வந்த ரூ.38 லட்சம் பணத்தை கைப்பற்றினர். மேலும், நரேஷிடம் ஆர்.பி.எப். மற்றும் வருமான வரித்துறை அதிகாரிகள் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தெலுங்கானாவில் நக்சலைட்டுகள் 20 பேர் கைது; ஆயுதங்கள் மீட்பு

**ஐதராபாத், மே 19-**

தெலுங்கானாவில் நக்சலைட்டுகள் 20 பேரை போலீசார் கைது செய்தனர். அவர்களிடமிருந்து வெடி மருந்துகள், ஆயுதங்கள் உள்ளிட்டவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

சத்தீஸ்கர்-தெலுங்கானா எல்லையில், நக்சலைட்டுகள் பதுங்கி இருப்பதாக உளவுத்துறை அதிகாரிகளுக்கு தகவல் வந்தது. அதன்படி, தெலுங்கானா மாநிலம், முலுகு மாவட்டத்தில் வாகன சோதனைகள் மற்றும் ரோந்து பணிகளில் போலீசார் ஈடுபட்டனர். அப்போது நக்சலைட்டுகள் 20 பேரை போலீசார் கைது செய்தனர். அவர்களிடமிருந்து வெடி மருந்துகள் மற்றும் ஆயுதங்களை போலீசார் பறிமுதல் செய்தனர். இதனால் நக்சலைட்டுகளின் சதித்திட்டம் முறியடிக்கப்பட்டுள்ளது.

சத்தீஸ்கர்-தெலுங்கானா எல்லையில் மாவோயிஸ்ட் கோட்டைகளை அகற்றுவதற்காக, 21 நாட்கள் ஒருங்கிணைந்த முயற்சியாக நடத்தப்பட்ட ''ஆபரேஷன் பிளாக் பாரஸ்ட்'' வெற்றிக்குப் பிறகு இந்தக் கைதுகள் நடந்துள்ளன.

# கார் பந்தயத்தில் நடிகர் அஜித்குமார் ஓட்டிச்சென்ற கார் டயர் வெடித்தது




**ஆம்ஸ்டர்டாம், மே 19-**

ஜிடி 4 ஐரோப்பிய கார் பந்தயத்தில் நடிகர் அஜித்குமார் ஓட்டிச்சென்ற காரின் டயர் வெடித்ததால் பரபரப்பு நிலவியது.

நெதர்லாந்தில் ஜிடி 4 ஐரோப்பிய கார் பந்தயம் மே 17-ம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. இதில் நடிகர் அஜித்குமார் போர்ஷியா அணி சார்பில் பங்கேற்றார். இந்தப் போட்டியின் இரண்டாவது சுற்று நேற்று தொடங்கியது. இந்த நிலையில் அஜித்குமார் ஓட்டிச் சென்ற காரின் டயர் திடீரென வெடித்தது. இதனால் கட்டுப்பாட்டை இழந்த அவரது கார் விபத்தில் சிக்கியதாகக் கூறப்படுகிறது. இருப்பினும் இந்த விபத்தில் நடிகர் அஜித்குமாருக்கு எந்த பாதிப்பும் இல்லை என தகவல் தெரியவந்துள்ளது. கார் ட்ராக் சர்க்யூட்டில் நின்ற பிறகு, டயர் மாற்றப்பட்டு மீண்டும் பந்தயத்தில் அஜித் பங்கேற்றார்.

# தமிழ்நாட்டில் 18 பேருக்கு கொரோனா தொற்று

**சென்னை, மே 19-**

தமிழ்நாட்டில் 18 பேர் கொரோனா தொற்றுக்கு ஆளாகி இருப்பது தெரியவந்துள்ளது.

சிங்கப்பூர், தாய்லாந்து நாடுகளில் கொரோனா பரவல் மீண்டும் அதிகரித்து வருகிறது. இந்தியாவிலும் கொரோனா பரவல் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பரிசோதனை நடத்தியதில் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் 18 பேர் கொரோனா தொற்றுக்கு ஆளாகி இருப்பது தெரிய வந்துள்ளது.

இது தவிர புதுச்சேரியில் 13 பேரும், கேரளாவில் 15 பேரும், கர்நாடகாவில் 4 பேரும், மகாராஷ்டிராவில் 7 பேரும், டெல்லியில் ஒருவரும் பாதிக்கப்பட்டுள்ளனர். வீரியமில்லாத கொரோனா என்பதால் பொதுமக்கள் அச்சப்பட தேவை இல்லை என்றும் பொது சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

# தஞ்சாவூரில் நாட்டு வெடி குடோனில் தீ விபத்து; இருவர் பலி

**தஞ்சாவூர், மே 19-**

தஞ்சாவூரில் நாட்டு வெடி குடோனில் ஏற்பட்ட தீ விபத்தில் இரண்டு பேர் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது. தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை அருகே நாட்டு வெடி குடோனில் தீ விபத்து ஏற்பட்டது. இதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்பு படையினர் நீண்ட நேரம் போராடி தீயை அணைத்தனர். இந்த விபத்தில் ரியாஷ் 22, சுந்தர் ராஜ் 60, ஆகிய இருவர் உயிரிழந்தனர். இவர்களது உடலை மீட்ட போலீசார் பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். தீ விபத்தில் குடோனில் இருந்த வெடிகள், அட்டை பெட்டிகள் சேதமடைந்தது. விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடந்து வருகிறது.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....




**பா.**ஜ.க.வுடன் கூட்டணி இல்லை என தமிழக வெற்றிக் கழகம் அதிகாரபூர்வமாக இதுவரை அறிவிக்கவில்லை. த.வெ.க. தலைவர் விஜய் இதுவரை எதுவும் சொல்லவில்லை. எனவே மற்றவர்களின் கருத்து குறித்து பதில் கூற முடியாது. எங்கள் கூட்டணியில் உள்ள கட்சிகள் அனைவரும் மகிழ்ச்சியாக உள்ளனர்.

**- தமிழிசை**




**ம**தவாத சக்திகளை உறுதியாக எதிர்க்கும் தலைமையாக தி.மு.க. உள்ளது. அதனால் தி.மு.க. கூட்டணியில் உள்ளோம். கூட்டணியில் சில ஏமாற்றங்கள் இருப்பதை மறுப்பதற்கில்லை. தமிழகத்தின் எதிர்காலம் கருதி தி.மு.க கூட்டணியில் உள்ளோம். தி.மு.க. கூட்டணி அல்லது அ.தி.மு.க. கூட்டணி ஆட்சி அமைக்கும் என்ற நிலைதான் தமிழகத்தில் உள்ளது.

**- துரை வைகோ**



**நி**லுவையில் உள்ள மின் திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் தான் மின்வாரியத்தை லாபத்தில் இயக்க முடியும். எனவே, ஜூலை மாதம் முதல் மின் கட்டணத்தை உயர்த்தும் திட்டத்தை அரசு கைவிட வேண்டும். மாறாக, மின் திட்டங்களை விரைவுபடுத்துவது உள்ளிட்ட சீர்திருத்தங்களை மின்வாரியம் மேற்கொள்ள வேண்டும்.

**- ராமதாஸ்**



**ந**ம் நாடு இக்கட்டான பிரச்சினையில் இருக்கும்போது மத்திய அரசு நாட்டு மக்களின் உதவியை நாடுகிறது. உதவியை நாடும்போது நீங்கள் என்ன பதில் கூற முடியும். அனைத்துக்கட்சி தூதுக்குழுவில் இடம்பெற்றதில் அரசியல் இருப்பதாக நான் பார்க்கவில்லை. நாம் அனைவரும் இந்தியர்கள்.

**- சசிதரூர்**

# வேதாரண்யம் அருகே மருதூரில் 10, 12ம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் மாநில, மாவட்ட அளவில் சாதனை புரிந்த மாணவர்கள்

## அமைச்சர் அன்பில் மகேஷ் ரொக்கப்பரிசு வழங்கி பாராட்டு



**வேதாரண்யம்,மே.19-**

வேதாரண்யம் அருகே மருதூரில் 10, 12ம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் மாநில மாவட்ட அளவில்; சாதனை புரிந்த மாணவர்களுக்கு பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் திமுக சார்பில் சால்வை அணிவித்து புத்தகம் மற்றும் ரொக்கபரிசு வழங்கி பாராட்டினார்

வேதாரண்யம் பகுதியைச் சேர்ந்த தனியார் மற்றும் அரசு பள்ளி மாணவ மாணவிகள் பத்தாம் வகுப்பு பொது தேர்வில் மாநில அளவில் மூன்றாம் இடமும் 10, மற்றும் 12ம் வகுப்பு பொதுத்;; தேர்வுகளில் நாகை மாவட்ட அளவிலும் முதல் மூன்று இடங்களை பெற்றனர்

இந்த நிலையில் வேதாரண்யம் அருகே மருதூரில் உள்ள மேற்கு ஒன்றிய திமுக கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் 497 மதிப்பெண்கள் பெற்று மூன்றாம் இடம் பெற்ற பஞ்சநதிக்குளம் விக்டரி தனியார் பள்ளி மாணவர் சக்தீஸ்வர், பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களை பெற்ற கருப்பம்புலத்தை சேர்ந்த மதுமிதா, அனுஷா, பஞ்சநதிக்குளத்தைச் சேர்ந்த அமிர்தவர்ஷினி, ஆயக்காரன்புலத்தைச் சேர்ந்த மோனிஷா, இராசன் கட்டளையைச் சேர்ந்த அசுவர்த்தன் ஆகியோருக்கும் பிளஸ்2, பொதுத் தேர்வுகளில் மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களை பெற்ற ஆயக்காரன்புலத்தைச் சேர்ந்த சோனா, அபிதாஸ்ரீ, ரமணி ஆகியோருக்கும் மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் சால்வை அணிவித்து புத்தகம் மற்றும் ரொக்கப் பரிசுகளை வழங்கி பாராட்டினார்

இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகத் தலைவர் கௌதமன், மேற்கு ஒன்றிய திமுக செயலாளர் உதயம்முருகையன், வேதாரண்யம் நகராட்சித் தலைவர் புகழேந்தி தலைஞாயிறு ஒன்றிய செயலாளர் மகாகுமார், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் துரைராஜ், சுப்புராமன் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் மாணவ மாணவிகளின் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்

பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பத்தாம் வகுப்பு மற்றும் பனிரெண்டாம் வகுப்பு பொது தேர்வுகளில் வெற்றி பெற்று சாதனை புரிந்த மாணவருடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார் பின்னர் மாணவ மாணவிகள் அமைச்சருடன் செல்பி புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.



**அரியலூரில் புதிதாக ரூ 11.58 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் நகராட்சி பேருந்து நிலையத்தின் கட்டுமான பணிகளை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, போக்குவரத்து துறை மற்றும் மின்சார துறை அமைச்சர் சா. சி. சிவசங்கருடன் நேரில் சென்று நேற்று பார்வையிட்டு, பணிகளின் தற்போதைய நிலை குறித்தும், மேலும் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளின் விபரம் குறித்தும் அரசு அலுவலர்களிடம் கேட்டறிந்து ஆய்வு மேற்கொண்டார்.இந்நிகழ்வில், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் சொ.க.கண்ணன், அரியலூர் நகராட்சி ஆணையர் (பொ)அசோக்குமார்,நகராட்சி பொறியாளர் விஜய் கார்த்திக், அரசு அலுவலர்கள், மாநில திமுக சட்டதிட்ட திருத்தக் குழு இணைச் செயலாளர் சுபா.சந்திரசேகர், நகர பொருளாளர் மா இராஜேந்திரன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.**

# பிளஸ்-2 தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவி அமைச்சரிடம் வாழ்த்து



**அரியலூர்,மே.19-**

அரியலூர் நகரைச் சேர்ந்தவர் பிரசன்னா தேவி மகள்ஆர். ஷிவானி(17). மாற்றுத்திறனாளியான இவர் அரியலூர் சிஎஸ்ஐ பள்ளியில் பிளஸ்2 படித்து பொதுத்தேர்வை எழுதினார். முடிவுகள் வெளியானதில் 55 சதவீதம் மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெற்றார்.

இதையடுத்து மாநில போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சரும், திமுக அரியலூர் மாவட்டச் செயலாளருமான எஸ்.எஸ்.சிவசங்கரை, தனது தாய் பிரசன்னா தேவியுடன் சந்தித்து வாழ்த்துப்பெற்றார். நிகழ்வின் போது, அரியலூர் அண்ணா நகர் சாய்பாபா பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் எஸ்.எம்.சந்திரசேகர், பள்ளியின் தாளாளர் புனிதவதி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# வேதாரண்யம் அருகே பகடமங்களம் புனித அருளானந்தர் ஆலய ஆண்டு பெருவிழாவையொட்டி சப்பர தேர்பவனி



**வேதாரண்யம்,மே.19-**

வேதாரண்யம் அருகே நீர்முளை பகடமங்களம் புனித அருளானந்தர் ஆலய ஆண்டு பெரு வி ழா வை யொட்டி கொட்டும் மழையில் சப்பர பவனி பேண்டு வாத்தியங்கள் முழங்க வாணவேடிக்கை நிகழ்ச்சிகளுடன் நடைபெற்றது

புனித அருளானந்தர் ஆலய ஆண்டு பெருவிழா கடந்த 8-ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி நடைபெற்று வந்தது கடந்த ஒன்பது நாட்களாக நடைபெற்ற வந்த விழாவின் முக்கிய நிகழ்ச்சியாக இரவு ஆலயத்தில் பங்கு தந்தை அகஸ்டின் அம்புரோஸ் தலைமையில் சிறப்பு கூட்டுப் பாடற்திருப்பலி நிகழ்ச்சி நடைபெற்றது இதில் ஏராளமான கிறிஸ்துவர்கள் கலந்து கொண்டு ஜெபபாடல்களை பாடினர்

விழாவையொட்டி வண்ண மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட தனித்தனி சப்பரங்களில் புனித அருளானந்தர், புனித மைக்கேல் அதிதூதர், புனித சந்தனமாதா, ஆகியோரின் திருஉருவங்கள் தாங்கிய சப்பர பவனி ஊர்வலம் கொட்டும் மழையில் பேண்டு வாத்தியங்கள் முழங்க வாணவேடிக்கை நிகழ்ச்சிகளுடன்;; முக்கிய வீதிகளில் நடைபெற்றது விழாவில் கிறிஸ்துவர்களுடன், இந்து சமுதாயத்தினரும் சமய வேறுபாடின்றி கலந்து கொண்டு மாலை, சாம்பிராணி, மெழுகுபர்த்தி ஆகியவற்றை வழங்கி வழிபட்டனர்



**தஞ்சாவூர் மாவட்டம் தென்னகப்பண்பாட்டு மையத்தில் நடைபெற்ற சலங்கைநாதம் நிறைவு விழாவில் கலந்துகொள்ள வருகை தந்த தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி கண்காட்சியினை பார்வையிட்டார். கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம் மற்றும் பலர் உடன் உள்ளனர்.**

# திருச்செங்காட்டங்குடி உத்தராபதீஸ்வரர் கோயிலில் செண்பகப்பூ திருவிழா

**நாகப்பட்டினம்,மே.19-**

நாகை மாவட்டம் திருச்செங்காட்டங்குடி உத்தராபதீஸ்வரர் கோயிலில் செண்பகப்பூ திருவிழா ஞாயிற்று கிழமை நடைப்பெற்றது.

நாகை மாவட்டம் திருமருகல் அருகே திருச்செங்காட்டங்குடியில் உத்தராபதீஸ்வரர் கோயில் அமைந்துள்ளது. பல்வேறு சிறப்பு பெற்ற இந்த கோயிலில் ஆண்டுதோறும் சித்திரை பரணி பெருவிழாவான அமுது படையல் விழா 10 நாட்கள் நடைபெற்றது. இதை தொடர்ந்து 15 நாட்கள் நடைபெறும் செண்பகப்பூ திருவிழா சனிக்கிழமை தொடங்கியது. இதையொட்டி காலை 10 மணிக்கு உத்தராபதீஸ்வரர் சாமிக்கு சிறப்பு அபிஷேகமும், மதியம் சாமி வெள்ளை சாத்தி புறப்பாடும் நடைபெற்றது. இரவு சாயரட்சை தீபாராதனையும், சர்க்கரை பொங்கல் பாவாடை நிவேதனமும் நடைபெற்றது.

நள்ளிரவில் வடக்கு வீதியில் ஐயடிகள் காடவர்கோன் மகாராஜாவுக்ககு சாமி செண்பகப்பூ வாசனையுடன் காட்சி கொடுத்தருளல் நிகழ்ச்சி நடைபெற்றது. விழாவில் பக்தர்களுக்கு வேளாக்குறிச்சி ஆதீனம் 18-வது குருமகா சன்னிதானம் சத்தியஞான மகாதேவ தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அருளாசி வழங்கினார். இதில் ஆதீன இளவரசு அஜபாநடேஸ்வர சுவாமிகள், கோயில் பொருளாளர் சுதாகர் மற்றும் கோவில் நிர்வாகிகள் அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்தனர். இந் நிகழ்ச்சிக்கு மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து திரளான பக்தர்கள் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

# கிருஷ்ணகிரி மாவட்டம் சாலிவரம் கிராமத்தில் எள் மற்றும் சூரியகாந்தி உற்பத்தி மேம்பாட்டு தொழில்நுட்பம் குறித்து பயிற்சி மையம்

## கலெக்டர் ச.தினேஷ் குமார் நேரில் பார்வையிட்டார்

**கிருஷ்ணகிரி,மே.19-**

கிருஷ்ணகிரி மாவட்டம், தளி ஊராட்சி ஒன்றியம், சாலிவரம் கிராமத்தில் வேளாண் மைத் து றை யின் மூலம் மாநில விரிவாக்க திட்டங்களின் உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் (அட்மா) 2025-26-ம் ஆண்டிற்கான கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் எள் மற்றும் சூரிய காந்தி உற்பத்தி மேம்பாட்டு தொழில்நுட்பம் குறித்து விவசாயிகளுக்கு நடைபெற்ற பயிற்சி மற்றும் கலெக்டர் ச.தினேஷ் குமார் 17.05.2025 அன்று பார்வையிட்டு விவசாயிகளுடன் கலந்துரையாடினார்.

கலெக்டர் தெரிவிக்கும் போது:

கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் எள் மற்றும் சூரிய காந்தி உற்பத்தி மேம்பாட்டு தொழில்நுட்பம் குறித்தும் வேளாண்மையை ஊக்குவிக்கும் வகையில் பஞ்சகாவ்யா, இயற்கை பூச்சி விரட்டி, மீன் அமிலம், ஜீவாமிர்தம், அமிர்தக்கரைசல், கனஜீவாமிர்தம், அமிர்தக் கரைசல், இற்கை பூச்சி விரட்டி, வேப்பங் கொட்டை கரைசல், பூண்டுக் கசைல் மண்புழு உரம் ஆகியவற்றின் பயன்பாடுகள் பற்றியும் உபயோகப்படுத்தும் முறைகள் பற்றியும் விவசாயிகளுக்கு வேளாண்மைத்துறை அலுவலர்கள் விரிவாக கூறியுள்ளனர்.

பாரத பிரதமரின் விவாசாயிகளுக்கான கௌரவ நிதி திட்டத்தில் நில உடைமை மற்றும் இகேஒய்சி பதிவேற்றம், வங்கி கணக்குடன் ஆதார் எண்ணை இணைக்காத விவசாயிகள் சம்பந்தப்பட்ட வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தையோ அல்லது பொது சேவை மையத்தையோ அணுகி பதிவேற்றம் செய்யலாம். நில உடைமை பதிவேற்றம் செய்யாத விவசாயிகள் தாமதிக்காமல் நில உடைமை பதிவேற்றம் செய்து தொடர்ந்து இத்திட்டத்தில் பயன்பெற வேண்டும். பயிர்களுக்கு தேவைப்படும் நுண்ணூட்டச்சத்து மேலாண்மை முறைகளான பற்றாக்குறையின் அறிகுறிகள், நிவர்த்தி முறைகள் பற்றியும், அட்மா திட்டத்தின் பயன்பாடுகள் குறித்து வேளாண்மைத்துறை அலுவலர்கள் எடுத்துரைத்துள்ளனர். எனவே விவசாய பெருமக்கள் தொழில்நுட்பங்களை பயன்படுத்தி நல்ல மகசூலை பெற வேண்டும் என கலெக்டர் ச.தினேஷ் குமார் தெரிவித்தார்.




**மயிலாடுதுறை கிட்டப்பா அங்கிட்டு முன்பாக தமிழக வெற்றி கழகத்தின் சார்பாக முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை முன்னிட்டு மாவட்டச் செயலர் குட்டி கோபி தலைமையில் மெழுகுவர்த்தி ஏந்தி அஞ்சலி செலுத்தினார். இதில் நகர செயலாளர் ராஜ்குமார், ஒன்றிய செயலாளர்கள் ரவி, கமல், ராஜ்குமார், மனோகரன் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.**

# தருமபுரி மாவட்டம் பாலக்கோடு அரசு மருத்துவமனையில் நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள், அடிப்படை வசதிகள்: கலெக்டர் ரெ.சதீஸ் ஆய்வு

**தருமபுரி,மே.19-**

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு அரசு மருத்துவமனையில் நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள், அடிப்படை வசதிகள் குறித்து கலெக்டர் ரெ.சதீஸ், ஆய்வு மேற்கொண்டார்.



பாலக்கோடு அரசு மருத்துவமனையில் புற நோயாளிகள் பிரிவு, நோயாளிகள் பதிவு செய்யும் இடம், நோயாளிகளுக்கு வழங்கப்படும் உணவு தயாரிப்பு இடம் மற்றும் மருந்தகம் உள்ளிட்ட சிகிச்சை பிரிவுகளுக்கு சென்று கலெக்டர் ஆய்வு மேற்கொண்டு, நோயாளிகள் பதிவு செய்யும் பிரிவில் பதிவு விவரம், பதிவுகள் மேற்கொள்ளும் பணிகள் குறித்து பணியாளர்களிடம் கேட்டறிந்தார்.

இதனை தொடர்ந்து, தீவிர சிகிச்சை பிரிவு, அவசர கால பிரிவு, இயல்முறை சிகிச்சை பிரிவு, எலும்பு முறிவு சிகிச்சை பிரிவு, பொது மருத்துவம், பெண்கள் நலப்பிரிவு, மயக்கவியல் பிரிவு, குழந்தைகள் நலப்பிரிவு, விஷ முறிவு சிகிச்சைகள் மற்றும் விஷ முடிவு சிகிச்சைகளுக்கான மருந்துகள் இருப்பு உள்ளிட்ட பிரிவுகளில் ஆய்வு செய்து, நோயாளிகளுக்கு வழங்கப்படும் சிகிச்சைகள் பற்றி மருத்துவ அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

மேலும், சிகிச்சை பெறபவர்களின் உதவியாளர்கள் காத்திருக்கும் இடத்தினை ஆய்வு செய்து, அமர்வதற்கான உரிய ஏற்பாடுகளை மருத்துவனையில் ஏற்படுத்தி தர வேண்டும் என அறிவுறுத்தினார்.

புற நோ யா ளி க ளுக்கு வழங்கப்படும் சிகிச்சை முறைகள், மருத்துவமனைகளை தூய்மையாக பராமரித்தல் குறித்தும் குடிநீர், மின்சாரம், கழிவறை உள்ளிட்ட அடிப்படை தேவைகளை சரியான முறையில் வழங்க மருந்துவர்கள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும், . மேலும், மருத்துவமனையினையும், வளாகத்தினையும் தூய்மையாக வைத்துகொள்ள வேண்டும் எனவும் கலெக்டர் அறிவுரை வழங்கினார்.

தருமபுரி மாவட்டத்தில் வெயிலின் தாக்கம் அதிகமாக இருக்கும் காரணத்தால் பொதுமக்கள் பாதுகாப்பாக இருக்கும் படியும், நீர் ஆகாரங்களை அதிகமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் கலெக்டர் கேட்டுக்கொண்டார். மேலும், பொதுமக்கள் வெளியே செல்லும்போது கோடை வெயிலிருந்து பாதுகாத்துகொள்ள குடை, தண்ணீர் பாட்டில் உள்ளிட்ட முன்னேற்பாடுகளை செய்து கொள்ள வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வுகளின்போது இணை இயக்குநர் (மருத்துவம்) மரு.சாந்தி, மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவமனை பணியாளர்கள் உடனிருந்தனர்.

# பெரம்பலூர் மாவட்டத்தில் நடைபெற்று முடிந்த வருவாய்த் தீர்வாயம் நிகழ்வுகளில் 692 மனுக்களுக்கு உடனடி தீர்வு காணப்பட்டுள்ளது

## மாவட்ட வருவாய் அலுவலர் தகவல்

**பெரம்பலூர்,மே.19-**

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள குன்னம், வேப்பந்தட்டை, ஆலத்தூர் ஆகிய வட்டங்களில் 1434-ஆம் பசலிக்கான வருவாய் தீர்வாயத்தின் (ஜமாபந்தி) கடைசி நாள் நிகழ்வு (17.05.2025) நடைபெற்றது.

குன்னம் வட்டாட்சியர் அலுவலகத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மு.வடிவேல் பிரபு தலைமையில் வரகூர் குறுவட்ட பகுதிக்கு உட்பட்ட ஒலைப்பாடி (கிழக்கு), ஒலைப்பாடி (மேற்கு), பரவாய் (மேற்கு), பரவாய் (கிழக்கு), புதுவேட்டக்குடி, துங்கபுரம் (வடக்கு), துங்கபுரம் (தெற்கு), காடூர் (வடக்கு), காடூர் (தெற்கு), கொளப்பாடி, வரகூர், குன்னம், பெரியம்மாபாளையம், பெரியவெண்மணி (மேற்கு) மற்றும் பெரிய வெண்மணி (கிழக்கு) ஆகிய கிராமங்களுக்காக நடைபெற்ற வருவாய் தீர்வாயத்தில் பொதுமக்கள் தங்களது பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 120 மனுக்களை அளித்தனர்.

வேப்பந்தட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் சார் கலெக்டர் சு.கோகுல்,இ.ஆ.ப., தலைமையில் வாலிகண்டபுரம் குறுவட்ட பகுதிக்கு உட்பட்ட தொண்டபாடி, நெய்குப்பை, அனுக்கூர், பிரம்மதேசம், மேட்டுப்பாளையம் (தெற்கு), மேட்டுப்பாளையம் (வடக்கு), பிம்பலூர், வி.களத்தூர், பேரையூர், எறையூர், தேவையூர் (வடக்கு), தேவையூர் (தெற்கு) மற்றும் வாலிகண்டபுரம் ஆகிய கிராமங்களுக்காக நடைபெற்ற வருவாய் தீர்வாயத்தில் பொதுமக்கள் தங்களது பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 86 மனுக்களை அளித்தனர்.

ஆலத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) சொர்ணராஜ் தலைமையில் கூத்தூர் குறுவட்ட பகுதிக்கு உட்பட்ட தொண்டபாடி, மேலமாத்தூர், அழகிரி பாளையம், ஆதனூர்(வடக்கு), ஆதனூர் (தெற்கு), கூடலூர், கூத்தூர், புஜங்கராயநல்லூர், நொச்சிக்குளம், திம்மூர், சில்லக்குடி (தெற்கு), சில்லக்குடி (வடக்கு) மற்றும் ஜமீன் ஆத்தூர் ஆகிய கிராமங்களுக்காக நடைபெற்ற வருவாய் தீர்வாயத்தில் பொதுமக்கள் தங்களது பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 34 மனுக்களை அளித்தனர்.

பெரம்பலூர் மாவட்டத்தில் கடந்த 3 நாட்களாக நடைபெற்று முடிந்துள்ள வருவாய்த் தீர்வாயம் (ஜமாபந்தி) நிகழ்வுகளில் 1,367 மனுக்கள் பெறப்பட்டு, 692 மனுக்களுக்கு உடனடி தீர்வு காணப்பட்டு இலவச வீட்டுமனைப் பட்டா, இயற்கை மரண உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

போக்குவரத்து விதிகளை மதிக்கவும்

# ஒசூர் அருகே புதிதாக கட்டப்பட்ட பகுதி நேர நியாயவிலைக்கடை

## எம்எல்ஏ பிரகாஷ் திறந்து வைத்தார்

**கிருஷ்ணகிரி,மே.19-**

கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் ஒன்றியம், ஒன்னல்வாடி ஊராட்சிக்குட்பட்ட லட்சுமி நரசிம்ம நகரில் புதியதாக கட்டப்பட்ட பகுதி நேர நியாயவிலைக்கடை திறப்பு விழா நடைப்பெற்றது.. ஒசூர் சட்டமன்ற உறுப்பினரும், திமுக மாவட்ட செயலாளருமான பிரகாஷ் பங்கேற்று ரிப்பன் வெட்டி தொடக்கி வைத்த அவர் குடும்ப அட்டைதாரர்களுக்கு உணவு பொருட்களை வழங்கினார்

இந்நிகழ்ச்சியில் ஒசூர் மேயர் சத்யா, துணை மேயர் ஆனந்தய்யா, முன்னாள் கவுன்சிலரும், மாவட்ட பிரதிநியுமான ரமேஷ் உள்ளிட்ட திமுகவினர் பலரும் பங்கேற்றிருந்தனர்..



வளசரவாக்கம் மண்டலம் 144-வது வார்டு மதுரவாயல், பெருமாள் கோயில் தெருவில் ரூ.86 லட்சத்து 7 ஆயிரம் மதிப்பீட்டில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணியை காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ தொடங்கி வைத்தார். உடன் மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், மாமன்ற உறுப்பினர் எம்.இ.ஸ்டாலின், மாவட்ட பிரதிநிதி கே.ராஜ்குமார் மற்றும் பலர் உள்ளனர்

# கும்மிடிப்பூண்டி மாணவி யோகாவில் மூன்று உலக சாதனை

**கும்மிடிப்பூண்டி,மே.19**

கும்மிடிப்பூண்டி பகுதியை சேர்ந்த, ஒன்பது வயது பள்ளி சிறுமி, ஒரு நிமிடத்தில், 28 முறை சுக்கராசனத்தில் சுழன்று, மூன்று புதிய உலக சாதனைகளை படைத்தார்.கும்மிடிப்பூண்டி பகுதியை சேர்ந்த நரேஷ்குமார், லட்சுமி தம்பதியர் மகள் ந.இந்துஸ்ரீ, 9. அங்குள்ள மதன் லால் கெமானி விவேகானந்தா வித்யாலயா பள்ளியில், ஐந்தாம் வகுப்பு படித்து வருகிறார்.

கும் மி டிப் பூண் டி யில் இயங்கி வரும் ஸ்ரீ சங்கரி யோகா பயிற்சி மையத்தில், யோகாசனம் பயின்று வருகிறார்.



நேராக நின்று, உடலை பின் நோக்கி வளைத்து தரையில் கைகளை வைத்தபடி நிற்பது சக்கராசனமாகும். சிறுமி இந்துஸ்ரீ, சக்கராசனத்தில், கைகளை தரைகளில் வைத்தபடி உடலை மட்டும், ஒரு நிமிடத்தில், 28 முறை சுழன்று சாதனை படைத்தார்.

இவரது சாதனை இன்டர்நேஷனல் புக் ஆப் ரெக்கார்ட்ஸ் இன்டர்நேஷனல் யோகா புக் ஆப் ரெக்கார்ட்ஸ் வேல்ட்வயட் புக் ஆப் ரெக்கார்ட்ஸ் ஆகிய மூன்று உலக சாதனை புத்தகங்களில் இடம் பிடித்தது.

சாதனை படைத்த சிறுமி இந்துஸ்ரீ மற்றும் பயிற்சியாளர் சந்தியா ஆகியோரை கும்மிடிப்பூண்டி பகுதி மக்கள் வெகுமாக பாராட்டி வருகின்றனர்.

# ராஜமங்கலம் பகுதியில் கார் ஓட்டுநர் கொலையில் ஒருவர் கைது

**சென்னை மே 19-**

சென்னை, கே.கே.நகர், ராணி அண்ணாநகர் பகுதியில் வசித்து வந்த அமித்பாஷா, என்பவர் கார் ஓட்டுநராக வேலை செய்து வந்தார். அமித்பாஷா, கொளத்தூர், 200 அடி ரோட்டில் உள்ள அவரது நண்பர் ஷேக் அப்துல்லாவின் டீக்கடைக்கு அடிக்கடி சென்று சந்தித்து பேசிவந்துள்ளார். கடந்த வாரம் அமித்பாஷா அவரது நண்பர் ஷேக் அப்துல்லாவின் மனைவியை பற்றி தவறாக பேசியுள்ளார்

இதனால் இருவருக்குமிடையே தகராறு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் நேற்று முன் தினம் மதியம் அமித்பாஷா நண்பர் ஷேக் அப்துல்லாவின் டீக்கடைக்கு சென்று பேசிக்கொண்டிருந்த போது, ஷேக் அப்துல்லா, அமித்பாஷாவிடம் ஏன் எனது மனைவியை பற்றி தவறாக பேசினாய் என கேட்ட போது அவர்களுக்குள் ஏற்பட்ட வாக்குவாதம் முற்றியதில் ஆத்திரமடைந்த ஷேக்அப்துல்லா மேற்படி அமித்பாஷாவை கத்தியால் குத்தி விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார். இரத்த காயமடைந்த அமித்பாஷாவை அருகிலிருந்தவர்கள் மீட்டு ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்துள்ளனர். பரிசோதனை செய்த மருத்துவர்கள் அமித்பாஷா வரும் வழியிலேயே இறந்துவிட்டதாக தெரிவித்தனர். இது குறித்து அமித்பாஷாவின் தந்தை காசிம், என்பவர் இராஜமங்கலம் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் கொலை வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

இராஜமங்கலம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, கொலை வழக்கில் தொடர்புடைய எதிரி ஷேக் அப்துல்லா, என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 1 கத்தி பறிமுதல் செய்யப்பட்டது.

# சாலையில் ஏற்பட்ட திடீர் பள்ளம் - சீரமைப்பு பணிகள் தீவிரம்

**சென்னை மே 19-**

சென்னை திருவான்மியூர்-தரமணி சாலையில் நேற்று முன் தினம் வாகனங்கள் சென்று கொண்டிருந்தபோது திடீரென பெரிய பள்ளம் ஏற்பட்டது. இதில் பள்ளத்தில் வெள்ளை ஒன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் காரில் இருந்தவர்கள் சிறு காயங்களுடன் உயிர் தப்பினர். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இதற்கிடையே, மெட்ரோ ரெயில் பணிகளால் சாலையில் பள்ளம் ஏற்பட்டதாக தகவல் பரவியது.இதுதொடர்பாக மெட்ரோ ரெயில் நிர்வாகம் அளித்த விளக்கத்தில்,சாலையில் ஏற்பட்ட திடீர் பள்ளத்திற்கும் மெட்ரோ ரெயில் சுரங்கப் பணிகளுக்கும் எந்த தொடர்பும் இல்லை.

விபத்து நடந்த இடத்தில் இருந்து 300 மீட்டர் தொலைவில் தான் மெட்ரோ ரெயில் பணிகள் நடைபெற்று வருகிறது என்று தெரிவித்து உள்ளது.

இந்த நிலையில் திருவான்மியூர்- தரமணி சாலையில் திடீரென ஏற்பட்ட பள்ளத்தை சீரமைக்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

# பெரியமேடு பகுதியில் மதுபாட்டில்கள் பதுக்கி வைத்து விற்பனை 2 பேர் கைது: 27 மதுபாட்டில்கள் பறிமுதல்

**சென்னை மே 19-**

பெரியமேடு காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், காவல் குழுவினர் நேற்று (முன் தினம் காலை, பெரியமேடு, எம்.எச் .ரோடு 4வது தெருவில் கண்காணித்து, அங்கு சட்டவிரோதமாக மதுபாட்டில்களை பதுக்கி வைத்து விற்பனை செய்த 1.பரஞ்சோதி, 2.சசிகலா, ஆகிய 2 பேரை கைது செய்தனர்.

அவர்களிடமிருந்து 180 மி.லி. அளவு கொண்ட 27 மதுபாட்டில்கள் மற்றும் பணம் ரூ.600/- பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் எதிரி பரஞ்சோதி மீது ஏற்கனவே பெரியமேடு மற்றும் வேப்பேரி காவல் நிலையங்களில் சட்டவிரோத மதுபாட்டில்கள் விற்பனை, கஞ்சா உட்பட 9 குற்ற வழக்குகள் உள்ளதும், மற்றொரு எதிரி சசிகலா மீது 1 சட்டவிரோத மதுபாட்டில் விற்பனை வழக்கும் உள்ளது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.

# எஸ்பிளனேடு பகுதியில் குட்கா புகையிலை பொருட்களை விற்பனைக்காக பதுக்கி வைத்திருந்த 2 பேர் கைது

**சென்னை மே 19-**

சென்னை பெருநகர காவல், எஸ்பிளனேடு காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், காவல் குழுவினர் நேற்று முன் தினம் பிராட்வே ரோட்டில் கண்காணித்து, அங்கு கையில் பையுடன் நின்று கொண்டிருந்த நபரை பிடித்து சோதனை செய்த போது அவர் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட குட்கா புகையிலை பாக்கெட்டுகளை பதுக்கி வைத்து விற்பனை செய்தது உறுதி செய்யப்பட்டது. அதன்பேரில், சட்டவிரோதமாக குட்கா புகையிலை பாக்கெட்டுகள் பதுக்கி வைத்து விற்பனை செய்தது தொடர்பாக எஸ்பிளனேடு காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்து, எதிரி 1.மகேஷ்குமார் குப்தா, என்பவரை கைது செய்தனர். கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக் குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers No. 1 Santhanapuram, Madurai-Trichy 4 Way Main Road, Nagamangalam, Trichy-620 012
Ph: 0431-2680969
E-Mail: trichyedi@thinaboomi.com
RNI.Regn No.61511/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

கோவை மாவட்டம், மருதமலையில்

# 184 அடி உயரமுள்ள முருகன் சிலை,புதிய பாலிடெக்னிக் கல்லூரி அமைக்கப்படும் இடங்கள்: அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேரில் ஆய்வு செய்தார்

**சென்னை மே 19-**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு கோயம்புத்தூர் மாவட்டம், தொண்டாமுத்தூர் மாரியம்மன் மற்றும் பெரிய விநாயகர் திருக்கோயில் திருக்குடமுழுக்கு நன்னீராட்டுப் பெருவிழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார். அதனைத் தொடர்ந்து பேரூர், அருள்மிகு பட்டீசுவரர் சுவாமி திருக்கோயிலில் ரூ. 13.02 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள அன்னதானக் கூடம், பசுமடம், தர்ப்பண மண்டபங்கள் மற்றும் இதர கட்டுமானப் பணிகளை திறந்து வைத்தார்.



அதனைத் தொடர்ந்து, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் மருதமலை, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் அடிவாரத்தில் 184 அடி உயரம் கொண்ட முருகன் சிலை அமைக்கப்படவுள்ள இடத்தினையும், சட்டமன்ற அறிவிப்பின்படி வடவள்ளி பகுதியில் புதிய பல்தொழில்நுட்ப கல்லூரி (பாலிடெக்னிக் கல்லூரி) அமைக்கப்படவுள்ள இடத்தினையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :

தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான சீர்மிகு ஆட்சியில் திருக்கோயில்களுக்கு குடமுழுக்குகள், பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள், அன்னதானக் கூடங்கள், தர்ப்பண மண்டபங்கள், பசுமட காப்பகங்கள் என அனைத்து பணிகளுக்கும் முக்கியத்துவம் அளித்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

கோவை மாவட்டம், பேரூர், அருள்மிகு பட்டீசுவர சுவாமி திருக்கோயிலுக்கு ஒரு கோடி ரூபாய் செலவில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு கடந்த பிப்ரவரி மாதம் குடமுழுக்கு மிகச்சிறப்பாக நடைபெற்றது. அதன் தொடர்ச்சியாக இத்திருக்கோயிலில் தமிழ்நாட்டில் எங்கும் இல்லாத வகையில் ஒரே நேரத்தில் 50 நபர்கள் அமர்ந்து தர்ப்பணம் செய்கின்ற வகையில் ரூ.11.85 கோடி செலவில் மிகப் பெரிய அளவில் தர்ப்பண மண்டபம், சுகாதார வளாகம், காத்திருப்புக் கூடம், தகவல் மையம், படித்துறை சீரமைப்பு, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் போன்றவை திருக்கோயில் நிதி மற்றும் உபயதாரர்களால் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், இத்திருக்கோயிலில் ரூ.55 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள அன்னதானக் கூடம், ரூ.51 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள பசுமடம், ரூ.11 லட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள பணியாளர்களுக்கான கழிப்பிட வசதி போன்றவை பயன்பாட்டிற்கு இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் இன்றைய தினம் 9 திருக்கோயில்களில் குடமுழுக்கு நடைபெற்றன. அதில் ஒன்றாக தொண்டாமுத்தூர் அருள்மிகு மாரியம்மன் மற்றும் பெரிய விநாயகர் திருக்கோயில் குடமுழுக்கு விழா வெகு விமரிசையாக நடைபெற்றது.

இவ்விழாவில் 20,000 மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டனர். தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சி பொறுப்பேற்ற இந்த நான்கு ஆண்டுகளில் 2,948 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. திருக்கோயில் திருப்பணிகளுக்கு உபயதாரர் நிதியாக ரூ.1,339 கோடி வரப்பெற்றுள்ளன. இவை திருப்பணிகளுக்கு முறையாக செலவிடப்படுகிறது.

அந்த வகையில் அருள்மிகு பட்டீசுவரசுவாமி திருக்கோயிலின் தர்ப்பண மண்டபம் கட்டுவதற்கு நிதியினை வழங்கிய அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் இத்துறையின் அமைச்சர் என்ற வகையில் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

மருதமலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் அடிவாரத்தில் ஆசியாவிலேயே மிக உயரமாக 184 அடியில் முருகன் சிலை அமைக்க தமிழ்நாடு முதலமைச்சர் அனுமதி அளித்துள்ளார்கள். அந்த சிலை அமைக்கும் பணிக்கான இடத்தினையும், இந்தாண்டு சட்டமன்ற அறிவிப்பின்படி வடவள்ளி பகுதியில் புதிய பல்தொழில்நுட்ப கல்லூரி (பாலிடெக்னிக் கல்லூரி) அமையவுள்ள இடத்தினையும் ஆய்வு செய்தோம். வெகுவிரைவில் முருகன் சிலை அமைக்கும் பணிக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கோவை மாவட்ட ஆட்சியர் பவன்குமார் க. கிரியப்பனவர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நா.கார்த்திக், இந்து சமய அறநிலையத் துறை இணை ஆணையர் பி. இரமேஷ், மருதமலை அறங்காவலர் குழுத் தலைவர் ஜெயக்குமார், துணை ஆணையர்கள் ஆர்.விஜயலட்சுமி, இரா.செந்தில் குமார், உதவி ஆணையர்கள் பி.இந்திரா, கா.விமலா, யு.எஸ்.கைலாசமூர்த்தி, செயற்பொறியாளர் ரேவதி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கார் வாடகை பாக்கி விவகாரம்:

# ஆபீசில் புகுந்து மேலாளர் மீது தாக்குதல்: டிரைவர்கள் 2 பேர் கைது

**சென்னை மே 19-**

தனியார் டிராவல்ஸ் நிறுவன அலுவலகத்தில் புகுந்து மேலாளரை தாக்கிய டிரவைர்கள் 2 பேரை கைது செய்தனர். வாடகை பாக்கி விவகாரத்தில் இது நடந்துள்ளது. திருவள்ளூர் மாவட்டம் முதிலியார் தெருவை சேர்ந்தவர் சதீஷ்பாபு(49). இவர் சென்னை திருமங்கலத்தில் உள்ள தனியார் டிராவல்ஸ் நிறுவனத்தில் மேனேஜராக பணியாற்றி வருகின்றார். கடந்த 16ம்தேதி பணியில் இருந்தபோது 8 பேர் வந்துள்ளனர்.இதில் 4 பேர் அலுவலகத்தில் புகுந்து சதீஷ்பாபுவிடம் தகராறு செய்து அவரை சரமாரியாக தாக்கியுள்ளனர். பின்னர் வெளியே நின்றிருந்த 4 பேரும் வந்து அவரை அடித்து உதைத்துள்ளனர். இதை தடுத்த சக தொழிலாளர்களையும் அடித்து உதைத்துள்ளதாக தெரிகிறது. இதில் படுகாயம் அடைந்த சதீஷ்பாபு மயக்கம் அடைந்துள்ளார். உடனடியாக அவரை மீட்டு அங்குள்ள தனியார் மருத்துவமனையில் சேர்த்து தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.இதுசம்பந்தமாக தனியார் மருத்துவமனையில் இருந்து கொடுத்த தகவல்படி, திருமங்கலம் போலீசார் சென்று சதீஷ்பாபுவிடம் விசாரணை நடத்தினர். அப்போது சதீஷ்பாபு கூறியதாவது;

எங்க டிராவல்சில் பணியாற்றிவந்த பெரம்பூர் திருவிக.நகர் பகுதியில் சேர்ந்த டிரைவர்கள் மோகன்ராஜ்(39), சாதிக் பாஷா (41) ஆகியோருக்கு கார் வாடகை பாக்கி ஒரு லட்சத்து 30 ஆயிரம் இருந்ததால் அவற்றை கேட்பதற்கு வந்தனர். அப்போது 65 ஆயிரம் காசோலையாக கொடுத்தபோது வாங்காமல் தகராறு செய்ததுடன் என்னை தாக்கியதில் இடது கை எலும்பு முறிவு ஏற்பட்டு, ஒரு பல் உடைந்தது.இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுசம்பந்தமாக திருமங்கலம் போலீசார் வழக்குபதிவு செய்து அலுவலகத்தில் உள்ள சிசிடிவி காட்சிகளை ஆய்வு செய்து டிரைவர்கள் மோகன்ராஜ், சாதிக் பாஷா ஆகியோரை கைது செய்தனர். ''வாடகை பாக்கி பணத்தை தரவில்லை என்பதால் மேலாளரை தாக்கினோம்' என்று தெரிவித்தனர்.

இதன்பின்னர் 2 பேரையும் எழும்பூர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி புழல் சிறையில் அடைத்தனர். இதுசம்பந்தமாக 6 பேரை தேடி வருகின்றனர்.

# காசிமேடு பகுதியில் மனைவி மீது தாக்குதல்: கணவர் கைது

**சென்னை மே 19-**

சென்னை, காசிமேடு, எம்.ஜி.ஆர்.நகர் பகுதியில் ஜெயபிரியா, என்பவர் குடும்பத்துடன் வசித்து வருகிறார். சம்பவதன்று ஜெயபிரியா தனது கணவரின் நடத்தையில் சந்தேகமடைந்து இது குறித்து கேட்டபோது இருவருக்கும் வாய்தகராறு ஏற்பட்டுள்ளது. இதனால் ஆத்திரமடைந்த குமரன் ஜெயபிரியாவை அவதூறாக பேசியும், பெண் என்றும் பாரமால் அவரின் தலைமுடியை பிடித்து இழுத்து தாக்கியுள்ளார். மேலும் வீட்டில் இருந்த சிறிய குத்துவிளக்கை எடுத்து ஜெயபிரியாவை தாக்கிவிட்டு தப்பிச்சென்றுள்ளார். இரத்த காயமடைந்த ஜெயபிரியா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று இது குறித்து காசிமேடு காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் பாரதிய நியாய சன்ஹிதா சட்டம் மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் ஆகிய பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர். காசிமேடு காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட குமரன், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து சிறிய குத்துவிளக்கு பறிமுதல் செய்யப்பட்டது. மேலும் விசாரணையில் கைது செய்யப்பட்ட குமரன் மீன்பிடி துறைமுகம் காவல் நிலைய சரித்திர பதிவேடு குற்றவாளி என்பதும், இவர் மீது ஏற்கனவே 17 குற்ற வழக்குகள் உள்ளதும் தெரியவந்தது. விசாரணைக்குப்பின்னர் கைது செய்யப்பட்ட குமரன் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

மயிலாப்பூர் பகுதியில்

# பெண்ணிடம் செல்போன் பறித்த வாலிபர் கைது: இருசக்கர வாகனம் பறிமுதல்

**சென்னை மே 19-**

சென்னை, மயிலாப்பூர், சாரதாபுரம் கேனல் பேங்க் பகுதியில் வசித்து வரும் பியூலா, என்பவர், மயிலாப்பூர் டிசில்வா சாலையிலுள்ள ஒரு அடுக்குமாடி குடியிருப்பில் வீட்டு வேலை செய்து வருகிறார்.

பியூலா கடந்த 15-ந் தேதியன்று மாலை அன்று மேற்படி அடுக்குமாடி குடியிருப்பில் உள்ள வீட்டிற்கு வேலைக்கு செல்லும் வழியில், பக்தவச்சலம் சாலையில் செல்போனில் பேசியபடி நடந்து சென்று கொண்டிருந்த போது, டியோ இருசக்கர வாகனத்தில் வந்த ஒரு நபர் பியூலா கையில் வைத்திருந்த செல்போனை பறித்துக் கொண்டு தப்பிச் சென்றார். இது குறித்து பியூலா மயிலாப்பூர் காவல் நிலைய குற்றப்பிரிவில் புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

மயிலாப்பூர் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி செல்போன் பறிப்பு சம்பவத்தில் ஈடுபட்ட சரத்குமார், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து புகார்தாரரின் செல்போன் மீட்கப்பட்டு, குற்ற செயலுக்கு பயன்படுத்திய டியோ இருசக்கர வாகனம் பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் கைது செய்யப்பட்ட எதிரி சரத்குமார் மீது ஏற்கனவே 3 குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரி சரத்குமார் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.

# ஆந்திராவில் இருந்து கஞ்சா கடத்தி வந்த 3 ரவுடிகள் கைது

**சென்னை மே 19-**

ஆந்திரா மாநிலம் சித்தூர் பகுதியில் இருந்து கஞ்சா கடத்தி வருவதாக பீர்க்கன்காரணை காவல் நிலைய போலீசாருக்கு தகவல் கிடைத்தது. அதன்படி தனிப்படை போலீசார், முடிச்சூர் அடுத்த மதனபுரம் பகுதியில் நேற்று வாகன சோதனை நடத்தினர். அப்போது, சந்தேகப்படும்படி அவ்வழியாக வந்த ஆட்டோவை மடக்கி அதில் வந்த 3 நபர்களிடம் விசாரணை நடத்தினர்.முன்னுக்குப்பின் முரணாக பதில் கூறியதால், போலீசார் ஆட்டோவை சோதனை செய்தனர். ஆட்டோவின் இருக்கை அடியில் 2 கிலோ 200 கிராம் கஞ்சா மற்றும் பட்டாக்கத்தி இருந்தது தெரிய வந்தது. இதையடுத்து கைது செய்யப்பட்ட 3 பேரையும் காவல்நிலையம் அழைத்து சென்று விசாரணை நடத்தியதில், பெரம்பூர் அகரம் பகுதியை சேர்ந்த சந்தோஷ் (22), பெருங்களத்தூர் பகுதியை சேர்ந்த ஆனந்த் (24), முடிச்சூர் பகுதியை சேர்ந்த ஆறுமுகம் (21) என்பது தெரியவந்தது.மேலும் சுங்கவார்சத்திரம் பகுதியில் அசோக் என்பவர் கொலை செய்த வழக்கில் இருவரும் சிறைக்கு சென்று வந்ததும், எதிரிகள் அச்சுறுத்தல் இருப்பதால் கத்தியுடன் சுற்றித்திரிந்ததும் தெரிய வந்ததுள்ளது. இதுகுறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து 3 பேரையும் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். இவர்களிடம் இருந்து ஆட்டோவுடன் கஞ்சா மற்றும் பட்டாக்கத்தி பறிமுதல் செய்யப்பட்டது.

**வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்**

# மடிப்பாக்கம் பகுதியில் பூட்டிய வீட்டை உடைத்து சமையல் எரிவாயு சிலிண்டரை திருடிய வழக்கில் மேலும் 2 பேர் கைது

**சென்னை மே 19-**

சென்னை, மடிப்பாக்கம், வைகை தெருவில் வசித்து வந்த கல்யாணசுந்தரம் என்பவர் அவரது வீட்டைபூட்டி மும்பையில் வசித்து வருவதாகவும்,

அவருக்கு தெரிந்த நபரான அதே பகுதியில் வசிக்கும் தணிகை அரசு, 08.08.2024 அன்று காலை பார்த்தபோது, கல்யாணசுந்தரத்தின் வீட்டின் மாடியிலுள்ள கிரில் கேட்டின் பூட்டு உடைக்கப்பட்டிருப்பதை கண்டு கல்யாணசுந்தரத்திற்கு தகவல் கொடுத்து, மேற்படி வீட்டை சென்று பார்த்த போது, வீட்டில் வைத்திருந்த சமையல் எரிவாயு சிலிண்டர் திருடு போயிருந்ததாகவும், தணிகைஅரசு என்பவர் மடிப்பாக்கம் காவல் நிலைய குற்றப்பிரிவில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

மடிப்பாக்கம் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி திருட்டு சம்பவத்தில் ஈடுபட்ட எதிரி ஜெகதீசன், திரௌபதி அம்மன் கோயில் தெரு, வேளச்சேரி, சென்னை என்பவரை கடந்த 20.08.2024 அன்று கைது செய்து, 1 சமையல் எரிவாயு சிலிண்டரை மீட்டு, எதிரி ஜெகதீசனை நீதிமன்ற உத்தரவுப்படி நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தினர்.

மேலும், மடிப்பாக்கம் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான தனிப் படையினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், காவல் குழுவினர் இவ்வழக்கில் தலைமறைவாக இருந்த எதிரிகள் 1.வினோத், 2.பிரவீன்குமார் (எ) பர்வீன்குமார், ஆகிய இருவரை கைது செய்தனர்.

விசாரணையில் எதிரிகள் வினோத் மற்றும் பிரவீன்குமார் (எ) பர்வீன்குமார் ஆகிய இருவர் மீதும் ஏற்கனவே தலா 3 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக் குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.

தமிழ்நாடு அரசு

**பேரூராட்சிகள் துறை - தேனி மாவட்டம், தேவதானப்பட்டி பேரூராட்சி**

**ந.க.எண்.15 / 2025 / அ1 / நாள்: 16.05.2025**

தேனி மாவட்டம் தேவதானப்பட்டி பேரூராட்சியில் 2025-2026 தமிழ்நாடு நகர்ப்புற சாலை கட்டமைப்பு திட்டம் & Additional Allocation( For KNM) திட்டத்தின் கீழ் வார்டு எண். 17 சாத்தாகோவில்பட்டி தவவனம் ரோட்டில் தார்ச்சாலை அமைத்தல் பணி மேற்கொள்ளுவதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு. (இரண்டு உறைகள் முறை)

1) தேனி மாவட்டம் தேவதானப்பட்டி பேரூராட்சியில் 2025-2026 தமிழ்நாடு நகர்ப்புற சாலை கட்டமைப்பு திட்டம் & Additional Allocation( For KNMT) திட்டத்தின் கீழ் வார்டு எண். 17 சாத்தாகோவில்பட்டி தவவனம் ரோட்டில் தார்ச்சாலை அமைத்தல் பணிமேற்கொள்ள பேரூராட்சி செயல் அலுவலரால், தகுதியான ஒப்பந்ததாரர்களிடமிருந்து பணிகள் வாரியாக மின் ஒப்பந்தப்புள்ளிகள் தனித்தனியாக வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தபுள்ளி தொடர்பான விபரங்களை சம்பந்தப்பட்ட பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

2. பணியின் மதிப்பீடு ரூ.64.00 இலட்சம்

3. பணி வாரியான ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை http://tntenders.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து இலவசமாக எடுத்துக் கொள்ளலாம். இந்த இணையதள முகவரியிலிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விபரங்களும் பெறலாம்.

4. பொதுவான நேரம் மற்றும் நாள்.

| | | |
|---|---|---|
| அ | ஒப்பந்த நமூனா பதிவிறக்கம் செய்தல் | 19.05.2025 காலை 10.00 மணி முதல் 02.06.2025 மாலை 3.00 மணி வரை |
| ஆ | ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் | 02.06.2025 மாலை 3.00 மணி வரை |
| இ | ஒப்பந்தப்புள்ளிகள் திறத்தல் | 02.06.2025 மாலை 3.30 மணி |

ஒப்பந்தபுள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின், அதற்கு அடுத்த வேலை நாளில், அதே நேரத்தில், அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு திறக்கப்படும்.

செயல் அலுவலர்.
தேவதானப்பட்டி பேரூராட்சி, தேனி மாவட்டம்.

செ.ம.தொ.இ / 2351 / ஒப்பந்தப்புள்ளி / 2025

## துருவ் ஜூரெல் போராட்டம் வீண்:
# ராஜஸ்தானை வீழ்த்தியது பஞ்சாப்



**ஜெய்ப்பூர், மே 19-**
ராஜஸ்தானை 10 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி பஞ்சாப் வெற்றி பெற்றது. துருவ் ஜூரெல் போராட்டம் வீணானது.

**219 ரன்கள் குவிப்பு...**
ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற முதல் ஆட்டத்தில் ராஜஸ்தான் ராயல்ஸ் - பஞ்சாப் கிங்ஸ் அணிகள் விளையாடின. இதில் டாஸ் வென்று முதலில் பேட்டிங் செய்த பஞ்சாப் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 219 ரன்கள் குவித்தது. அதிகபட்சமானா நேஹல் வதேரா 70 ரன்கள் அடித்தார். ராஜஸ்தான் தரப்பில் தேஷ் பாண்டே 2 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

**ஜெய்ஸ்வால் அசத்தல்...**
இதனையடுத்து 220 ரன்கள் இலக்கை நோக்கி களமிறங்கிய ராஜஸ்தான் அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக ஜெய்ஸ்வால் - வைபவ் சூர்யவன்ஷி களமிறங்கினர். இதில் அர்ஷ்தீப் சிங் வீசிய முதல் ஓவரை அதிரடியாக எதிர்கொண்ட ஜெய்ஸ்வால் 4 பவுண்டரி ஒரு சிக்சர் என 22 ரன்கள் அடித்து அசத்தினார். அவருடன் வைபவ் சூர்யவன்ஷியும் வெளுத்து வாங்க ராஜஸ்தான் அணியின் ரன் வேகம் ராக்கெட் வேகத்தில் எகிறியது. வெறும் 2.5 ஓவர்களில் ராஜஸ்தான் 50 ரன்களை கடந்தது. இவர்களின் அதிரடியால் ராஜஸ்தான் எளிதில் வெற்றி பெறும் என்று அனைவரும் நினைத்தனர்.

**திசை மாறிய வெற்றி...**
ஆனால் இந்த ஜோடி பிரிந்ததும் ஆட்டம் பஞ்சாப் பக்கம் திரும்பியது. முதல் விக்கெட்டுக்கு இருவரும் இணைந்து 4.5 ஓவர்களில் 76 ரன்கள் பார்ட்னர்ஷிப் அமைத்த நிலையில் சூர்யவன்ஷி 40 ரன்களில் ஆட்டமிழந்தார். இந்த 40 ரன்களையும் வெறும் பவுண்டரி மற்றும் சிக்சர்களில் (4 பவுண்டரி & 4 சிக்சர்) மட்டுமே அடித்தார்.

**தனி ஒருவன் ஜூரெல்...**
அடுத்து வந்த சஞ்சு சாம்சன் 20 ரன்களிலும், ரியான் பராக் 13 ரன்களிலும் ஆட்டமிழந்தனர். அதிரடியாக ஆடி வந்த ஜெய்ஸ்வால் 50 ரன்கள் அடித்த நிலையில் ஆட்டமிழந்தார். இறுதி கட்டத்தில் துருவ் ஜூரெல் தனி ஆளாக போராட அவருக்கு மறுமுனையில் ஒத்துழைப்பு கிடைக்கவில்லை. மிகவும் எதிர்பார்க்கப்பட்ட ஷிம்ரான் ஹெட்மயர் 12 பந்துகளில் 11 ரன்கள் மட்டுமே எடுத்து சொதப்பினார். ராஜஸ்தான் அணியின் வெற்றிக்கு கடைசி ஓவரில் 22 ரன்கள் தேவைப்பட்டது. மார்கோ ஜான்சன் வீசிய அந்த ஓவரில் 2 விக்கெட்டுகளை இழந்த ராஜஸ்தான் அணியால் 11 ரன்கள் மட்டுமே அடிக்க முடிந்தது.

**பஞ்சாப் வெற்றி...**
துருவ் ஜூரெல் (53 ரன்கள்) போராடியும் பலன் கிடைக்கவில்லை. முடிவில் 20 ஓவர்கள் முழுமையாக விளையாடிய ராஜஸ்தான் அணியால் 7 விக்கெட்டுகளை இழந்து 209 ரன்கள் மட்டுமே அடிக்க முடிந்தது. இதனால் பஞ்சாப் 10 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. பஞ்சாப் தரப்பில் அதிகபட்சமாக ஹர்ப்ரீத் பிரார் 3 விக்கெட்டுகளும், மார்கோ ஜான்சன் மற்றும் ஓமர்சாய் தலா 2 விக்கெட்டுகளும் வீழ்த்தினர். இந்த வெற்றியின் மூலம் பஞ்சாப் அணி புள்ளி பட்டியலில் 2-வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

## துணை ஜனாபதி தன்கருக்கு பிரதமர் பிறந்தநாள் வாழ்த்து

**புதுடெல்லி, மே 19-**
குடியரசுத் துணைத்தலைவர் ஜகதீப் தன்கரின் பிறந்தநாளையொட்டி, அவருக்கு பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.
பிரதமர் மோடி தனது எக்ஸ் பதிவில் தெரிவித்ததாவது, குடியரசுத் துணைத்தலைவர் ஜகதீப் தன்கருக்கு பிறந்தநாள் வாழ்த்துகள். நமது அரசியலமைப்பால் அவர் ஆசிர்வதிக்கப்பட்டிருப்பது, அவர் ஒரு சிறந்த வழக்குரைஞர் என்பதைக் காட்டுகிறது. மாநிலங்களவையின் செயல்திறனை மேம்படுத்த அவர் தொடர்ந்து முயற்சித்து வருகிறார். சமூகத்துக்கு சேவை செய்ய விரும்பும் அவர், நீண்ட ஆயுளுடன் ஆரோக்கியமான வாழ்வையும் பெற வேண்டும் என்று கூறியுள்ளார்.

## அருணாச்சலில் திடீர் நிலநடுக்கம்


**புதுடெல்லி, மே 19-**
அருணாச்சல பிரதேசத்தில் நேற்று காலை 5.06 மணியளவில் திடீர் நிலநடுக்கம் ஏற்பட்டது.
அருணாச்சல பிரதேசத்தில் நேற்று காலை திடீர் நிலநடுக்கம் ஏற்பட்டு உள்ளது. காலை 5.06 மணியளவில் ஏற்பட்ட நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 3.8 ஆக பதிவாகி உள்ளது என தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது. அருணாச்சல பிரதேசத்தில் 10 கிலோமீட்டர் ஆழத்தை மையமாக கொண்டு இந்த நிலநடுக்கம் 29.03 டிகிரி வடக்கு அட்சரேகையிலும், 95.78 டிகிரி கிழக்கு தீர்க்கரேகையிலும் இருக்கும் என முதலில் தீர்மானிக்கப்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட பாதிப்புகள் பற்றிய விவரங்கள் எதுவும் உடனடியாக வெளியிடப்படவில்லை.



முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று அண்ணா அறிவாலயத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் 20.05.2025 அன்று லாஸ்ஏஞ்சலஸில் நடைபெறவுள்ள "மனநல மருத்துவ சர்வதேச மாநாட்டில்" தமிழ்நாடு அரசின் சார்பில் கலந்துகொண்டு தலைமை உரையாற்றுவதையொட்டி சந்தித்து வாழ்த்து பெற்றார்.

## சாத்தான்குளம் விபத்து:
# கனிமொழி எம்.பி. நேரில் ஆறுதல்

**தூத்துக்குடி, மே 19-**
சாத்தான்குளம் அருகே கிணற்றில் ஆம்னி வேன் விழுந்ததில் பலியானோரின் உறவினர்களைச் சந்தித்து கனிமொழி எம்.பி. ஞாயிற்றுக்கிழமை ஆறுதல் தெரிவித்தார்.
தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் அருகே கட்டுப்பாட்டை இழந்த ஆம்னி வேன் சாலையோரம் இருந்த 50 அடி ஆழ கிணற்றுக்குள் சனிக்கிழமை பாய்ந்தது. கிணறு முழுவதும் தண்ணீர் இருந்ததால், கார் முழுவதும் கிணற்றுக்குள் மூழ்கியது.



இந்த சம்பவத்தில் ஓட்டுநர் உள்பட 5 பேர் நீரில் மூழ்கி பலியாகினர்.
அதில், கெர்சோம், சைனி கிருபா, ஜெரின்எஸ்தர் ஆகியோர் கதவைத் திறந்து நீந்தி வெளியே வந்தனர். சுமார் 3 மணி நேர போராட்டத்துக்கு பின்னர், கார் மற்றும் 5 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டன. மீட்கப்பட்ட சடலங்கள் அனைத்தையும் கூறாய்வுக்காக மருத்துவமனைக்கு போலீஸார் அனுப்பி வைத்தனர்.
இந்த நிலையில் கிணற்றில் ஆம்னி வேன் விழுந்ததில் பலியானோரின் உறவினர்களைச் சந்தித்து கனிமொழி எம்.பி. ஞாயிற்றுக்கிழமை நேரில் ஆறுதல் தெரிவித்தார். இதனிடையே உயிரிழந்தவர்களின் உறவினர்கள் அளித்த தகவலின்படி கிணற்றுக்குள் இருந்த 45 சவரன் நகைகள் மற்றும் பொருட்களை தீயணைப்பு வீரர்கள் மீட்டனர்.

## இங்கிலாந்துக்கு செல்லும்
# இந்திய 'ஏ' அணிக்கு பயிற்சியாளர் நியமனம்

**மும்பை, மே 19-**
இங்கிலாந்துக்குச் செல்லும் இந்திய ஏ அணிக்கு தலைமை பயிற்சியாளராக முன்னாள் வீரர் ஹிருஷிகேஷ் கனிட்கர் நியமிக்கப்பட்டுள்ளார்.

**5 போட்டிகள்...**
இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாட உள்ளது. அதன்படி இவ்விரு அணிகள் இடையிலான முதல் டெஸ்ட் போட்டி வருகிற ஜூன் 20-ம் தேதி தொடங்க உள்ளது. 2025-2027 உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் தொடரின் அங்கமாக நடைபெறும் இந்த தொடரில் வெற்றி பெற இரு அணிகளும் கடுமையாக போராடும் என்பதால் இந்த தொடர் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

**இந்திய ஏ அணி...**
இந்த தொடருக்கு முன்னதாக இந்திய ஏ அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு இங்கிலாந்து லயன்ஸ்க்கு எதிராக 2 டெஸ்ட் (4 நாட்கள்) போட்டிகளிலும், இந்திய அணிக்கெதிராக ஒரு போட்டியிலும் விளையாட உள்ளது. இந்த தொடர் மே 30-ம் தேதி தொடங்க உள்ளது. இந்த தொடருக்கான இந்திய ஏ அணி சமீபத்தில் அறிவிக்கப்பட்டது. அபிமன்யு ஈஸ்வரன் தலைமையிலான அந்த அணியில் ஜெய்ஸ்வால், கருண் நாயர், நிதிஷ் ரெட்டி, ருதுராஜ் கெய்க்வாட் போன்ற முன்னணி வீரர்கள் இடம் பெற்றுள்ளனர்.

**தலைமை பயிற்சியாளர்...**
இந்நிலையில் இந்த தொடருக்கான இந்திய ஏ அணியின் தலைமை பயிற்சியாளராக முன்னாள் வீரரான ஹிருஷிகேஷ் கனிட்கர் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும் பீல்டிங் பயிற்சியாளராக சுபோதீப் கோஷ் மற்றும் பந்துவீச்சு பயிற்சியாளராக டிராய் கூலி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**அணி விவரம்...**
இந்திய ஏ அணி விவரம் பின்வருமாறு:- அபிமன்யு ஈஸ்வரன் (கேப்டன்), யஷஸ்வி ஜெய்ஸ்வால், கருண் நாயர், துருவ் ஜூரெல், நிதிஷ் குமார் ரெட்டி, ஷர்துல் தாகூர், இஷான் கிஷன், மானவ் சுதர், தனுஷ் கோட்டியான், முகேஷ் குமார், ஆகாஷ் தீப், ஹர்ஷித் ராணா, அன்ஷுல் கம்போஜ், ருதுராஜ் கெய்க்வாட், சர்பராஸ் கான், துஷார் தேஷ்பாண்டே, ஹர்ஷ் துபே.

## யு.ஏ.இ.யை வீழ்த்திய வங்கதேசம்

வங்காளதேச கிரிக்கெட் அணி ஐக்கிய அரபு அமீரகத்தில் (யு.ஏ.இ.) சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் விளையாடி வருகிறது. இதில் இவ்விரு அணிகளுக்கு இடையிலான முதல் டி20 போட்டியில் டாஸ் வென்ற யு.ஏ.இ. பந்துவீச்சை தேர்வு செய்தது. இதனை தொடர்ந்து முதலில் பேட்டிங் செய்த வங்காளதேச அணி 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்து 191 ரன்கள் குவித்தது. அதிகபட்சமாக பர்வேஸ் ஹொாசைன் சதம் விளாசினார். யு.ஏ.இ. தரப்பில் ஜவதுல்லா 4 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.
இதனையடுத்து 192 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய யு.ஏ.இ. 20 ஓவர்களில் 164 ரன்கள் அடித்த நிலையில் ஆல் அவுட் ஆனது. இதன் மூலம் வங்காளதேசம் 27 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. யு.ஏ.இ தரப்பில் அதிகபட்சமாக முகமது வாசீம் 54 ரன்கள் அடிக்க, வங்காளதேசம் தரப்பில் ஹசன் மக்மூத் 3 விக்கெட்டுகள் வீழ்த்தினர். பர்வேஸ் ஹொசைன் ஆட்ட நாயகன் விருது வென்றார்.

## கொல்கத்தா: ரோவ்மேன் விலகல்

பெங்களூரு சின்னசாமி மைதானத்தில் நேற்று நடைபெற இருந்த ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு - நடப்பு சாம்பியன் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் இடையிலான ஆட்டம் மழை காரணமாக டாஸ் கூட போடப்படாமல் ரத்து செய்யப்பட்டது. இதனையடுத்து இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி பகிர்ந்து அளிக்கப்பட்டது. இதனால் நடப்பு சாம்பியன் கொல்கத்தா அடுத்த சுற்று வாய்ப்பை இழந்து நடையை கட்டியது. இந்த அணிக்கு இன்னும் ஒரு லீக் ஆட்டம் மட்டுமே எஞ்சியுள்ளது.
இந்நிலையில் ஐ.பி.எல். தொடரின் எஞ்சிய போட்டிகளில் இருந்து கொல்கத்தா அணியின் ஆல் ரவுண்டர் ரோவ்மன் பவல் விலகியுள்ளார். அவருக்கு பதிலாக மத்திய பிரதேசத்தை சேர்ந்த சுழற்பந்து வீச்சாளரான ஷிவம் சுக்லாவை கொல்கத்தா அணி ஒப்பந்தம் செய்துள்ளது.

## ஹர்பஜன்சிங் கருத்தால் சர்ச்சை


இந்திய கிரிக்கெட் அணியின் வெற்றிகரமான கேப்டன்களில் ஒருவர் மகேந்திரசிங் தோனி. ஐ.பி.எல். தொடரிலும் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காக 5 கோப்பைகளை வென்று கொடுத்துள்ளார். இதனால் இவருக்கென்று தனி ரசிகர் பட்டாளம் உண்டு. அவரது ஆட்டத்தை காண இந்தியாவின் பல பகுதிகளிலிருந்து ரசிகர் படையெடுப்பர். அதேபோல் தோனிக்கு இருக்கும் ரசிகர்கள் அளவுக்கு மற்றொரு இந்திய நட்சத்திரமான விராட் கோலிக்கும் உலகமெங்கும் ரசிகர்கள் உண்டு.
இந்நிலையில் தோனிக்கு மட்டும்தான் உண்மையான ரசிகர்கள் உள்ளனர் என்று இந்திய முன்னாள் வீரரான ஹர்பஜன் சிங் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் பேசியது பின்வருமாறு:- "தோனி அவரால் முடிந்தவரை விளையாடலாம். ரசிகர்கள் அவர் தொடர்ந்து விளையாட வேண்டும் என்று விரும்புகிறார்கள். அவருக்கு உண்மையான ரசிகர் பட்டாளம் இருப்பதாக நான் உணர்கிறேன். மீதமுள்ளவர்கள் அனைவரும் சமூக வலைதளத்தை சார்ந்துள்ளார்கள். ஒரு சிலர் காசு கொடுத்து ரசிகர்களை வைத்திருக்கிறார்கள் என்று கூறினார். ஹர்பஜன் சிங்கின் இந்த கருத்து சர்ச்சையை கிளப்பியுள்ளது.

## கோலிக்கு பாரத ரத்னா: ரெய்னா

இந்திய கிரிக்கெட் ஜாம்பவான் விராட் கோலி டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார். 36 வயதான விராட் கோலி, தனது 14 ஆண்டு டெஸ்ட் கிரிக்கெட் வாழ்க்கைக்கு முடிவுகட்டி ஓய்வை அறிவித்தார். 123 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள அவர், 9230 ரன்கள் குவித்து 30 சதங்களை அடித்துள்ளார். கடந்த 10 ஆண்டுகளில் டெஸ்ட் போட்டிகளை அதிக ரசிகர்கள் பார்க்கக் காரணமாக இருந்தவர் விராட் கோலி எனப் பலரும் தற்போது அவரைப் பாராட்டி வருகின்றனர்.
இந்நிலையில், இந்திய கிரிக்கெட்டுக்கு விராட் கோலி செய்த பங்களிப்பை கௌரவிக்கும் வகையில் அவருக்கு இந்திய அரசு பாரத ரத்னா வழங்க வேண்டும் என்று முன்னாள் இந்திய வீரர் ரெய்னா கோரிக்கை விடுத்துள்ளார்.

## வீரர்களுக்கு டிராவிட் அறிவுரை

இந்திய அணியின் முன்னாள் தலைமைப் பயிற்சியாளரான ராகுல் டிராவிட் ஐ.பி.எல். தொடரில் ராஜஸ்தான் ராயல்ஸ் அணியின் பயிற்சியாளராக செயல்பட்டு வருகிறார்.



ராஜஸ்தான் ராயல்ஸ் அணியின் பயிற்சியாளராக செயல்பட்டு வரும் ராகுல் டிராவிட் நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில், கிரிக்கெட் வீரர் ஒருவர் அவரது அதிகப்படியான திறனை வெளிப்படுத்த அவரை மிகவும் நன்றாக புரிந்து வைத்திருக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.
அந்த நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது: நான் மிகப் பெரிய வீரர்களுடன் இணைந்து பயணித்தபோது, அவர்களிடம் பொதுவான ஒரு விஷயத்தை என்னால் கவனிக்க முடிந்தது. அவர்கள் யார் என்பதை உண்மையில் அவர்கள் புரிந்து வைத்திருந்தார்கள். நீங்கள் யார் என்பதை நன்றாக புரிந்து வைத்திருந்தால், உங்களது முழுமையான திறனை வெளிப்படுத்த முடியும். சிறந்த கிரிக்கெட் வீரராக மாறுவதற்கான திறமை பலருக்கும் கிடைக்கப் பெற்றுள்ளது. அதனுடன் சிறந்த மனிதராகவும் ஒருவர் வளர வேண்டும். உங்களுக்குள் இருக்கும் சிறந்த விஷயத்தை உங்களால் மட்டும் வெளிக்கொண்டுவர முடியும் என்றார்.

## முள்ளிவாய்க்கால் நினைவு தினம்: மா.செ.க்களுக்கு த.வெ.க. உத்தரவு

**சென்னை, மே 19-**
முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தையொட்டி மாவட்டச் செயலாளர்களுக்கு த.வெ.க. உத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளது.
தமிழக வெற்றிக் கழக பொதுச் செயலாளர் என். ஆனந்த், மாவட்டச் செயலாளர்களுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது :-
முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தையொட்டி த.வெ.க. தலைவர் விஜய் அறிவுறுத்தலின்படி மாவட்ட செயலாளர்கள் மாவட்ட நிர்வாகிகள் மற்றும் சார்பு அணி அமைப்பாளர்கள் ஒன்றிணைந்து இலங்கையில் நடந்த ஈழப் போரில் உயிரிழந்த ஈழத்தமிழர்களை நினைவு கூறும் விதமாக இன்று (நேற்று) மாலை 6 மணி அளவில் தங்கள் மாவட்ட அலுவலகத்தில் மெழுகுவர்த்தி ஏந்தி நினைவேந்தல் தினம் அனுசரிக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.
நிகழ்ச்சி நடத்திய புகைப் படங்களையும் கட்சி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். கட்சி தலைமையில் இருந்து அனுப்பப்பட்டுள்ள படத்தை தவிர எந்த படத்தையும் பயன்படுத்தக் கூடாது. இவ்வாறு அவர் கூறியுள்ளார். நினைவேந்தல் நிகழ்ச்சியில் எழுப்பப்பட வேண்டிய கோஷங்களும் கட்சித் தலைமையில் இருந்து அனுப்பப்பட்டுள்ளது.

## ஆந்திராவில் பெண்களுக்கு இலவச பஸ் பயணம்: முதல்வர் சந்திரபாபு

**அமராவதி, மே 19-**
ஆகஸ்ட் 15 முதல் அரசு பஸ்களில் பெண்கள் இலவசமாகப் பயணிக்கலாம் என்று சந்திரபாபு நாயுடு அறிவித்துள்ளார்.
ஆந்திர மாநில சட்டப் பேரவைக்கு கடந்த ஆண்டு தேர்தல் நடைபெற்றது. அப்போது தெலுங்கு தேசம் கட்சியின் தலைவர் சந்திரபாபு நாயுடு வேலை வாய்ப்பு, இலவச நிலம், பெண்களுக்கு இலவச பயணம், இலவச சிலிண்டர், முதியோர் ஊக்கத்தொகை உள்ளிட்ட பல்வேறு வாக்குறுதிகளை அளித்தார். அதிலும் குறிப்பாக சூப்பர் சிக்ஸ் வாக்குறுதிகளை அளித்தார் சந்திரபாபு நாயுடு.
கடந்த ஆண்டு ஜூன் மாதம் சந்திரபாபு நாயுடு ஆந்திர மாநில முதல்-மந்திரியாக பதவியேற்றார். பதவியேற்ற பிறகு ஒவ்வொரு வாக்குறுதியாக நிறைவேற்றி வருகிறார். அந்த வகையில் தற்போது தெலுங்கு தேசம் கட்சி அளித்த சூப்பர் சிக்ஸ் வாக்குறுதிகளில் ஒன்றான பெண்களுக்கு இலவச பஸ் பயணம் திட்டத்தை செயல்படுத்த உள்ளார்.
ஆகஸ்ட் 15 முதல் அரசு பஸ்களில் பெண்கள் இலவசமாகப் பயணிக்கலாம் என்று சந்திரபாபு நாயுடு அறிவித்துள்ளார். ஏற்கனவே மேம்படுத்தப்பட்ட சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியம், வருடத்திற்கு 3 இலவச கியாஸ் சிலிண்டர்கள் போன்ற சில வாக்குறுதிகளை நிறைவேற்றி உள்ளார்.

## பிளே ஆப் வாய்ப்பை இழந்தது கொல்கத்தா

**பெங்களூரு, மே 19-**
மழை காரணமாக டாஸ் சுண்டப்படாமல் ஆட்டம் ரத்து செய்யப்பட்டதால் பிளே ஆப் வாய்ப்பை கொல்கத்தா அணி இழந்தது.

**டாஸ் சுண்டப்படாமல்...**
இந்தியா, பாகிஸ்தான் இடையேயான மோதலால் தடைபட்ட நடப்பு ஐ.பி.எல். தொடர் நேற்று முன்தினம் மீண்டும் தொடங்கியது. பெங்களூருவில் நேற்று முன்தினம் இரவு 7.30 மணிக்கு நடைபெறவிருந்த 58வது லீக் ஆட்டத்தில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு - கொல்கத்தா நைட் ரைடர்ஸ் மோதவிருந்தன. ஆனால், பெங்களூருவில் நேற்று முன்தினம் கனமழை பெய்தது. இதன் காரணமாக டாஸ் சுண்டப்படாமல் ஆட்டம் ரத்து செய்யப்பட்டது. இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி வழங்கப்பட்டது.

**வாய்ப்பை இழந்தது...**
நடப்பு ஐ.பி.எல். தொடரில் பிளே ஆப் சுற்று வாய்ப்பில் நீடிக்க இந்த ஆட்டத்தில் கொல்கத்தா கட்டாயம் வெற்றிபெற வேண்டிய சூழ்நிலை நிலவியது. ஆனால், ஆட்டம் ரத்து செய்யப்பட்டதால் நடப்பு ஐ.பி.எல். தொடரில் பிளே ஆப் செல்லும் வாய்ப்பை கொல்கத்தா இழந்தது.

**6 அணிகள் போட்டி...**
தற்போதைய நிலவரப்படி பெங்களூரு, குஜராத், பஞ்சாப், மும்பை, டெல்லி, லக்னோ ஆகிய 6 அணிகள் பிளே ஆப் வாய்ப்பில் உள்ளன. இதில், 4 அணிகள் பிளே ஆப் சுற்றுக்குள் செல்ல உள்ளன. குறிப்பாக, பெங்களூரு, குஜராத் அணிகள் பிளே ஆப் செல்வது கிட்டத்தட்ட உறுதியாகிவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## நீலகிரி, கோவைக்கு நாளை ஆரஞ்ச் எச்சரிக்கை

**சென்னை, மே 19-**
வரும் மே 20 ஆம் தேதி கோயம்புத்தூர் மாவட்டத்தின் மலைப்பகுதிகள் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மிக கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது: தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் ஒருவளி மண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. கர்நாடக கடலோர பகுதிகளுக்கு அப்பால் உள்ள மத்தியகிழக்கு அரபிக் கடலில் வருகின்ற 21-ஆம் தேதி வாக்கில் ஒருவளி மண்டல மேலடுக்கு சுழற்சி உருவாகக்கூடும். இதன் காரணமாக, 22-ஆம் தேதி வாக்கில், அதே பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகக்கூடும். பிறகு இது வடக்கு திசையில் நகரக்கூடும்.
தமிழக மற்றும் அதனை ஒட்டிய வடக்கு கேரள பகுதிகளின்மேல் ஒருவளி மண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக, இன்று தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய (மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், தேனி, திண்டுக்கல், ஈரோடு, கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.
நாளை தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய (மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கோயம்புத்தூர் மாவட்டத்தின் மலைப் பகுதிகள் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மிக கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது.

## மழையால் போட்டி ரத்தானால் கட்டணம் திருப்பி அளிக்கப்படும்: ஆர்.சி.பி. அறிவிப்பு

**பெங்களூரு, மே 19-**
ஐ.பி.எல். தொடரில் பெங்களூருவில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு மற்றும் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் இடையே நேற்று (மே 17) நடைபெறவிருந்த போட்டி மழை காரணமாக கைவிடப்பட்டது. மழை காரணமாக போட்டி கைவிடப்பட்டதால், இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி வழங்கப்பட்டது. இதன் மூலம், பிளே ஆஃப் சுற்றுக்கான போட்டியிலிருந்து கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி வெளியேறியது. மழையால் போட்டி கைவிடப்பட்டதால் ரசிகர்கள் மிகுந்த ஏமாற்றம் அடைந்தனர்.

**திருப்பியளிக்கப்படும்...**
இந்த நிலையில், மழையால் கைவிடப்பட்ட போட்டிக்கான டிக்கெட் கட்டணம் ரசிகர்களுக்கு திருப்பியளிக்கப்படும் என ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணி நிர்வாகம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணி நிர்வாகம் அதன் எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டிருப்பதாவது: மோசமான வானிலை காரணமாக ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு மற்றும் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் இடையிலான போட்டி கைவிடப்பட்டது. இந்தப் போட்டிக்கான டிக்கெட் கட்டணம் ரசிகர்களுக்கு திருப்பியளிக்கப்படும்.

**ஆன்லைனில்...**
ஆன்லைனில் டிக்கெட் வாங்கியவர்களுக்கு அவர்களது கணக்கில் 10 வேலை நாள்களுக்குள் பணம் திருப்பியளிக்கப்படும். நேரடியாக டிக்கெட் வாங்கியவர்கள் அவர்களது உண்மையான டிக்கெட்டினைக் காட்டி டிக்கெட் கட்டணத்தை திரும்பப் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திமுகவின் 3 மாவட்டங்களுக்கு பொறுப்பாளராக அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நியமனம்

**சென்னை, மே 19-**
திமுகவின் 3 மாவட்டங்களுக்கு பொறுப்பாளராக அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நியமிக்கப்பட்டுள்ளார்.
அடுத்த ஆண்டு தமிழக சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது. இதையொட்டி, அரசியல் கட்சிகள் தேர்தல் பணிகளை தற்போதே செயல்படுத்த தொடங்கிவிட்டன. சட்டமன்ற தேர்தல் பணிகளுக்காக ஏற்கனவே திமுகவில் 7 மண்டல பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் 8 ஆவது பொறுப்பாளராக தற்போது எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவ, கடலூர் கிழக்கு, விழுப்புரம், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டங்களுக்கு பொறுப்பாளராக செயல்படுவார் என கட்சி தலைமை அறிவித்துள்ளது.

# உங்கள் நட்சத்திர பலன்கள்

**( 19.05.2025 முதல் 25.05.2025 வரை )**

ஜோதிடர்
எஸ். விஜயநரசிம்மன், மதுரை.

## மேஷம்

(அஸ்வினி-1, 2, 3, 4 பாதங்கள்—பரணி-1, 2, 3, 4 பாதங்கள்— கார்த்திகை-1, பாதம்)

அஸ்வினி --

இந்த வாரம் இல்லத்தில் இனிய சுபகாரியங்கள் நடைபெறும். மாதரால் மனமகிழ்ச்சி ஏற்படும். அன்னையின் அரவணைப்பால் அகம் மகிழும். விருந்து உபசாரங்களில் கலந்து கொண்டு சந்தோஷம் அடைவீர்கள். விரைந்து செயல்பட்டு வெற்றிவாகை சூடுவீர்கள். உறவுகள் மற்றும் நண்பர்கள், தக்க சமயத்தில் உதவிக்கரம் நீட்டுவார்கள். பணிபுரிபவர்களுக்கு உயர் அதிகாரிகளின் பாராட்டுகள் கிடைக்கும். புதிய தொழில் தொடர்புகளால் பொருளாதாரம் மேம்பாடு அடையும். அரசு வகையில் எதிர்பார்த்த உதவிகள் அனுகூலமாய் இருக்கும். திடீர் பயணங்களால் நன்மை ஏற்படும். மேடைப்பேச்சு, பட்டிமன்ற பேச்சாளர்களுக்கு முன்னேற்றமான வாரம்.

பரணி --

இந்த வாரம் தாராளமான தனச் சேர்க்கையாலும், சுபகாரிய நிகழ்ச்சிகளாலும் மனதில் சந்தோஷம் பெருகும். தெய்வீக வழிபாடுகளால் நிம்மதி நிலவும். தாயாரின் உணவு உபசரிப்பால் உண்டு மகிழ்வீர்கள். சிலருக்கு சிலநேரங்களில் துன்பங்கள் வந்து விலகும். குழந்தைகளால் மனக்கவலைகள் ஏற்படலாம். புதிய தொழில் பயணங்கள் மூலமாக எதிர்பார்த்த தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். வீடு மாற்றம், தொழில் மாற்றம் என வாழ்க்கையில் ஏதேனும் ஒரு மாற்றம் ஏற்படும். வியாபாரிகள் புதிய யுக்திகளைப் பயன்படுத்தி, வாடிக்கையாளர்களைக் கவர்ந்து, அதிக இலாபம் பெற முயற்சி செய்வீர்கள். சிலருக்குக் காரியத்தடைகளால், பயம் கலந்த மனக்கலக்கங்கள் ஏற்படலாம்.

கார்த்திகை 1 ஆம் பாதம்.—

இந்த வாரம் புதிய தொடர்புகள் மகிழச்சி தரும். வெளிநாட்டில் இருந்து நல்ல தகவல்கள் வந்து சேரும். வீட்டில் திருமணம் போன்ற சுபகாரியங்கள் நிறைவேறி மகிழ்வு தரும். பயணத்தின் போது எச்சரிக்கையுடன் இருத்தல் அவசியம். பகைகளை வெல்லும் திறன் ஏற்படும். கணவன், மனைவியிடையே கருத்து வேறுபாடுகள் எழலாம். அரசு வேலை கிடைக்கும் வாய்ப்புகள் ஏற்படலாம். தனவரவு குறையும் காலமாதலால், வீண்செலவுகளைக் குறைப்பது அவசியம். உங்களால் கூறப்படும், ஒரு வார்த்தை, ஒன்பதாக மாறி, பரபப்படும். எனவே, வார்த்தைகளை அளந்து பேசுவது நல்லது. சிலருக்கு ஆரோக்கியக் குறைவு காரணமாக மருத்துவச் செலவுகள் ஏற்படலாம்.

## ரிஷபம்

(கார்த்திகை – 2,3,4 பாதங்கள்-ரோகிணி-1,2,3,4-பாதங்கள்-மிருகசிரீடம்-1,2 பாதங்கள் )

கார்த்திகை 2,3,4 பாதங்கள் –

இந்த வாரம் புதிய முயற்சிகளில் இறங்கித் தொழில் முன்னேற்றங்காண முயல்வீர்கள். மனதிற்கினிய தகவல்கள் வந்து சேரும். தனவரவு அதிகரிக்கும். நண்பர்கள் மற்றும் உறவுகளின் வருகையால் உள்ளம் மகிழும். சினிமா, டிராமா, மால் என இளைஞர்களின் கனவு மையங்களில் பொழுது இனிமையாகக் கழியும். வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபங்கள் ஏற்பட்டு பொருளாதார நிலை மேம்படும். குழந்தைகளின் பிடிவாத குணத்தால் தொல்லை ஏற்படும். சிலருக்குப் பெரிய மனிதர்களின் ஆதரவு கிடைப்பது அரிது. வாகனங்களில் பயணிக்கும் போது, போக்குவரத்து விதிகளைக் கடைப்பிடித்து, விபத்தினைத் தவிர்க்க முயலுங்கள். திட்டமிட்டுச் செலவு செய்தால், வரவுக்கு மிஞ்சிய செலவுகள் குறையும்.

ரோகிணி –

இந்த வாரம் குடும்பத்தில் உள்ளவர்களின் அனுசரணையால், குழப்பங்கள் நீங்கி அமைதி நிலவும். வீட்டில் சுகபோகங்கள் அதிகரிக்கும். புதுவீடு கட்டுவதற்கான வங்கிக் கடன்கள் மிகுந்த பிரயாசைகளுக்குப் பிறகே கிடைக்கும். தாய் மாமனுக்கு நன்மை ஏற்படும். தொலை தூரப்பயணங்களால் நன்மை ஏற்படும். நண்பர்களிடம் தேவையற்ற மனஸ்தாபங்களைக் குறைக்க, இவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. அரசு அதிகாரிகளால் சிலருக்கு இடையூறுகள் ஏற்படலாம். நான்கு சுவர்களுக்குள் வீட்டிற்குள் நடக்கும் விஷயங்கள் வெளிவராது காப்பது அவமானங்களைத் தவிர்க்கும். கடும் பிரயாசைகளுக்குப் பிறகே எண்ணிய எண்ணங்கள் நிறைவேறும்.

மிருகசிரீஷம் – 1 , 2 பாதங்கள் –

இந்த வாரம் வாக்கால் வருமானமும், குடும்பத்தில் குதூகலமும் ஏற்படும். . விருந்தினர் வருகையால் மனம் மகிழ்ச்சி ஏற்படும். பெரிய மனிதர்களின் உதவியால் வாழ்க்கையில் பேருயர்வு ஏற்படும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் அதிக அக்கறை செலுத்துங்கள். முழுமுயற்சி எடுத்துச் செயல்பட்டாலே, உங்கள் முயற்சிகளில் வெற்றி அடைய முடியும். வாகனங்களில் செல்லும் முன் அதற்குரிய ஆவணங்களைச் சரிபார்த்து எடுத்துச் செல்வது நல்லது. அரசுப் பணியாளர்களுக்குப் புதிய பதவிகள், பொறுப்புக்கள் வந்து சேரும். சிலருக்கு புதிய நண்பர்கள் சேர்க்கை, தொழில் இலாபம் ஆகியவை ஏற்படும். கற்பனை வளம் பெருகும். தாய் மூலமாக நன்மைகள் ஏற்படும். தந்தைவழி உறவுகள் உதவி செய்வார்கள்.

## மிதுனம்

(மிருகசிரீடம்- 3,4 பாதங்கள், திருவா திரை-1,2,3,4 பாதங்கள், புனர்பூசம் -1,2,3 பாதங்கள்)

மிருகசிரீஷம் – 3 , 4 பாதங்கள். –

இந்த வாரம் தெய்வ தரிசனம், தெய்வீகப் பயணங்கள் தேடிவரும். வீட்டில் திருமணம் போன்ற நற்காரியங்களில், தாமதம் ஏற்பட்டாலும், மிகச்சிறப்பாக நடைபெறும். சிலருக்குப் பெண்களால் தேவையற்ற அவமானங்கள் ஏற்படலாம். வாழ்க்கையில் எல்லாவித முன்னேற்றங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். சிலருக்கு இருக்கும் வேலையை விட்டுவிட்டு, வெறு நல்ல வேலைக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்படலாம். வியாபாரிகளுக்கு வெற்றிகரமான முன்னேற்றங்கள் ஏற்படும். பணிபுரிபவர்களுக்கு மேலதிகாரிகளின் அனுகூலத்தால் உயர் பதவிகள் கிடைக்கலாம். அரசுப் பணியில் உள்ளவர்கள் அதிகப்படியான வருமானங்களை எதிர்பார்க்கலாம். கல்வியில் வெற்றி பெறக் கவனமாகப் படிக்க வேண்டும்.

திருவாதிரை ---

இந்த வாரம் பணவரவுகள் அதிகரித்தாலும் தான, தர்மம் எனக் கைப்பணம் கரையும். தேவையென்று வரும்போது கையிலிருக்கும் பணம் கூட உதவாமல் போகும். வியாபாரிகள், தொழில் முனைவோருக்கு நல்ல முன்னேற்றமான காலம். காற்றடிக்கும் போதே தூற்றி கொள்வது போல், நல்ல இலாபம் வரும் போதே சேமித்து வைத்துக்கொள்வது நல்லது. குடும்பத்தில் தம்பதிகளிடையே ஒற்றுமைக் குறைவு ஏற்படும். ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துச் செல்வது அவசியம். வீட்டு உபயோகப் பொருட்களில் பழுது ஏற்படலாம். அதைக் கூட சரி செய்துவிடலாம். ஆனால் சினத்தை அடக்காவிடில் குடும்பப் பிரச்சனைகளைத் தீர்க்க முடியாது. மாணவர்களுக்குப் புத்தி சாதுர்யமும், அறிவு விருத்தியும் ஏற்படும்.

புனர்பூசம் – 1, 2, 3 – பாதங்கள்.

இந்த வாரம் பலவழிகளிலும் பணவரவு அதிகரிக்கும். தன்னம்பிக்கை உயரும். சிலருக்குக் கார் போன்ற சொகுசு வாகனங்கள் வாங்கும் உயர்வு நிலை ஏற்படலாம். எடுத்த காரியங்கள் அனைத்திலும் வெற்றி கிட்டும். தெய்வ சிந்தனைகளால் மனதில் பூர்ண அமைதி நிலவும். அரசுப் பணியாளர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். சிலருக்குப் பணி நிரந்தரத்துக்கான ஆணைகள் கிடைத்து, மனதில் இன்ப வெள்ளம் பாயும். அறிஞர்களுக்கு கௌரவப் பட்டங்கள், பதவிகள் தேடிவரும். கூட்டுத் தொழிலில் உள்ளவர்கள் கூட்டாளிகளிடம் எச்சரிக்கையாக இல்லாவிடில் ஏமாற நேரலாம். தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என தந்தை சொல் கேட்டு தனயனும் நடப்பார். தந்தை மகனிடையே இருந்து வந்த மனக் கசப்புக்கள் தீரும்.

## கடகம்

(புனர்பூசம்- 4 ஆம் பாதம், பூசம்-1,2,3,4 பாதங்கள், ஆயில்யம்-1,2,3,4 பாதங்கள்)

புனர்பூசம் – 4 ஆம் பாதம்.

இந்த வாரம் மனதிற்கினிய சுபச்செய்திகள் வந்து சேரும். பல வழிகளிலும் தனவரவு அதிகரிக்கும். அழகிய ஆடை ஆபரணங்கள் அணிவதால் மனமகிழ்ச்சி ஏற்படும். தாயின் அன்பும் அரவணைப்பும் மகிழ்ச்சி தரும். உறவுகளுடன் சென்று மகான்களைத் தரிசனம் செய்து மகிழ்வீர்கள். நண்பர்கள் மற்றும் உறவுகளின் வருகையால் உள்ளம் மகிழும். ரேஷன் கார்டுகளில் புதிதாகச் பெயர் சேர்க்க, புத்திர பாக்கியம் ஏற்படும். பெண்கள் சமூக விரோதிகளிடம் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. சிலருக்குப் பணி நிமித்தமாக, இடம் விட்டு இடம் மாறி வேறு இடத்தில் வாழ நேரலாம். இலாபம் அதிகம் பெற புதிய விற்பனை யுக்திகளைக் கையாள்வீர்கள். வாக்கு வன்மையால் பொருள்களின் விற்பனை சூடுபிடிக்கும்.

பூசம் --

இந்த வாரம் . வீட்டுக்குத் தேவையான நவீன உபகரணங்களை வாங்கி மகிழ்வீர்கள். இன்பச் சுற்றுலா போன்ற, இனிய பயணங்களால் இன்பத்தில் திளைப்பீர்கள். இல்லத்தில் மகிழ்ச்சி பொங்க, மங்கல காரியங்கள் ஈடேறும். நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளிலும் எப்பாடுபட்டாவது வெற்றி அடைவீர்கள். சிலருக்குத் தங்கள் மனதிற்குப் பிடித்தபடி அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய இல்லம் அமையும். உடன்பிறப்புக்களிடையே கருத்து வேறுபாடு ஏற்படலாம். எழுத்தாளர்களின் கற்பனை வளம் பெருகி, கதை, கவிதை எனத் திறம்பட எழுதிப் புகழ் பெறுவர். பொறாமை காரணமாக நண்பர்களே பகைவராவர். சுறுசுறுப்பற்ற நிலையில் காரியத் தடைகள் ஏற்படும். அதிகாரிகளிடம் வாக்குவாதம் செய்தால் அபராதம் கட்ட நேரலாம். சிலருக்குத் தோல் உபாதைகள் ஏற்படலாம்.

ஆயில்யம் –

இந்த வாரம் வாழ்க்கையில் முன்னேற்றங்களையும், சுகானுபவங்களையும் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். மனதுக்குப் பிரியமான மங்கையுடன் பழக்கம் ஏற்படும் இனிய பயணங்களால் இன்புறுவீர்கள். தாய் மாமனுக்கும் நன்மை ஏற்படும். தொலைதூரப் பயணங்களால் ஆதாயம் உண்டு. சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். மாணவர்கள் தங்கள் கல்வியில் வெற்றி பெறக் கவனமாகப் படிக்க வேண்டும். அரசுப் பணியாளர்கள் தங்கள் மேலதிகாரிகளின் ஆதரவால் பணியில் பல முன்னேற்றங்களைக் காண்பர். உடலில் சுறுசுறுப்புக் குறைந்து, சொம்பல் அதிகரிக்கும். மற்றவர்கள் உயர்வைக் கண்டு பொறாமை கொள்ளாதிருப்பது நல்லது.

## சிம்மம்

(மகம்-1,2,3,4 பாதங்கள்,பூரம்- 1,2,3,4 பாதங்கள் மற்றும் உத்திரம்- 1 பாதம்)

மகம் –

இந்த வாரம் வீட்டில் சுப காரியங்கள் அனைத்தும் சிறப்புற, வெற்றிகரமாக நடக்கும். குடும்பத்துடன் சினிமா போன்ற கேளிக்கைகளில் ஈடுபடுவதால் செலவுகள் அதிகரிக்கும். நீங்கள் எப்போதும் பணம் விஷயமான சிந்தனையுடன் இருப்பீர்கள். உயர் அதிகாரிகளால் பாராட்டப்பட்டு பதவி உயர்வின் மூலம் பணப் பயன்களை அடைவீர்கள். தொலைதூர சுபச் செய்திகளால் இல்லத்தில் மகிழ்ச்சி பெருகும். இளைஞர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புக்கள் ஏற்படும். வியாபாரத்தில் விரிவாக்கத் திட்டங்களால் வாடிக்கையாளர்களைக் கவர்ந்து இலாபத்தைப் பெருக்கிக் கொள்வீர்கள். வாகனங்களில் செல்லும் போது எச்சரிக்கையுடன் இருந்தால் விபத்தினைத் தவிர்க்கலாம்.

பூரம் –

இந்த வாரம் சந்தோஷம், நல்ல மனிதர்களுடன் தொடர்பு, அரசு அனுகூலம், சொத்துச் சேருதல், அறிவு விருத்தி வெற்றி மற்றும் நல்அதிர்ஷ்டம் ஆகியவை ஏற்படும். பணவரவு அதிகரித்தாலும், பழைய கடன்கள் அல்லது நோய்களால் கவலை ஏற்படும். பணியில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிகளைத் திருப்திப் படுத்தும் வகையில் செலவுகள் ஏற்படும். பூர்வ புண்ணியத்தால் குலதெய்வ வழிபாடுகள் சிறக்கும். சிலருக்குத் திருமணம் போன்ற சுபகாரிய விரயங்கள் ஏற்படும். வெய்யில் கேற்ற நிழலுண்டு, வீசும் இன்பக் காற்றுண்டு என்பது போல், துன்பங்கள் மறைந்து, இன்பம் பெருகும். எத்தகைய பிரச்சனைகள் வந்தாலும், உங்கள் சாதுர்யத்தாலும், சாமர்த்தியத்தாலும் ஊதித் தள்ளிவிடுவீர்கள்.

உத்திரம்- 1 பாதம் –

இந்த வாரம் நீங்கள் எதிர்பார்த்த இடங்களில் இருந்து பணவரவு தாராளமாக இருக்கும். மனைவி, மக்களால் மகிழ்ச்சி நிலவும். உறவுகள் வருகையால் விருந்து, மகிழ்ச்சிக் கொண்டாட்டம் என வீட்டில் மகிழ்ச்சி பொங்கும். சுபச் செய்திகளை எதிர்பார்க்கலாம். புதிய சொத்துக்கள் சேரும். சிலருக்கு வாகனங்களில் பழுது ஏற்படலாம். பிறர் தயவை நாடவேண்டிய சூழல் உருவாகும். மாணவர்கள் தங்கள் படிப்பில் கவனம் செலுத்தாவிடில் தேர்வுகளில் வெற்றி பெறுவது கடினம். இந்த நாட்களில் உங்கள் திறமை மிக்க செயல்பாடுகளால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். அரசாங்கத்திடம் இருந்து அனுகூலமான செய்திகள் மற்றும் தகவல்கள் வந்து சேரும்.

## கன்னி

( உத்திரம் – 2, 3, 4-பாதங்கள், ஹஸ்தம்-1, 2, 3, 4 பாதங்கள், சித்திரை – 1,2 பாதங்கள்)

உத்திரம் – 2, 3, 4 – பாதங்கள்.

இந்த வாரம் ஆரோக்கியம் மேம்படும். தனவரவு, கூட்டாளிகள் ஒத்துழைப்பு, எதிர்பாலரால் சந்தோஷம், புகழ், கௌரவம், திருமணம் மற்றும் பெரியவர்கள் ஆசி ஆகியவை ஏற்படும். பணியில் முன்னேற்றம். கீழே பணிபுரிவர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், வெளிநாட்டு வாசம் ஏற்படலாம். சிலருக்கு எந்தத் தொழிலையும் செய்ய மனம் போகாது. எந்த ஒரு காரியத்தையும் எடுத்தோம் கவிழ்த்தோம் என அவசரப்பட்டுச் செய்யாமல் நிதானமாகச் செய்தால் வெற்றிகிட்டும். பயனற்ற அலைச்சல்கள் பணிக்குத் தடையாய் அமையும். ஆசிரியர்கள், தங்கள் உயர் அதிகாரிகளின் ஆதரவால் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம். புதிய நண்பர்களால் நன்மையும் ஏற்படும்.

ஹஸ்தம் –

இந்த வாரம் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்க, மங்கல காரியங்கள் ஈடேறும். நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளிலும் சுலபமாக வெற்றி அடைவீர்கள். செல்வநிலை உயரும். இதமாகப் பணிபுரியும் இனிய மனைவி அமைவாள். விலையுயர்ந்த பொன் ஆபரணங்கள் விதவிதமாகக் கிடைக்கும். அரசியல் அதிகாரம், அரச மரியாதை ஆகியவை கிடைக்கும். கடின உழைப்புக்குப் பின்னரே அதிக வருமானம் பார்க்கலாம். செய்தொழில் சிறப்புற்று இலாபம் பெருகும். வியாபார நிமித்தமான தொலைதூரப் பயணங்களால் நன்மை ஏற்படும். கையிலே வாங்கினேன், பையிலே போடலே, காசுபோன இடம் தெரியலே என கட்டுக்கடங்காத செலவுகள் ஏற்படலாம். எனவே, சக்திக்கு மீறிய செலவுகளைத் தவிர்ப்பது நல்லது.

சித்திரை – 1,2 பாதங்கள் –

இந்த வாரம் தொழிலில் நல்ல முன்னேற்றங்கள் ஏற்படும். உழைப்பு அதிகமாகி அதற்கேற்ற ஆதாயம் இராது. தொலைதூரச் செய்திகளால் இல்லத்தில் மகிழ்ச்சி பெருகும். சிலருக்குப் புதுப்புதுப் பதவிகளும் அதனால் வருவாய்ப் பெருக்கமும் ஏற்படும். புத்திர பாக்கியம் ஏற்படும். கௌரவப் பட்டங்கள், பதவிகள் ஆகியவை கிடைக்கும். ஆரோக்கியத்தில் அலட்சியப் போக்குக் கூடாது. கணவன் மனைவி உறவு சுமுகமாக இருக்க, ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து, அனுசரித்துச் செல்வது நல்லது. சிலருக்கு வாகன யோகம் ஏற்படும். விவசாயம் மூலமாக அதிக வருமனாங்கள் ஏற்படும். அரசுப் பணியாளர்களுக்கு அவர்கள் எதிர்பார்த்த பதவி உயர்வுகள் கிடைக்கும்.

## துலாம்

( சித்திரை-3,4 பாதங்கள், சுவாதி – 1,2,3,4 பாதங்கள் மற்றும் விசாகம்-1,2,3 பாதங்கள்)

சித்திரை-3,4 பாதங்கள் –

இந்த வாரம் சிலருக்குப் புத்திர பாக்கியம் ஏற்படும். கௌரவப் பட்டங்கள், பதவிகள் ஆகியவை கிடைக்கும். அரசாங்கத் துறைகளின் மூலமாக எதிர்பார்த்த அனுகூலங்கள் யாவும் வந்து சேரும். வாழ்க்கையில் நல்ல முன்னேற்றங்கள் ஏற்படும். சுற்று வட்டாரத்தில் நல்ல புகழ் உண்டாகும். சிலருக்குக் குழந்தைகளால் தொல்லையும், அவமானங்களும் ஏற்படலாம். இடைவிடாத கடின உழைப்பின் காரணமாக நேரத்துக்கு உணவு அருந்த முடியாது. தந்தைவழி உறவுகளால் அனுகூலம் ஏற்படும். மேடைப் பேச்சாளர்கள் தங்கள் பேச்சின் மூலமாக வருமானம் ஈட்டுவர். போட்டியாளர்களைக் காட்டிலும் அரிய சாதனைகளைப் புரிவீர்கள். சிலருக்கு வீண் அலைச்சல்களும், வெட்டிச் செலவுகளும் தவிர்க்க முடியாததாகும்.

சுவாதி –

இந்த வாரம் அழகிய ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள். தூர தேசங்களில் இருந்து எதிர்பார்த்த நல்ல செய்திகள் வரும். சுபகாரியச் செலவுகள் ஏற்படும். வாடிக்கையாளரிடம் நட்புப் பாராட்டும் வியாபாரிகளுக்கு அதிக இலாபம் கிடைக்கும். அதிகாரிகளின் நட்பால் ஆதாயம் பெறுவீர்கள். நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி பெறும். பிறர் மேல் இரக்கம் ஏற்பட்டுத் தானதருமங்கள் செய்வீர்கள். சுற்றத்தார் மூலமாக பணவுதவிகள் கிடைக்கலாம். புதிய கொள்முதல் மூலமாக தொழிலில் அதிகமான வருவாய்ப் பெருக்கம் ஏற்படும். மேலும், தொழிலில் விஸ்தரிப்பு நடவடிக்கைகள் மூலமாக வருமான வாய்ப்புகள் பெருகும். கோபத்தைக் குறைத்தால் குடும்பத்தில் குழப்பங்களும் குறையும்.

விசாகம்- 1,2,3 பாதங்கள் –

இந்த வாரம் புதுப்புது முயற்சிகளில் ஈடுபட்டு நல்ல வேலையில் சேரும் யோகம் ஏற்படும். வியாபாரப் பயணங்கள் மூலமாக வரவேண்டிய பாக்கிகள் அனைத்தும் வசூல் செய்து விடுவீர்கள். உறவு மற்றும் நண்பர்களின் பூரண ஒத்துழைப்புக் கிடைக்கும். தூர தேசங்களில் இருந்து எதிர்பார்த்த சுபகாரியச் செய்திகள் வருவதோடு செலவுகளும் அதிகரிக்கும். பிள்ளைகள் தங்கள் திறமையால் நற்பெயர் எடுத்துப் பெற்றோருக்கும் பெருமை சேர்ப்பர். உங்கள் தொழில் விஷயமாகத் தீட்டிய முக்கியத் திட்டங்கள் நிறைவேற எடுத்த புதிய நடவடிக்கைகள் வெற்றி பெறும். அதிகாரிகளின் நட்பால் ஆதாயம் பெறுவீர்கள். ஏமாற்றத்தைத் தவிர்க்க கூட்டாளிகளிடம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

## விருச்சிகம்

(விசாகம்- 4, அனுஷம்-1,2,3,4 பாதங்கள் மற்றும் கேட்டை -1,2,3,4 பாதங்கள் )

விசாகம்- 4 ஆம் பாதம் –

இந்த வாரம் சுபகாரியங்களுக்காக வீடே விழாக்கோலம் பூணும். திடீரென ஏற்படும் பயணங்களால் ஆதாயமும், மகிழ்ச்சியும் ஏற்படும். புத்திர பாக்கியம் ஏற்படும். மகான்களின் தரிசனத்தால் மனம் மகிழ்வதோடு, மனதில் அமைதியும் நிலவும். அரசுப் பணியாளர்களுக்கு எதிர்பார்த்தபடி தலைமைப் பதவிகள் தேடி வரும். தங்கள் சேவைகள் அனைவராலும் அங்கீகரிக்கப்படும். இசை ஆர்வத்தால் நல்ல இசை கேட்டு மகிழ்வீர்கள். நீங்கள் எதிர்பாராத விதத்தில் இடமாற்றங்கள் ஏற்படலாம். மேடைப் பேச்சாளர்கள் புகழ் பெறுவர். தெளிந்த நீரோடையில் கல்லெரியக் கலங்கிவிடும் நீரைப்போல், வீண் வாக்கு வாதங்களால் குடும்பத்தில் பிரச்சனைகள் எழலாம். அனாவசியச் செலவுகளைக் குறைப்பது நல்லது.

அனுஷம் –

இந்த வாரம் மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும். வாழ்க்கையில் எதிர்பாராத பொருளாதார முன்னேற்றங்கள், உயர்வுகள் ஏற்படும் தனவரவு அதிகரிப்பால் குடும்பத்தில் மகிழ்ச்சியும் அதிகரிக்கும். எந்தக் காரியத்தையும் திறம்படச் செய்யும் உங்கள் செயல்திறன் கூடும். அதன் காரணமாக உங்கள் பணி இலக்கை அடைவீர்கள். சிலருக்கு மற்றவர்களுக்கு ஆணையிடும் உயர் பதவி கிடைக்கும். தலைவலி போன்ற சிறுசிறு உபாதைகள் ஏற்படலாம். அரசு ஊழியர்களுக்குப் பதவி உயர்வுகள் கிடைக்கும், மாணவர்கள் கல்வித் தடைகளைத் தகர்த்தெரிய கடினமாக உழைக்க வேண்டியதிருக்கும். பணியில் இருக்கும் பெண்கள் அலட்சியப் போக்கைக் கைவிட்டு அர்பணிப்பு உணர்வுடன் பணியாற்ற ஏற்றங்களை எதிர்பார்க்கலாம்.

கேட்டை –

இந்த வாரம் மனைவி மூலம் மட்டற்ற மகிழ்ச்சி நிலவும். வாக்கால் வருமானம் பெருகும். விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். அரசாங்கத்தால் அனுகூலம் உண்டு. விரும்பிய பொருட்களை எல்லாம் வாங்கிக் குவிப்பீர்கள். சுகமும் ஆடை ஆபரண சேர்க்கை, புத்திர பாக்கியம் மற்றும் எதிர்பாராத பணவரவுகள் ஆகியவை ஏற்படும். மாணவர்கள் ஆசிரியர்களின் ஆலோசனைப்படி ஆழ்ந்து படித்தால் அதிக மதிப்பெண்கள் பெறலாம். வியாபாரிகளுக்கு முதலீடுகள் அதிகரித்து இலாபமும் அதிகரிக்கும். உத்தியோகம் மற்றும் தொழிலில் அபிவிருத்தி ஏற்படும். தொழில் வாய்ப்புகள் பிரகாசமாய் இருக்கும். சிலருக்கு வார ஆரம்பத்தில் இடமாற்றங்கள், பயணத்தில் துன்பம், அரசு வகைத் தொல்லை, ஆகியவை ஏற்படும்.

## தனுசு

( மூலம்-1,2,3,4 பாதங்கள், பூராடம்- 1,2,3,4 பாதங்கள் மற்றும் உத்திராடம் –1 பாதம்)

மூலம் –

இந்த வாரம் பணம் சம்பாதிப்பதில் ஆக்கமும், ஊக்கமும் ஏற்படும். பெண்களின் அறிவுத்திறன் கூடும். சிலருக்கு உயர்ரக வாகனங்கள் கிடைக்கும். நல்ல பல கருத்துக்களைக் கேட்பதின் மூலமாக உங்களுக்கு ஞானத்தன்மை அதிகரிக்கும். பக்தி மார்க்கத்தில் செல்ல மனைவியின் பூரண ஒத்துழைப்புக் கிடைக்கும். பணவிஷயங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. சினத்தை அடக்கினால் சிரமங்கள் குறையும். உடன் பிறந்தவர்களோடு அனுசரித்துச் செல்வது நல்லது. அரசாங்கத்திடமும் எதிர்பார்த்த அனுகூலங்கள் அனைத்தும் தாமதமின்றிக் கிடைக்கும். தொழில் சம்பந்தமான முயற்சிகள் வெற்றியடையும். புதிய தொழில் முயற்சிகள் அரசு உதவியுடன் வெற்றி பெரும்.

பூராடம் –

இந்த வாரம் குழந்தை பாக்கியத்துக்கான வழி ஏற்படும். அதிக இலாபம், சந்தோஷம், நல்ல மனிதர்களுடன் தொடர்பு, அரசு அனுகூலம், சொத்துச் சேருதல், அறிவு விருத்தி வெற்றி மற்றும் நல்அதிர்ஷ்டம் ஆகியவையும் ஏற்படும். ஆரோக்கியம் மேம்படும். தனவரவு, கூட்டாளிகள் ஒத்துழைப்பு, எதிர்பாலரால் சந்தோஷம், புகழ், கௌரவம், திருமணம் மற்றும் பெரியவர்கள் ஆசி ஆகியவை ஏற்படும். புதிய கடன்கள் வாங்கிப் பழைய கடன்களை அடைத்துவிடுவீர்கள். புதிய தொழில் தொடங்க எடுக்கப்படும் முயற்சிகள் வெற்றி பெறும் காலம் கனிந்து வரும். அரசுப்பணியில் உள்ளவர்களுக்கு அதிகாரிகளின் அன்பு மற்றும் ஆதரவால் பணி உயர்வு நினைத்தபடி கிடைக்கும்.

உத்திராடம் –1 ஆம் பாதம் –

இந்த வாரம் பொருளாதார நிலைகள் திருப்திகரமாக இருக்கும். எதிர்பாராத இடத்தில் இருந்து வந்த பணவரவால் மனம் மகிழும். பெண்களால் இலாபம், வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறுதல் ஆகியவற்றால் வரும் இன்பம் நிலைத்திருக்கும். புதிய வீடு, பூமி வாங்கக் கூடிய சந்தர்ப்பங்கள் உருவாகலாம். சிலருக்குத் தங்கள் சகோதரரின் நடவடிக்கைகள் எரிச்சலூட்டும். மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்பு இருப்பதால் சமாதானமாகப் போவது சிறப்பு. போட்டி தேர்வுகளில் எதிர்பார்த்த வெற்றி கிட்டும். வாகனங்களில் செல்லும் போது கவனமாகச் செல்லவும். கவர்ச்சிகரமான பொருட்களைப் பரிசாக அறிவித்து வியாபாரிகள் தங்கள் வாடிக்கையாளர்களைக் கவர்ந்து இலாபத்தை அதிகரித்துக் கொள்வர்.

## மகரம்

( உத்திராடம்- 2,3,4-பாதங்கள், திருவோ ணம்-1,2,3,4 மற்றும் அவிட்டம் 1,2 பாதங்கள் )

உத்திராடம்- 2,3,4- பாதங்கள் ---

இந்த வாரம் புதிதாக வேலை தேடுபவர்களுக்கு நல்ல காலம் பிறக்கும். சிலர் நவநாகரீக ஆடைகளை வாங்கி உடுத்தி மகிழ்வதோடு, உறவுகள் வருகையால் உள்ளம் மகிழ்ந்து, உறவுகளுடன் உயர்தர உணவகங்களில் உணவருந்தியும் மகிழ்வீர்கள். சம்பாதிக்கும் திறன் மேம்படும். வாழ்க்கையில் மிகப் பெரிய சாகசங்களைப் புரிவீர்கள். அதிகாரிகளுடன் வீண் சச்சரவுகளை விலக்கினால் பணியில் எதிர்பார்த்த உயர்வுகள் இருக்கும். மிகக் கடினமான வேலைகளையும் தன்னம்பிக்கை காரணமாக சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். அரசு வேலைக்கு மனுச் செய்தவர்களுக்கு அனுகூலமான பதில்கள் வரும். அரசாங்கத் துறைகளின் மூலமாக எதிர்பார்த்த அனுகூலங்கள் யாவும் வந்து சேரும்.

திருவோணம்-

இந்த வாரம் தம்பதிகளிடையே அன்னியோன்யம் அதிகரிக்கும். பெரியோர்களின் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். சிலருக்கு உயர்ரக வாகனங்கள் கிடைக்கும். புண்ணியத்தல தரிசனங்களுக்கான வாய்ப்பு ஏற்படும். பண விஷயத்தைப் பொருத்தவரை திருப்திகரமான வாரமாக இருக்கும். வீட்டில் திருமண வைபவங்களை எதிர்பார்க்கலாம். பிரபலமானவர்களின் ஆறுதலும், நட்பும் கிடைக்கும். புத்தக வெளியீடு போன்ற தொழில்களில் முன்னேற்றம் ஏற்பட்டு, ஆதாயம் அதிகரிக்கும். குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். அண்டை வீட்டார், நண்பர்கள் மற்றும் சகோதரரால் உங்கள் பிரச்சனைகளுக்கு ஒரு முடிவு வரும்.

அவிட்டம் 1,2 பாதங்கள் –

இந்த வாரம் மகான்களின் ஆசியும், புதிய தொடர்புகளால் நன்மைகளும் ஏற்படும். போட்டி, பந்தயங்களில் வெற்றி கிடைக்கும். புத்திர பாக்கியம், சுபகாரிய நிகழ்ச்சிகள் ஆகியவற்றால் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். கல்வியில் தேர்ச்சி ஏற்பட கடின உழைப்புத் தேவை. உறவுகளை அனுசரித்துச் சென்றால் அவர்களின் உதவிகள் கேட்காமலே கிடைக்கும். ஆடம்பரச் செலவுகளைக் குறைத்தால் பொருளாதாரச் சிக்கல்களில் இருந்து மீளலாம். விரிவாக்கங்கள் செய்வதினால் தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்படும். ஆயினும், வேலையில் சிரத்தையும், கடின உழைப்புமே தொழிலில் நல்ல முன்னேற்றங்களைத் தரும். வியாபாரிகளுக்கு வங்கிக் கடன்கள் உடனடியாகக் கிடைக்கும்.

## கும்பம்

(அவிட்டம் – 3,4 பாதங்கள்– சதயம்-1,2,3,4 பாதங்கள்-பூரட்டாதி-1,2,3 பாதங்கள்)

அவிட்டம் – 3,4 பாதங்கள்—

இந்த வாரம் நல்ல உயர்ந்த மனிதர்களின், பண்புமிக்கவர்களின் நட்பு ஏற்படும். திருமணமாகாத பெண்களுக்கு திருமணத்துக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். சிலருக்கு அரசு வகையில் தொல்லைகள் ஏற்படலாம். தொழிலில் பணியாளர்களின் முழு ஒத்துழைப்புக் கிடைக்கும். பொருளாதார நிலையைப் பொறுத்தவரை சிரமமான காலம். அதன் காரணமாக சேமிப்புக்களில் இருக்கும் பணத்தில் கை வைக்கவேண்டிய நிலை ஏற்படும். புதிய தொழில் தொடங்க எடுக்கப்படும் முயற்சிகளில் வெற்றி ஏற்பட்டுத் தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்படும். வியாபாரத்தில் புதிய யுக்திகளைப் புகுத்தி, இலாபம் எனும் வெற்றிக் கனியைப் பறிப்பீர்கள். பழைய பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் நல்ல வருமானத்தை அடைவார்கள்.

சதயம்-

இந்த வாரம் சுகமான சுற்றுலாப் பயணங்களால் மனதில் மகிழ்ச்சி பொங்கும். பிள்ளைகளிடம் நல்ல உயர்வான முன்னேற்றங்களை எதிர்பார்க்கலாம். உதவிகரமான புதிய நண்பர்கள் கிடைப்பர். சிறப்பான ஆடை அணிந்து மிடுக்காக உலாவருவீர்கள். எழுத்துத் தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். தாய் மாமனுக்கும் நன்மை ஏற்படும். சிலருக்குக் கௌரவப் பட்டங்கள் கிடைக்கும். அரசு ஊழியர்களுக்குக் கட்டளைகளை இடும்படியான அதிகாரம் மிக்க உயர்பதவிகள் கிடைக்கும். வாகனங்களில் செல்கையில் எச்சரிக்கை தேவை. வியாபாரிகளுக்கு வியாபாரம் ஏற்ற இறக்கமின்றி ஒரே சீராக இருக்கும். சிலருக்கு உற்பத்தித் திறன் குறையும் வாய்ப்பு ஏற்படலாம். மேலதிகாரிகளின் உதவியால் உயர்பதவிகள் கிடைக்கும்.

பூரட்டாதி-1,2,3 பாதங்கள் –

இந்த வாரம் சுக சௌகரியங்கள் அதிகரிக்கும். சுபசெய்திகளால் மனம் மகிழும். வெளிநாட்டுப் பயணம் மற்றும் வாணிபத்தால் தனலாபம் அதிகரிக்கும். மனைவியின் பணிவிடை மகிழ்ச்சி தரும். மதிப்பு, கௌரவம் உயரும். குடும்பத்தாருக்கு அவர்கள் ஆசைகள் நிறைவேறுவதால் குதுகலமாய் இருப்பர். அனுபவ பூர்வமான அறிவுத்திறன் கூடும், பூமி, வீடு மூலம் இலாபம் ஏற்படும். பெண்களுக்கு ஆன்மிகத்தில் ஈடுபாடும், அதன் காரணமாகக் குடும்ப அமைதியும் ஏற்படும். மனைவியின் பேச்சைக் கேட்டு நடக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். சிலருக்கு வீண் விரயங்கள் ஏற்படலாம் சோம்பேறித்தனம் அதிகரிக்கும். வீண்செலவுகளைக் குறைத்து சேமித்து வைப்பது எதிர்காலத்துக்கு நல்லது.

## மீனம்

( பூரட்டாதி – 4 ஆம் பாதம், உத்திரட்டாதி-1,2.3.4 பாதங்கள் , ரேவதி- 1,2,3,4 பாதங்கள்)

பூரட்டாதி – 4 ஆம் பாதம் –

இந்த வாரம் பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமாகக் கிடைக்கும். நல்ல பண்பாளர்களின் நட்பும், அன்பும் கிடைக்கும். மனதில் தெய்வ பக்தி மேலிடும். மனதில் நினைத்ததை நினைத்தபடியே சாதிக்கும் திறன் அதிகரிக்கும். நல்ஆரோக்கியம் ஏற்படும். அழகான, எழில் நிறைந்த வீடும் கிடைக்கும். தாயின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. சிலருக்கு குடும்ப வாழ்க்கையில் குழப்பம் வரலாம். கடன் கொடுத்தவர்கள் கண்டிப்புடன் நடந்துகொள்வர். தொழிலில் ஏற்படும் இலாபம் மூலமாக பண வருவாய் அதிகரிக்கும். ஆயினும், எல்லா வசதிகளும் இன்பமும் ஏற்படும் என எதிர்பார்க்க முடியாது. ஏதாவது மனக்குறை இருந்து கொண்டே இருக்கும்.

உத்திரட்டாதி-

இந்த வாரம் பல வகையான உயர்ந்த வாகன வசதி அமையும். சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். மனைவி மூலம் கிடைக்கும் எதிர்பாராத தனவரவால் ஏற்றம் காண்பீர்கள். மிகுந்த உற்சாகத்துடன் பக்தி மார்க்கத்தில் ஈடுபடுவீர்கள். கடின உழைப்பால் நீங்கள் பெறும் வெற்றிகளால் அனைவரின் பாராட்டினையும் பெறுவீர்கள். மங்கையரால் மன மகிழ்ச்சியும், அரசாங்கத்தால் இலாபமும் ஏற்படும். சம்பாதித்த பணத்தைப் புதிய முதலீட்டுத் திட்டங்கள் மூலமாக சேமிக்க முற்படுவீர்கள். பணிபுரியும் பெண்களுக்குத் தற்போது இருக்கும் வேலையைக் காட்டிலும் நல்ல வேலைக்குப் போகும் வாய்ப்புகள் அமையும். தந்தைவழி உறவுகளால் தேவையற்ற தொல்லைகள் ஏற்படலாம்.

ரேவதி-

இந்த வாரம் சுபகாரிய நிகழ்வுகளால் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். . பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். விவசாயிகளுக்கு அதிக மகசூல் ஏற்பட்டு, இலாபத்தால் வசதிகள் பெருகும். பணிபுரியும் பெண்கள் தங்கள் உயர்அதிகாரிகளின் ஆதரவால் முன்னேற்றம் காண்பர். தட்டிக் கொடுத்து வேலை வாங்கினால் தங்களுக்குக் கீழ் பணிபுரிபவர்கள் வேலையில் கை கொடுப்பர். அதன் காரணமாக உற்பத்தி பெருகி, இலாபமும் அதிகரிக்கும். வியாபாரத்தில் போட்டிகளைச் சமாளிக்கக் கடினமாக உழைத்தால் மட்டுமே ஆதாயம் கிடைக்கும். சிலருக்குப் பயணங்களில் எதிர்பாராத பிரச்சனைகளும், தடை, தாமதங்கள் ஏற்படலாம். தீயவர்கள் தொடர்பால் சஞ்சலம் ஏற்பட வாய்ப்புண்டு. எனவே, எச்சரிக்கை தேவை.





● கோயம்புத்தூர் மாவட்டம் தொண்டாமுத்தூர் அருள்மிகு மாரியம்மன் மற்றும் பெரிய விநாயகர் திருக்கோவில் திருக்குடமுழுக்கு நன்னீராட்டு பெருவிழாவில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று கலந்து கொண்டு சிறப்பித்தார்.



● அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமியின் 71-வது பிறந்த நாளை முன்னிட்டு மதுரை மாநகர் மாவட்ட 76-வது வட்ட அ.தி.மு.க. செயலாளர் ஸ்வீட்ஸ்டால் சுப்பையா ஏற்பாட்டில் கூடழலகர் பெருமாள் கோவில் அருகே முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. பொதுமக்களுக்கு இனிப்பு மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இதில் நிர்வாகிகள் வில்லாபுரம் ராஜா, எம்.எஸ்.பாண்டியன், ஆர்.அண்ணாத்துரை, பா.குமார், சக்திமோகன், வி.பி.ஆர்.செல்வகுமார், தளபதி மாரியப்பன், எம்.ஏ.நாசர், கோவில் நெடுஞ்செழியன், மார்க்கெட் செந்தில்குமார், கந்தகுமார், கார்னர் பாஸ்கர், பூக்கடை அய்யப்பன், ரமேஷ்குமார், எம்.அய்யப்பன், மாதவதாஸ், ஐ.டி.விங்க் செல்வம், வைகை சிவா கலந்து கொண்டனர்.

# பாகிஸ்தானுடனான போர் நிறுத்தத்திற்கு காலவரையறை இல்லை: இந்திய ராணுவம்

ஸ்ரீநகர், மே 19-

பாகிஸ்தானுடனான போர் நிறுத்த ஒப்பந்தம் தொடர்ந்து அமலில் இருப்பதாகவும், போர்நிறுத்த ஒப்பந்தத்தை தொடர்வதற்கு காலாவதி தேதி இல்லை என்றும் இந்திய ராணுவம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து இந்திய ராணுவம் கூறுகையில், "இன்று (நேற்று) டி.ஜி.எம்.ஓ. அளவிலான பேச்சுவார்த்தை எதுவும் திட்டமிடப்படவில்லை.

மே 12ம் தேதி நடந்த ராணுவ நடவடிக்கைகளுக்கான இயக்குநர் ஜெனரல்கள் சந்திப்பில் ஏற்பட்ட உடன்படிக்கையின் படி, போர்நிறுத்த ஒப்பந்தம் தொடர்கிறது. அதற்கு காலவரையறை இல்லை" என்று தெரிவித்துள்ளது.

நான்கு நாட்கள் நடந்த எல்லை தாண்டிய மோதலைத் தொடர்ந்து, கடந்த வாரத்தில் இந்தியாவும் பாகிஸ்தானும் நிலம், வான், மற்றும் கடல் என அனைத்து வழிநடந்த தாக்குதலையும் உடனடியாக நிறுத்தும் வகையில் போர் நிறுத்தத்துக்கு ஒத்துக்கொண்டது.

இதனைத் தொடர்ந்து மே 12-ம் தேதி, இந்தியா, பாகிஸ்தான் ராணுவ நடவடிக்கைகளுக்கான இயக்குநர் ஜெனரல்கள் சந்தித்து முக்கிய பேச்சுவார்த்தை நடத்தினர்.

அதில் இரண்டு தரப்பும் எந்த ஒரு துப்பாக்கிச்சூடு அல்லது எல்லை தாண்டிய ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் என்ற உறுதிப்பாட்டினைத் தொடர்வது தொடர்பான விஷயம் விவாதிக்கப்பட்டது.

என்றாலும், பின்பு பாகிஸ்தான் தரப்பு உயரதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி, இந்தியா பாகிஸ்தான் இடையேயான போர்நிறுத்த ஒப்பந்தம் மே 18-ம் தேதி நிறைவடைகிறது என்று ப்ளூம்பெர்க் தெரிவித்திருந்தது.

# 8 மாநில முதலமைச்சர்களுக்கு...(1-ம் பக்க தொடர்ச்சி)

(1-ம் பக்க தொடர்ச்சி)

இருப்பதன் மூலமும் கவர்னர் மசோதாக்களை செயலிழக்கச் செய்ய முடியாது.

(iv) ஒரு மசோதா மீண்டும் இயற்றப்பட்டு, இரண்டாவது முறையாக ஒப்புதலுக்கு அனுப்பப்படும்போது கவர்னர் ஒப்புதலை நிறுத்தி வைக்க முடியாது.

(v) பிரிவுகள் 200 மற்றும் 201-ன்கீழ் ஜனாதிபதி மற்றும் கவர்னரின் செயல்பாடுகளுக்கு காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## சீர்குலைக்க முயற்சி....

அரசியலமைப்பின் கீழ் மாநில அரசுகள் தங்களுக்கான கடமைகளையும், பொறுப்புகளையும் நிறைவேற்றுவதில் மத்திய அரசு தேவையற்ற வகையில் தலையிடாமல் இருப்பதை சுப்ரீம் கோர்ட் வழங்கியுள்ள இந்தத் தீர்ப்பு உறுதி செய்யும். நமது அரசியலமைப்பின் பாதுகாவலராக, கூட்டாட்சி அமைப்புடன் கூடிய ஜனநாயகக் குடியரசை அடிப்படையாக கொண்ட நமது சுப்ரீம் கோர்ட், இவ்வழக்கில் அரசியலமைப்பை சரியாக விளக்கியுள்ளது. ஆனால், வெளிப்படையாக பா.ஜ.க. இந்தத் தீர்ப்பை சீர்குலைக்க முயற்சிக்கிறது.

## முன்னுதாரணமாக....

மாநில அரசுக்கு எதிராக பிடிவாதப் போக்கினைக் கடைபிடிக்கும் கவர்னரை எதிர்கொள்ளும்போது, மற்ற மாநிலங்களும் இந்தத் தீர்ப்பினை ஒரு முன்னுதாரணமாகப் பயன்படுத்தலாம். பா.ஜ.க. அரசாங்கம் தனது சூழ்ச்சியின் முதல் அங்கமாக ஜனாதிபதியை சுப்ரீம் கோர்ட்டில் இது தொடர்பாக ஒரு பரிந்துரையைப் பெறுமாறு அறிவுறுத்தியுள்ளது. கவர்னர்களின் விவகாரத்தில் கேள்விக்குரிய பிரச்சினை ஏற்கனவே நீதிமன்றத்தின் அதிகாரப்பூர்வ தீர்ப்பால் முடிவு செய்யப்பட்டிருக்கும் போது, சுப்ரீம் கோர்ட்டின் ஆலோசனை அதிகார வரம்பைப் பயன்படுத்தவோ அல்லது செயல்படுத்தவோ முடியாது என்பது அனைவரும் அறிந்தது.

## போராட்டத்தில் இணைய

ஆனாலும், பா.ஜ.க. அரசு ஒரு பரிந்துரையைப் பெறுவதில் தொடர்ந்து ஈடுபட்டிருப்பது அவர்களின் தீய நோக்கத்தைக் குறிக்கிறது. இந்த முக்கியமான கட்டத்தில், கூட்டாட்சித் தத்துவத்தையும், மாநில சுயாட்சிக் கொள்கையையும் காத்திடும் நோக்கம் கொண்ட, பா.ஜ.க.-வை எதிர்க்கும் மாநில அரசுகள், மாநிலக் கட்சித் தலைவர்கள், அரசியலமைப்பைப் பாதுகாக்கும் இந்தச் சட்டப் போராட்டத்தில் இணையுமாறு நான் ஏற்கெனவே அழைப்பு விடுத்துள்ளேன்.

## உடனடி தலையீட்டை

சுப்ரீம் கோர்ட்டிடம் கேள்விகள் கேட்டு ஜனாதிபதி அனுப்பியுள்ள குறிப்பினை நாம் ஒன்றுபட்டு எதிர்க்க வேண்டும். மேலும், நீதிமன்றத்தின் முன் நாம் அனைவரும் ஒருங்கிணைந்த சட்ட உத்தியை உருவாக்கி, நமது சுப்ரீம் கோர்ட் தனது வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பில் உறுதி செய்தபடி, அரசியல் அடிப்படைக் கட்டமைப்பைப் பாதுகாக்க வழிவகுத்திட வேண்டும். இந்த முக்கியமான பிரச்சினையில் மேற்குறிப்பிட்டுள்ள மாநில முதல்வர்களின் உடனடியான தனிப்பட்ட தலையீட்டை எதிர்நோக்குகிறேன்.

இவ்வாறு முதல்வர் தனது கடிதத்தில் கோரியுள்ளார்.

# வார விடுமுறை: திருச்செந்தூரில் அலைமோதிய பக்தர்கள் கூட்டம்

திருச்செந்தூர், மே 19-

விடுமுறை தினமான நேற்று திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் பக்தர்கள் கூட்டம் அதிகரித்து காணப்பட்டது.

முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடாக திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில் விளங்கி வருகிறது. மேலும் சூரனை வதம் செய்த இடமாகவும், குரு ஸ்தலமாகவும் விளங்கி வருகிறது.

இந்த நிலையில், கோடை விடுமுறை மற்றும் வார விடுமுறை தினமான நேற்று மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் திரளான பக்தர்கள் கோவிலுக்கு வருகை தந்துள்ளனர்.

அவர்கள் அதிகாலை முதலே கடல் மற்றும் நாழிக் கிணறு தீர்த்தத்தில் புனித நீராடினர்.

இதைத்தொடர்ந்து பொது தரிசன வரிசையில் நீண்ட நேரம் காத்திருந்து பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்தனர்.

ஏராளமான பக்தர்கள் வருகை தந்துள்ளதால், கோவில் வளாகம், கடற்கரைப் பகுதி, நாழி கிணறு, முக்கிய சாலைகள் முழுவதும் பக்தர்களால் நிறைந்து காணப்படுகிறது.

பக்தர்களின் கூட்டம் அதிகரித்து காணப்படும் நிலையில், கோவில் நிர்வாகம் சார்பில் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும், போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

# ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து குறைவு

தர்மபுரி, மே 19-

தமிழக-கர்நாடகா காவிரி கரையோரங்களில் பெய்த மழையின் காரணமாக ஒகேனக்கல்லுக்கு நீர் வரத்து குறைவதும் அதிகரிப்பதுமாக இருந்து வருகிறது. மேலும் கர்நாடகா காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளிலும், தமிழக எல்லையோர காவிரி ஆற்று பகுதிகளிலும் பெய்த மழையால் கடந்த சில நாட்களாக நீர்வரத்து அதிகரித்தது.

இருப்பினும் தற்போது தமிழக கர்நாடக எல்லை பகுதியான பிலிகுண்டுலுவில் நீர்வரத்து குறைந்துள்ளது. இதனால் மெயின் அருவி, ஐந்தருவி, சினிபால்ஸ் உள்ளிட்ட அருவிகளில் தண்ணீரின் வேகம் குறைந்தது. கடந்த இரு தினங்களுக்கு முன்னர் ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து 6 ஆயிரம் கன அடியாக இருந்தது.

இந்த நிலையில் தமிழக காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை அளவு குறைந்து வருவதன் காரணமாக ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து குறைந்துள்ளது. ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து 6 ஆயிரம் கன அடியில் இருந்து 5 ஆயிரம் கன அடியாக தற்போது குறைந்துள்ளது.

### பாராளுமன்றத்தில் சிறந்த பங்களிப்பு:

# 17 எம்.பி.க்களுக்கு விருது



சி.என்.அண்ணாதுரை (தி.மு.க.)

புதுடில்லி, மே 19-

பாராளுமன்றத்தில் சிறந்த பங்களிப்புக்காக 17 எம்.பி.க்களுக்கு சன்சத் ரத்னா விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் சிறந்த பங்களிப்பு அளித்தவர்களைச் சிறப்பிக்கும்வகையில், அவர்களுக்கு பிரைம் பாயிண்ட் அறக்கட்டளையால் சன்சத் ரத்னா விருது வழங்கப்படுகிறது.

இந்த நிலையில், சிறந்த பங்காற்றியவர்களை பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான தேசிய ஆணையத்தின் தலைவர் ஹன்ஸ்ராஜ் அஹிர் தலைமையிலான நடுவர் குழு அறிவித்துள்ளது.

பாராளுமன்றத்தின் 16 மற்றும் 17-வது மக்களவையில் சிறந்த பங்காற்றியதற்காக பருத்ஹரி மஹ்தாப் (பிஜு ஜனதா தளம்), சுப்ரியா சுலே (தேசியவாத காங்கிரஸ் - சரத் பவார்), என்.கே.பிரேமச்சந்திரன் (சமூகப் புரட்சிக் கட்சி), ஸ்ரீரங் அப்பா பர்னே (சிவசேனை) ஆகியோர் விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

ஸ்மிதா வாக் (பா.ஜ.க.), அரவிந்த் சாவந்த் (சிவசேனை - உத்தவ் தாக்கரே), நரேஷ் கண்பத் மாஸ்கே (சிவசேனை), வர்ஷா கெய்க்வாட் (காங்கிரஸ்), மேதா குல்கர்னி (பா.ஜ.க.), பிரவீன் படேல் (பா.ஜ.க.), ரவி கிஷன் (பா.ஜ.க.), நிஷிகாந்த் துபே (பா.ஜ.க.), பித்யூத் பரன் மஹாதோ (பா.ஜ.க.), பி.பி. சௌத்ரி (பா.ஜ.க.), மதன் ராத்தோர் (பா.ஜ.க.), சி.என்.அண்ணாதுரை (தி.மு.க.), திலீப் சைக்கியா (பா.ஜ.க.) ஆகியோருக்கும் விருது வழங்கப்படவுள்ளது.

மேலும், இரு நிரந்தரக் குழுக்களான நிதி மற்றும் விவசாயத் துறைகளுக்கும் சிறந்த செயல்திறனுக்காக விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

# பாக்.குடனான 4 நாள் சண்டையில் 15 ஆயிரம் கோடி ரூபாய் செலவு

புதுடெல்லி, மே 19-

பாகிஸ்தானுடனான 4 நாள் சண்டையில் ரூ.15 ஆயிரம் கோடி செலவு ஏற்பட்டுள்ளது.

காஷ்மீரின் பஹல்காமில் பாகிஸ்தான் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 பேர் உயிரிழந்தனர். இதற்கு 'ஆபரேஷன் சிந்தூர்' என்ற பெயரில் இந்தியா பதிலடி கொடுத்து 9 பயங்கரவாத முகாம்களை அழித்தது. இந்தியா-பாகிஸ்தான் இடையே 4 நாட்கள் சண்டை நடந்தது. தற்போது போர் நிறுத்தம் அமலில் உள்ளது.

பாகிஸ்தானுடனான 4 நாள் சண்டையில் ரூ.15 ஆயிரம் கோடி செலவு ஏற்பட்டுள்ளது.

கடந்த 7-9 தேதிகளில் நடந்த தாக்குதல்கள், அதையொட்டி மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மட்டும் தினமும் ரூ.1460 கோடி முதல் ரூ.5000 கோடி வரை செலவானது. அந்த வகையில் 4 நாள் செலவு ரூ. 15,000 கோடி வரை ஆனதாக பாதுகாப்புத் துறை மதிப்பிட்டுள்ளது. கப்பலில் இருந்து தரைப் பகுதியில் இலக்கைத் தாக்கக்கூடிய இந்திய தயாரிப்பு பிரமோஸ் ஏவுகணை பயன்படுத்தப்பட்ட செலவினமும் இதில் அடங்கும்.

எல்-70 ரக விமான எதிர்ப்பு சிறிய வகை நவீன பீரங்கி, இசட்யு 23 எம்எம் பீரங்கிகள், எஸ்-400 அம்சங்களைக் கொண்ட 'சில்கா' ரக வான் பாதுகாப்பு சாதனங்கள் போன்றவற்றை பாகிஸ்தானுக்கு எதிராக பயன்படுத்தியதாக இந்திய பாதுகாப்புப் படை உயரதிகாரிகள் தெரிவித்தனர்.

சண்டையில் தலா ரூ. 50 ஆயிரம் மதிப்புள்ள ரஷிய தயாரிப்பு வெடிமருந்து டிரோன்களும் (காமிகேஸ்) நூற்றுக்கணக்கில் பயன் படுத்தப்பட்டுள்ளன. இவை தவிர போர் விமானங்களை இயக்கும் செலவு, தளவாடங்கள், துருப்புக்களின் நடமாட்டம், மீட்பு நடவடிக்கைகள், போர் மற்றும் பாதுகாப்பு ஒத்திகை செலவு என கணக்கிட்டால் நிதிச்செலவினம் கடுமையாக இருக்கும் என வல்லுநர்கள் மதிப்பிடுகின்றனர்.

# பால், மீன்வள செயல்பாட்டில் முன்னணி மாநிலம் தமிழ்நாடு: அரசு பெருமிதம்

சென்னை, மே 19-

அ.தி.மு.க.வின் 10 ஆண்டு கால ஆட்சியில் சராசரியாக 1.36 சதவீதமாக இருந்த வேளாண் வளர்ச்சி, திராவிட மாடல் ஆட்சி பொறுப்பேற்ற பின் 5.66 சதவீதமாக உயர்ந்து சாதனை படைத்துள்ளது என்று தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சிப் பொறுப்பேற்ற முதலாண்டிலேயே திராவிட மாடல் அரசு வேளாண்மைக்குத் தனி முக்கியத்துவம் அளிக்கும் வகையில் தமிழ்நாடு அரசின் வரலாற்றில் முதல் முறையாக வேளாண்மைத் துறைக்குத் தனி நிதிநிலை அறிக்கையைச் சட்டப்பேரவையில் அளித்திடச் செய்தார்.

தொடர்ந்து 5 வேளாண் நிதிநிலை அறிக்கைகள் அளிக்கப்பட்டு மொத்தம் 1,94076 கோடி நிதி ஒதுக்கீட்டில் வேளாண் உற்பத்தி பெருக - உழவர் பெருங்குடி மக்கள் நலம்பெறப் புதிய பல திட்டங்களை அறிமுகப்படுத்திச் செயல்படுத்தி வருகிறார்.

முதல்வரின் முன்னெடுப்புகளால் முந்தைய ஆட்சிக்காலத்தில் 10 ஆண்டுகளில் 2012-2013 முதல் 2020-2021 வரை சராசரியாக 1.36 சதவீதமாக இருந்த வேளாண் வளர்ச்சி, 2021 முதல் 2024 வரை சராசரியாக 5.66 சதவீதமாக உயர்ந்து சாதனை படைத்தது.

• 2020-2021-இல் இருந்த பாசனம் பெற்ற நிலப்பரப்பு 36.07 இலட்சம் எக்டர் என்பது, 2023- 2024-இல் 38.33 இலட்சம் எக்டர் என அதிகரித்து உணவுப்பொருள் உற்பத்தியில் சாதனைகள் நிகழ்ந்தன.

• 5,427 கி.மீ. நீளத்திற்கு சி,டி பிரிவு வாய்க்கால்கள் தூர்வாரப்பட்டு 2 இலட்சத்து 10 ஆயிரம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர். மேலும் 8,540 சிறுபாசனக் குளங்கள் தூர்வாரப்பட்டு, 2,382 புதிய பண்ணைக் குட்டைகளும், 2,474 ஆழ்துளை/குழாய்க் கிணறுகளும் ஏற்படுத்தப்பட்டன.

• 1,652 புதிய வேளாண் இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு இ-வாடகை சேவை மையங்கள் மூலம் 69,000 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

• ஆட்சிப் பொறுப்பேற்ற பின் 27 மாவட்டங்களில் 917 ஏரிகள் ரூ1212 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டன.

• சிறுசிறு விவசாயிகளும் பயன்பெற்று வேளாண் உற்பத்திகளைப் பெருக்கிட 814 சிறுபாசன ஏரிகள் ரூ75.59 கோடி செலவில் சீரமைக்கப்பட்டு விவசாய வளர்ச்சிக்கு உதவிகள் செய்யப்பட்டுள்ளன.

• 2018-19-இல் 8,362 மெட்ரிக் டன் பால் உற்பத்தி செய்யப்பட்டிருந்த நிலையில், திராவிட மாடல் ஆட்சியின் திட்டங்களால் 2023-2024-ஆம் ஆண்டில் பால் உற்பத்தி, 10,808 மெட்ரிக் டன் என அதிகரித்துச் சாதனை படைத்துள்ளது.

இப்படி, தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின், வேளாண்மை, கால்நடைகள் வளர்ப்பு, மீனவர் நலன் என ஒவ்வொரு துறையையும், தாய் தன் குழந்தைகளைப் பேணி வருவதைப்போல் வளர்த்துள்ளதால், தமிழ்நாடு அனைத்துத் துறைகளிலும் சிறந்து ஒட்டுமொத்தமான வளர்ச்சியில் இந்தியாவில் தமிழ்நாடு சிறந்த மாநிலம் எனும் பாராட்டுகளையும் புகழையும் குவித்து வருகிறது. என்றும், எதிலும் தமிழ்நாடு முதலிடமே எனும் முழக்கம் எங்கும் எதிரொலிக்கிறது!

இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### சிவகிரி இரட்டைக்கொலை:

# 3 பேரை பிடித்து போலீசார் விசாரணை

ஈரோடு, மே 19-

சிவகிரி இரட்டைக் கொலை சம்பவத்தில் 3 நபர்களை போலீசார் பிடித்து ரகசிய இடத்தில் விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஈரோடு மாவட்டம் சிவகிரி அடுத்த மேகரையான் தோட்டம் பகுதியில் தனியாக வசித்து வந்த ராமசாமி, பாக்கியம்மாள் தம்பதி மர்ம கும்பலால் நகைக்காக படுகொலை செய்யப்பட்டனர். மேற்கு மண்டல ஐ.ஜி.செந்தில்குமார், டி.ஐ.ஜி சசிமோகன் ஆகியோர் மேற்பார்வையில் ஈரோடு மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சுஜாதா தலைமையில் 12-க்கும் மேற்பட்ட தனிப்படைகள் அமைக்கப்பட்டு கொலையாளிகளை பிடிக்கும் பணி தீவிரப்படுத்தப் பட்டுள்ளது.

சிவகிரி, பெருந்துறை, சென்னிமலை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் கடந்த சில நாட்களாக 200-க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். சிறப்பு குழுக்கள் சி.சி.டி.வி கேமரா பதிவுகள், செல்போன் தொடர்பு பதிவுகள், தோட்டங்களில் வேலை செய்யும் உள்ளூர் மற்றும் வெளியூரை சேர்ந்த கூலி ஆட்களிடம் விசாரணை நடத்தியுள்ளனர்.

இதற்கிடையே கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை வரும் 20ம் தேதிக்குள் கைது செய்யாவிட்டால் பா.ஜ.க. சார்பில் காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறும் என்றும், அதில் முன்னாள் தலைவர் அண்ணாமலை பங்கேற்பார் என்றும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டு இருந்தது. இதற்கான பணிகளில் கட்சியினர் ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில் இந்த கொலை வழக்கில் திடீர் திருப்பமாக 3 நபர்களை போலீசார் பிடித்து ரகசிய இடத்தில் விசாரணை நடத்தி வருகின்றனர். அதில் சில பரபரப்பான தகவல்கள் கிடைத்துள்ளன.

இதுகுறித்து போலீசார் கூறும்போது, சிவகிரி தம்பதி கொலை வழக்கில் போலீசார் இரவு பகல் பாராமல் குற்றவாளிகளை பிடிக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வந்தனர்.

நூற்றுக்கும் மேற்பட்ட சி.சி.டி.வி. கேமராக்களை ஆய்வு செய்ததில் 3 நபர்களை பிடித்து விசாரணை நடத்தி வருகிறோம்.

இந்தக் கொலை வழக்கில் மேலும் சிலருக்கு தொடர்பு இருப்பது தெரிய வந்துள்ளது. அவர்கள் குறித்தும் விசாரணை நடைபெற்று வருகிறது. விசாரணை முடிவில் தான் முழு தகவலும் தெரிய வரும் என்றனர்.

மேலும் பிடிபட்ட 3 பேரிடம் பல்லடத்தில் நடைபெற்ற கொலை, கொள்ளையிலும் தொடர்பு உள்ளதா என்ற ரீதியில் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். இதனால் இந்த கொலை வழக்கு மேலும் சூடுபிடிக்க தொடங்கியுள்ளது.